# புதிய ஜனநாயகம்

1-15 ஜூலை '93

ரூ. 3.00




## "அய்யோ சதி!"
## ஊழல் பிரதமரின் ஒப்பாரி

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



## கருவறை நுழைவுப் போராட்டம்

# இந்து முன்னணி காலித்தனம் பார்ப்பன அரசின் விசுவாசம்

மே-24 ந்தேதி ம.க.இ.க. வினர் கருவறைக்குள் பதாகை-படங்களை பிடித்து முழக்கமிடும் காட்சி

"அய்யோ சூத்திரன் உள்ளே நுழைஞ்சுட்டாண்டா; நமக்கு அனர்த்தம் வந்துடுத்துடா, நாசகாலம் வந்துடுத்துடா" - மக்கள் கலை இலக்கியக் கழகத்தினர் அம்பேத்கார், பெரியார் படங்களுடன் 31 பேர் - பெண்கள் குழந்தைகளுடன் சிறீரங்கம் கோயில் கருவறைக்குள் மே 24-ந்தேதி அர்ச்சகர்களின் தாக்குதலை மீறி நுழைந்ததும் பார்ப்பனர்கள் அலறிய அலறல் இது. இந்து முன்னணிப் பார்ப்பனர்கள் நடந்த சம்பவத்தை மறைத்து தமக்கு வசதியாக திரித்து பத்திரிக்கைகளுக்கு செய்தி தரவே கீழ்கண்டவாறு பத்திரிக்கைகள் அதை அப்படியே வாந்தியெடுத்து தமது பார்ப்பனீய விசுவாசத்தைக் காட்டின; "அர்ச்சகர்களைத் தாக்கிவிட்டு கருவறைக்குள் 31 பேர் நுழைந்தனர்". "சாமி சிலையின் துணியை உருவினர்". "பூசை பொருட்களை சேதப்படுத்தினர்". "ரத்த களறி ஏற்படுத்துவோம் என்று கோஷமிட்டனர்". "கோபம் கொண்ட (வடநாட்டு) பக்தர்கள் அவர்களைத் தாக்கி, வளைத்துப் பிடித்து போலீசிடம் ஒப்படைத்தனர்". ஆனால் முழு உண்மையோ வேறு.

ம.க.இ.க.வினர் பக்தர்களாக சிறப்புக் கட்டண வழிபாட்டு வரிசையிலே சென்று கருவறைக்குள் நுழைய முயன்ற போது அங்கிருந்த அர்ச்சகர்கள் தடுத்து தாக்கினர். இதை மீறி உள்ளே நுழைந்து புகைப்படம் எடுத்துக் கொண்டு வெளியே வந்து முழக்கமிட்டுக் கொண்டு நின்ற ம.க.இ.க.வினர் மீது பார்ப்பனர்கள் கொலை வெறித் தாக்குதல் தொடுத்தனர். இந்து முன்னணிக் காலிகள் கும்பலாக கோயிலுக்குள் நுழைந்து கதவை தாழிட்டு அங்கு ஒரு அறையில் பதுக்கி வைத்திருந்த கம்பு, இரும்பு தடிகளை எடுத்து தாக்கினர். பக்தர்கள் உட்பட ம.க.இ.க.-வைச் சேர்ந்த பலருக்கு பலத்த அடி விழுந்தது; முத்து, முகிலன், சரவணன் ஆகியோருக்கு மண்டை உடைந்தது. ம.க.இ.க.வினர் திருப்பித் தாக்காமல் தற்காப்பு முறையில் போராடியதில் எதிர் தரப்பினருக்கு மூவருக்கு சிறு காயங்களே ஏற்பட்டன. ம.க.இ.க.வினரை ஆத்திரம் கொண்ட பார்ப்பன காலிகள் - அர்ச்சகர்கள், சாதிப் பெயரைச் சொல்லி எழுத முடியாத வார்த்தைகளால் திட்டினர். போலீசுக்கு தகவல் தராமலும் ரத்தக் காயமடைந்தவர்கள் சிகிச்சைப் பெற முடியாத வண்ணமும் நேரத்தை நீட்டித்து பார்ப்பன வெறியர்கள் திட்டமிட்டு தாக்குதல் தொடுத்ததை பொறுக்க முடியாத பக்தர்கள் எதிர்ப்பு கிளப்பினர். பின்னரே பார்ப்பனக் கும்பல் தகவல் கொடுக்க போலீசு வந்து பக்தர்களை பாதுகாப்பாக வெளியே அனுப்பி வைத்து; ம.க.இ.க.வினர் 31 பேரை கைது செய்தது.

கருவறைக்குள் "சூத்திரர்களும் பஞ்சமர்களும்" நுழைந்துவிட்டதால் தீட்டுப் பட்டு விட்டதாகக் கூறி ஆகம விதிப்படி "சம்புரோஷணம்" செய்தார்கள் பார்ப்பனர்கள். அதாவது கோயிலை கழுவி, சடங்கு நடத்தி தீட்டுக் கழித்துள்ளனர். இது அரசு உயர் அதிகாரிகள் முன்னிலையில் நடந்தேறியது. தீண்டாமைச் சட்டபடி இவர்கள் உள்ளே தள்ளப்பட்டிருக்க வேண்டும். ஆனால், சாதிய அவமானத்திற்கு எதிராகப் போராடிய ம.க.இ.க.வினர் மீது கொலை வழக்கு போட்டு சிறையிலடைத்தார்கள்.

கருவறையில் நுழைந்ததைக் கண்டித்தவர்கள், பாரதிய ஜனதா, பிராமணர் சங்கம், இந்து முன்னணி ஆகிய பார்ப்பனக் கும்பலைத் தவிர ஒருவருமில்லை. இக்கும்பல் தூண்டிவிட்டு பிரச்சினை கிளப்பிய பின்னர் அ.தி.மு.க. அமைச்சர்கள் தலையை நுழைந்து பார்ப்பன கும்பலுக்கு சேவை செய்தனர். அமைச்சர்கள் கு.ப.கிருஷ்ணன் மற்றும் நடேசன் பால்ராஜ் ஆகியோர் பார்ப்பனத் தலைவிக்கு விசுவாசங்காட்டி - இப்போராட்டதைக் கண்டித்து அம்பலப்பட்டுப் போனார்கள். காயம்பட்ட (?) பார்ப்பனர்களுக்கு 5.000 ரூபாய் வழங்கியும், இனி இதுபோன்ற சம்பவம் நிகழாத வண்ணம் கருவறைக்கு கம்பி வேலி போட்டும், கோயிலுக்குள் தனி போலீசு நிலையம் அமைத்தும் விசுவாசம் காட்டினர். இந்து முன்னணிக் கும்பல் நடத்திய கண்டன ஊர்வலம், உண்ணாவிரதம் கூட பார்ப்பனர்களின் ஆதரவும் கூட இல்லாமல் சுருங்கிப் போய் பிசுபிசுத்து போனது.

ஆனால் போராட்டத்தை ஆதரித்து பார்ப்பனர் அல்லாதோரிடமிருந்து ஏகோபித்த வரவேற்பு கிடைத்தது. திருச்சியில் சில இடங்களில் பட்டாசு வெடித்து, இனிப்பு வழங்கி பார்ப்பன எதிர்ப்புணர்வு கொண்டோர் மகிழ்ந்துள்ளனர். மண்டை உடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற தோழர்களை தி.க., தி.மு.க. அணிகள் பலர் வந்து சந்தித்து தமது உணர்ச்சிகளைக் கொட்டி வாழ்த்துக்களையும் ஆறுதலையும் தெரிவித்தனர். கொலைவெறி தாக்குதல் தொடுத்த பார்ப்பன வெறியர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரியும், பொய் வழக்கை திரும்பப் பெறக்கோரியும் ம.க.இ.க.வினர் நடத்திய ஆர்ப்பாட்டத்திற்கு மக்கள் பலர் தாமாக வந்து கலந்து கொண்டனர். முகம் தெரியாத பலர் நேரிலும் கடிதம் மூலமும் தமது ஆதரவை தெரிவித்து வருகிறார்கள். இவையெல்லாம் 2000 ஆண்டு காலமாக நிலவும் பார்ப்பனீய ஒடுக்குமுறைக்கு எதிரான மக்களின் உணர்வலைகள்!

இந்தியாவிலேயே முதன்முறையாக தாழ்த்தப்பட்டவர்கள் கோயிலுக்குள் நுழைந்தது மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில்; முதன்முறையாக கருவறைக்குள் நுழைந்தது திருச்சி சிறீரங்கம் என்ற வகையில் ம.க.இ.க.வினரின் போராட்டம் வரலாற்றின் பக்கங்களில் பொறிக்கப்பட்டுள்ளது. கடந்த மார்ச், ஏப்ரல் மாதங்களில் தமிழகம் தழுவிய முறையில் பிரச்சாரம் செய்து மே 1-ந்தேதி போராட்டத்தை அறிவித்து திருச்சியில் ஆயிரக்கணக்கில் கூடினர். ஆனால் போலீசால் அடாவடித்தனமாக அனுமதி மறுக்கப்பட்டு தடையை மீறி போராடியவர்கள் 700 பேரை கைது செய்து சிறையிலடைத்து ஒடுக்கியது தமிழக அரசு. எனவே வேறு வழியின்றி அறிவிக்காமல் திடீரென்று கருவறைக்குள் நுழைந்துள்ளனர். பார்ப்பனீய-சாதிய வர்ணாசிரம ஒடுக்குமுறைக்கு எதிரான உணர்வை, உரிமைக்கான போராட்டங்களை கட்டிப் போட முடியாது என்பது புலனாகிவிட்டது.

மக்கள் கலை இலக்கியக் கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி, புரட்சிகர-மாணவர்கள் இளைஞர் முன்னணி ஆகிய அமைப்புகள் ஏற்கனவே அறிவித்தபடி பார்ப்பனர்கள், ஆர்.எஸ்.எஸ். கும்பல் பதைபதைத்து எதிர்த்து தனிமைப்பட்டு போயுள்ளது. தமிழக அரசும், இந்திய அரசியல் சட்டமும் பார்ப்பனீயத்திற்கு சேவை செய்து தமது சாயத்தை வெளுத்துக் கொண்டுவிட்டது. போராட்டம் வெற்றியடைந்திருந்தாலும் பார்ப்பன-இந்து வெறிக் கும்பல் முடங்கி முடமாகும்வரை எமது பயணத்தை தொடர்வோம் என்று ம.க.இ.க.வினர் அறிவித்துள்ளனர். தொடர்ந்து போராட்டத்தின் வெற்றியை விளக்கியும், பார்ப்பன ஆதிக்கத்திற்கு எதிரான போராட்டத்திற்கு தமிழகம் பிற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக திகழுவதற்கு மக்கள் திரள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியும் பிரச்சாரம் செய்து வருகிறார்கள். ●

படிப்பகம்

www.padippakam.com

புதிய
ஜனநாயகம்

மார்க்சிய — லெனினிய
அரசியல் ஏடு

எட்டாம் ஆண்டு

**15-16**

1 - 15 ஜூலை '93

உள்நாடு:
தனி இதழ்: ரூ.3.00
ஆண்டு சந்தா: ரூ.72.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 16

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
இரா.சண்முகராஜ்,
ஆசிரியர், புதிய ஜனநாயகம்,
4, சாமியார் தோட்டம்,
ஆலந்தூர் சாலை,
சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.

# இந்து பாசிசத்துக்கு 'நீதி'த் துறை அங்கீகாரம்

**ரா**ஷ்ட்ரீய சுவயம் சேவக் சங் (ஆர்.எஸ்.எஸ்.) மற்றும் பஜ்ரங்தள் ஆகிய இரு இந்து மதவெறி பாசிச அமைப்புகள் மீதான மத்திய அரசின் தடை உத்திரவு செல்லாது என ரத்து செய்தும், விசுவ இந்து பரிஷத் (வி.எச்.பி.) என்கிற மற்றுமொரு இந்து மதவெறி பாசிச அமைப்பின் மீதும் இசுலாமிய சுவயம் சேவக் சங் (ஐ.எஸ்.எஸ்.) என்கிற முஸ்லீம் வகுப்புவாத அமைப்பின் மீதும் விதிக்கப்பட்ட தடை உத்திரவு செல்லுபடியாகும் என்றும் நடுவர் மன்றங்களின் தீர்ப்புகள் வந்துள்ளன. ஏற்கனவே ஆவேசத் தாக்குதல் முனைப்போடு இயங்கி வரும் இந்து மதவெறி பாசிஸ்டுகளுக்கு இத்தீர்ப்புகள் புதுரத்தம் பாய்ச்சுவதாக இருப்பதோடு இரண்டு பச்சையான உண்மைகளை மீண்டும் வெளிச்சம் போட்டுக் காட்டிவிட்டன. ஒன்று, பாரதீய ஜனதா தவிர இந்து மதவெறி பாசிசத்தின் இன்னுமொரு வகுப்புவாத அரசியல் மையமாக காங்கிரசுக் கட்சி விளங்குகிறது; காங்கிரசின் ஊக்கமான, கள்ளத்தனமான ஒத்துழைப்பின்றி இந்து மதவெறி பாசிசம் இவ்வளவு பெரிய சக்தியாக வளர்ந்திருக்க முடியாது. இரண்டு, இந்த நாட்டின் நீதித்துறை உட்பட அரசு அமைப்பு முழுவதும் அதாவது நீதி நிர்வாகம் எல்லாம் மதச்சார்பற்றதோ, நடுநிலையானதோ கிடையாது; இந்து மதவெறி பாசிசத்தின் கைக்கருவியாகவே அது செயல்பட்டு வருகிறது.

''அயோத்தி மசூதி இடிப்புச் சம்பவம் முன்கூட்டியே திட்டமிட்டு நடத்தியது அல்ல; ராம பக்தர்களான கரசேவர்களால் தன்னெழுச்சியாக, எதிர்பாராத வகையில் நடந்துவிட்டது'' என்கிற இந்து மதவெறி பாசிஸ்டுகளின் வாதத்தை பஹ்ரி அப்படியே ஏற்றுக் கொண்டுள்ளார். மசூதி இடிப்புக்கும் மதவெறிப் படுகொலைகளுக்கும் சமூக - மதத் தலைமையாக விசுவ இந்து பரிஷத்தும் அரசியல் தலைமையாக பாரதீய ஜனதாவும், நாசவேலைப் படைகளாக பஜ்ரங்தள் - சிவசேனாவும், இவற்றின் சூத்திரதாரியாக ஆர்.எஸ்.எஸ்.ஸும் இருந்தன என்பது உலகமறிந்த இரகசியம். ஆனால் இவற்றுக்கும் ஆர்.எஸ்.எஸ்., பஜ்ரங்தள் ஆகிய அமைப்புகளுக்கும் தொடர்பு இல்லை என்று பஹ்ரி தீர்ப்பளித்துள்ளார். ''ராமன் இந்த நாட்டு அரசியல் சட்டத்தின் ஒரு அங்கம், தேசிய சின்னம், தேசியப் பண்பாடு, நாகரிகத்தின் வடிவம் என நாட்டுத் தலைவர்களாலும் மக்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட அவதாரம்'' என்று புதுவியாக்கியானம் செய்து; அயோத்தி மசூதியை இடித்து அங்கே திடீரென்று வைக்கப்பட்ட ராமனை தரிசிக்கும் அனுமதி வழங்கியது அலகாபாத் உயர்நீதிமன்றம். அதைப்போலவே இந்து மதவெறி பாசிச சாக்கடையில் மூழ்கி எழுந்து எழுதப்பட்டதுதான் பஹ்ரியின் தீர்ப்பும்.

தடை உத்திரவு மீதான வழக்கை விசாரித்த பஹ்ரி நடுவர் மன்றம் ஒரே ஒரு அம்சத்தில் மட்டுமே இந்து மதவெறி பாசிஸ்டுகளுக்கு எதிராகக் கருத்துத் தெரிவித்துள்ளது. விசுவ இந்து பரிஷத் தலைவர்களின் ஆவேசப் பிரச்சாரங்களும், முழக்கங்களுமே வகுப்புக்கலவரங்களைத் தூண்டக் காரணமாக இருந்தன என்று பஹ்ரி ஒப்புக் கொள்கிறார். இதுவும் கூட இந்து மதவெறி பாசிசத்தின் கள்ளக் கூட்டாளியான நரசிம்மராவுக்கு எதிராகத் தீர்ப்பு போய்விடக்கூடாது என்பதற்காகக் கொடுத்ததாகும்.

இதேபோன்ற தடை நீக்க உத்திரவை அலகாபாத் உயர்நீதி மன்றம் உட்பட சில கீழ்நிலை வழக்கு மன்றங்கள் விதித்துள்ளன; பாரதீய ஜனதாவின் மத்தியப் பிரதேச அரசாங்கத்தைக் கலைத்ததும் செல்லாதென ஜபல்பூர் உயர் நீதிமன்றப் பிரிவு தீர்ப்பளித்துள்ளது. 1949-இல் அயோத்தி மசூதிக்குள் கள்ளத்தனமாக ராமன் சிலையை வைத்ததில் இருந்து அயோத்தி மசூதி இடிப்பையும் சேர்ந்து பல்வேறு வழக்குகளில் உச்சநீதி மன்றம் உட்பட அனைத்து மட்டங்களிலும் நீதித்துறை இந்து மதவெறி பாசிசத்துக்கு உடந்தையாக, சாதகமாக தீர்ப்புகள் வழங்கியுள்ளன. இவற்றின் மூலம் இந்து மதவெறி பாசிச அமைப்புகள் மற்றும் நடவடிக்கைகளுக்கு நீதி - சட்டபூர்வ அங்கீகாரம் அளித்து நியாயப்படுத்தியுள்ளன. நாடு முழுவதும் பல ஆண்டுகளாக இந்து மதவெறி பாசிஸ்டுகள் திட்டமிட்டு நடத்தும் மதக் கலவரங்களுக்குத் துணை நிற்பதோடு, போலீசு துணை ராணுவம் - ராணுவமும் அவற்றில் ஊக்கமாகப் பங்கேற்கின்றன. பம்பாய் குண்டு வெடிப்புகளைத் தொடர்ந்தும், அதற்கு முன்னும் சிறுவர் - சிறுமியர், பெண்கள், வயோதிகர் என ஆயிரக்கணக்கான இசுலாமியரைத் 'தடா'வின் கீழ் சிறையில் அடைத்த அரசு நிர்வாகம், இந்து மதவெறி பாசிஸ்டுகள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அயோத்தி மசூதி இடிப்புக்கு கள்ளத்தனமான ஒத்துழைப்புத் தந்து உடந்தையாக இருந்ததைப் போலவே ஆர்.எஸ்.எஸ். முதலிய அமைப்புகளுக்கு எதிரான தடை விதித்து அமுல்படுத்தியதிலும், ஆதாரங்களை முன்வைக்காது நடுவர் மன்றத்தில் வழக்காடியதிலும் கண்துடைப்புக் காரியங்களையே காங்கிரசு அரசு செய்து வந்தது. தடை விதிக்கப்பட்டதும் இந்து மதவெறி பாசிசத் தலைவர்கள் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவர்களைத் தேடிப்போய் மரியாதை ''சல்யூட்'' அடித்துவிட்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்தனர் போலீசு அதிகாரிகள். அத்தலைவர்களில் சிலர் அரசு விருந்தினர்களாக சில நாட்கள் வைக்கப்பட்டதோடு சரி. மற்றபடி நாடு முழுவதும் சுதந்திரமாகப் பறந்து போய் கமிட்டி, அரங்கக் கூட்டங்கள் நடத்தி, பேட்டி, அறிக்கைகள் கொடுத்து மேலும் மேலும் மதவெறியைத் தூண்டிவிட்டனர். இந்து ஓட்டுக்களைப் பெறுவதில் பாரதீய ஜனதாவுடன் போட்டியிடும் காங்கிரசு, தானே அயோத்தியில் சோமயாகம் நடத்தி மசூதி இடிக்கப்பட்ட இடத்திலேயே ராமன் கோவில் கட்ட வேண்டும் எனத் தீர்மானம் போட வைத்துள்ளது. ஆக்வே, இந்து மதவெறி பாசிச சக்திகளுள் போலிக் கம்யூனிஸ்டுகள் கூறுவதைப் போல மிதவாதிகளையோ, மதச்சார்பற்றவர்களையோ தேடிக் கொண்டிருக்கக் கூடாது. உண்மையான மதச்சார்பற்ற, ஜனநாயக, புரட்சிகர சக்திகள் பலமடங்கு விழிப்போடும் உறுதியோடும் அரசு, நீதி நிர்வாக பலம் பெற்றுள்ள இந்து மதவெறி பாசிஸ்டுகளை எதிர்த்துப் போராடி முறியடிக்க வேண்டும். ●

படிப்பகம்

www.padippakam.com

# புட்டபர்த்தி கொலைகள்:
# சாயிபாபா-போலீசு கூட்டு சதி

உலக மகா மோசடிப் பேர்வழி சாயிபாபாவின் தலைமை ஆசிரமமாகிய புட்டபர்த்தி பிரசாந்தி நிலையத்தில் கடந்த ஜூன் 6-ந் தேதி, அவரது ''சீடர்கள்'' 6 பேர் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். இக்கொலைகள் நடந்தவிதம் மற்றும் காரணம் குறித்து போலிச் சாமியார் சாய்பாபா கும்பலும் போலீசும் கட்டவிழ்த்து விட்டுள்ள செய்திகள் எதுவுமே நம்பக்கூடியவை அல்ல.

பிரசாந்தி நிலையம் என்பது ஆந்திர மாநிலம் அனந்தப்பூர் அருகே, புட்டபர்த்தி கிராமத்தில் உள்ள சகலவிதமான அதிநவீன வசதிகளும் உடைய, மதில் சுவர்களால் வளைக்கப்பட்ட ஒரு மர்மமான குட்டி நகரம். அங்கே ஆயிரக்கணக்கான தமது பக்த கோடிகளுடன் முற்றிலும் இரகசிய வாழ்க்கை நடத்துகிறார் 67 வயது பித்தலாட்டப் பேர்வழி சாயிபாபா. இந்த நாட்டின் முன்னாள், இன்னாள் பிரதமர்கள், அரசுத் தலைவர்கள் இராணுவத் தளபதிகள்; முதல் மந்திரிகள், தலைமை நீதிபதிகள், போலீசு அதிகாரிகள் முதல் பிரபல சினிமா நடிகர் - நடிகைகள், சமூக விரோத கிரிமினல் மஃபியாக்கள் உட்பட ஏறக்குறைய எல்லா பிரபலங்களும் இந்த சாயிபாபாவின் சீடர்கள்; அவன் காலில் விழுந்து வணங்கும் அளவு கண்மூடித்தனமான பக்தர்கள்.

எனவே, பிரசாந்தி நிலையத்தின் மதில் சுவருக்குள் இந்த நாட்டின் சிவில் கிரிமினல் சட்டங்கள் எதுவும் செல்லுபடியாகாது. சாய்பாபா வைத்ததுதான் அங்கே சட்டம். இதேபோன்று ஒரு கிளை, கர்நாடகாவில் பெங்களூரின் புறநகர் பகுதியில் உள்ளது. இந்த சாய்பாபாவின் தலைமையிலான அறக்கட்டளைக்குச் சொந்தமாக கணக்கிடப்படாத பலகோடி ரூபாய் மதிப்புடைய சொத்துக்கள் உள்ளன. பல கட்டிடங்கள், பல கல்லூரிகளைக் கொண்ட ஒரு பல்கலைக் கழகம், அதிநவீன வசதிகளைக் கொண்ட மருத்துவமனை, தனியான விமான நிலையம். நூறுக்கும் மேற்பட்ட நாடுகளில் பக்த கோடிகளைக் கொண்ட கிளைகள் உண்டு. இந்த சாய்பாபாவின் வரவு செலவு குறித்துத் தணிக்கையோ, கணக்கு வழக்குகளோ கிடையாது; அவற்றில் அரசு தலையீடும் இல்லை. சாய்பாபா ஆசிரமத்துக்குள் போலீசு நுழைவதும் இல்லை; சாய்பாபா காலடியில் விழவரும் அரசுப் பிரமுகர்களின் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மட்டுமே போலீசு உள்ளே போவதுண்டு. மற்றபடி சாய்பாபாவின் பாதுகாப்பு ஏற்பாடுகளை அவரது நம்பிக்கைக்குரிய பொறுக்கியெடுத்த சீடர்களே கவனித்துக் கொள்கிறார்கள்.

இந்த நிலையில், இவ்வளவு மர்மமான ஆசிரமத்திற்குள் உள்ள சாய்பாபாவின் தனி மாளிகையான பிரசாந்தி நிலையத்துக்குள் இரவு 10 மணிக்கு மேல் சாய்பாபாவுக்கு மிகவும் நெருக்கமான, ஆசிரமத்தில் முக்கியப் பொறுப்புகளில் உள்ள நான்கு இளைஞர்கள் நுழைய முயன்றார்களாம். பிரதமரின் அந்தரங்க குருவும் மற்றொரு போலிச் சாமியாருமான சந்திராசாமியிடம் இருந்து வந்த தந்தியைக் காட்டுவதற்கு சாய்பாபாவைப் பார்க்க வேண்டும் என்றனராம். தூங்கிக் கொண்டிருக்கும் பாபாவை எழுப்பவோ, பார்க்கவோ கூடாதென தடுத்த அவரது கார் ஓட்டுநர், சமையல்காரர்கள், உதவியாளர்கள், காவலர்களை வந்தவர்கள் திடீரென்று கத்தியால் மாறிமாறிக் குத்தி வீழ்த்தினராம். அதிலே இரண்டு பேர் அங்கேயே மாண்டனராம். இப்படி ஆயுதபாணிகளாக நுழைந்த சாய்பாபா சீடர்கள் மாடிக்குப் போய் அவர் ''சயனம்'' கொண்டிருந்த இடத்துக்கு முன்னறைக்குள் புகுந்து தாளிட்டுக் கொண்டனராம்.

கலவர சத்தம் கேட்டு கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்த சாய்பாபா, ''வெளியே போங்கடா, முட்டாள்களே!'' என்று கடிந்து கொண்டு பின்புறக் கதவைத் திறந்துகொண்டு கட்டிடத்தின் இன்னொரு பகுதிக்குப் போய் தூங்கிவிட்டாராம். உடனே எச்சரிக்கை மணி அடிக்க ஒளி வெள்ளம் பாய்ச்சும் விளக்குகள் எரிக்க சாய்பாபாவின் ஆயிரக்கணக்கான பக்தர்களும், புட்டபர்த்தி கிராம மக்களும் திரண்டு விட்டனர். சிறிது நேரத்தில் அங்கு வந்த புட்டபர்த்தி கிராம போலீசு அந்த அறையின் கதவில் ஒரு பகுதியை உடைத்துக் கொண்டு உள்ளேபோய் .''கொலைகாரர்கள்'' நால்வரையும் சுட்டுக் கொன்றனர். மறுநாள் அதிகாலை, வழக்கம் போல, கொலைச் சம்பவங்கள் எதுவுமே நடக்காததைப் போல ''சாந்தமும், கருணையும், தெய்வீகமும்'' தவழும் முகத்தோடு பக்தர்களுக்குத் தரிசனம் கொடுத்தாராம், சாய்பாபா.

**கிரிமினல் சாய்பாபாவுடன் முன்னாள் ஜனாதிபதி வெங்கட்ராமன்**



சம்பவம் நடந்த 12 மணி நேரத்துக்குப் பிறகு, ''சாய்பாபாவைக் கொல்ல முயன்ற 4 பேரைப் போலீசு சுட்டுக் கொன்றது'' என்று 'ஆகாசவாணி'' அறிவித்த போது தான் விவகாரம் வெளியுலகுக்குத் தெரிந்தது. உடனே பிரபலங்கள் அனைத்தும் அதிர்ச்சி தெரிவித்து பாபாவுக்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடு கோரினர். அதற்குள் குற்றப் பிரிவு விசாரணைக்கு உத்திரவிட்டது மாநில அரசு. ஆந்திர, கர்நாடகா முதல்வர்கள் ஆந்திர, மத்திய போலீசு மந்திரிகள் எனப் பலரும் புட்டபர்த்திக்கு விரைந்தனர். ஆனால் வழக்கு விசாரணை பகுத்தறிவாளர்கள் மத்தியில் மட்டுமல்ல, சாய்பாபா பக்தர்கள் மத்தியிலும் பல சந்தேகங்களையே கிளப்பியுள்ளது. பத்திரிகைகள் பல கேள்விகளை எழுப்புகின்றன.

இது சாயிபாபாவைக் கொலை செய்ய நடந்த சதி என்று போலீசும், சாயிபாபா குடும்பத்தினரும் கட்டிவிடும் கதைதானே தவிர சாயிபாபாவே ''கொலை முயற்சி அல்ல'' என்று மறுத்திருக்கிறார். சாயிபாபா மடத்தில் பதவி கிடைக்காததால் வெறிபிடித்தவர்களாகி, பழிவாங்குவதற்காக கொல்ல முயன்றனர் என்கின்றனர் உறவினர். சொத்துக்களைத் தமக்கு எழுதி வைக்காமல் சில நம்பகமான சீடர்களிடம் ஒப்படைக்க சாய்பாபா முடிவு செய்துள்ளதை அறிந்த அவரது உறவினர்கள் முக்கியமாக அவரது சகோதரர் சாய்பாபாவோடு விசுவாச சீடர்களையும் கொல்ல மேற்கொண்ட நடவடிக்கை, என்கின்றனர் ஒரு பிரிவினர். சாய்பாபா மீதான கொலை முயற்சியில் ஏதோ பயங்கர சதி இருக்கிறது, கொலைகாரர்களின் சூத்திரதாரிகளான வேறு இரு சீடர்கள் தப்பித் தலைமறைவாகியுள்ளனர்; சாய்பாபாவைக் கொன்றுவிட்டு தற்கொலை செய்துகொள்ள ''சயனைடு'' - நச்சுப் புட்டியும், பயங்கர வெடிகுண்டுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன; ஆகவே வெளிநாட்டு சதி, பம்பாய் குண்டுவெடிப்பில் சந்தேகிக்கப்படும் தாவூத் இப்ராகீம் மஃபியா வேலையாக இருக்கும் என அவரது பக்தர்கள் புரளி கிளப்புகின்றனர். சாயிபாபா, காங்கிரசு அரசை ஆதரித்தும், அயோத்தி மசூதி இடிப்பை ஏற்க மறுத்தும் பேசியுள்ளார்; ஆகவே ஆர்.எஸ்.எஸ். - விசுவ இந்து பரிஷத்காரர்கள் சதி செய்து சாயிபாபாவை கொல்ல முயன்றிருக்கலாம்; கொலை செய்ய முயன்றவர்களுக்கும் ஆர்.எஸ்.எஸ்.-க்கும் தொடர்பிருந்ததற்கு ஆதாரம் உள்ளது; வி.இ.ப. தலைவர் அசோக் சிங்கால் புட்டபர்த்தி மடத்துக்கு வந்த போது அவர்கள்தான் பாதுகாப்பு கொடுத்தனர் என்று இன்னொரு பிரிவினர் கூறுகின்றனர்.

ஆனால் புலனாய்வு செய்து சதியைக் கண்டுபிடித்து குற்றவாளிகளைத் தண்டிப்ப



படிப்பகம்

www.padippakam.com

தற்கு பதில் ஆரம்பத்தில் இருந்தே உண்மையை மூடிமறைப்பதற்கு மடத்துக்காரர்கள், குறிப்பாக சாயிபாபாவும் போலீசும் முயலுவதாகத் தெரிகிறது. சாயிபாபாவைக் கொலை செய்ய முயன்றதாகக் கூறப்படும் இளைஞர்கள் கத்தி முதலிய சாதாரண ஆயுதங்களையே வைத்திருந்தனர்; ஒரு அறைக்குள் தாள் போட்டுக் கொண்டு அவர்களே சிக்கியிருந்தனர். அவர்களை உயிருடன் பிடிப்பது போலீசுக்கு சிரமமே கிடையாது; இருந்தாலும் போலீசு சுட்டுக் கொன்றிருக்கிறது. இது வேண்டும் என்றே சாட்சியங்களை அழிப்பதற்காக செய்யப்பட்ட படுகொலைகள்தாம். ''இது நக்சலைட்டுகள் அதிகமுள்ள பகுதி; பாபாவுக்கு ஆபத்து நேர்ந்திருக்கலாம்; எங்களையும் தாக்க வந்தார்கள்; ஆகவே, சுட்டுக் கொன்றோம்'' என்று அடுக்கடுக்காகப் புளுகுகிறார், கொலைகார போலீசு அதிகாரி கங்காதர ரெட்டி. ''நிராயுதபாணியாக்குவதற்காக சுடுவது இப்போது பழைய கதையாகிவிட்டது; நேரடியாக சுட்டுக் கொல்வதுதான் இப்போது வழக்கத்தில் உள்ளது; எதிரிக்கு எந்த வாய்ப்பும் தரவே முடியாது'' என்று பச்சையான கொலைவெறியுடன் கொலைகாரர்களுக்குப் பரிசும் அறிவித்துள்ளார்.

எப்படிப் பார்த்தாலும் சரி, புட்டபர்த்தி கொலைகள் குறித்து அரசும் மடத்துக்காரர்களும் கூறும் காரணங்கள், பின்னணித் தகவல்கள் ஏற்கக் கூடியவையோ, சந்தேகத்துக்கிடமற்றவையோ அல்ல. சாயிபாபாவே ஒப்புக் கொள்வதைப் போல அவரைக் கொல்வதற்கு நடந்த சதி என்பது பச்சைப் பொய். அப்படிப்பட்ட சதிதான் காரணம் என்றால் சாயிபாபாவுக்கு நெருங்கிய சீடர்களாக இருந்த அவர்கள் மிகச் சுலபமாகவும், சரியாகவும் திட்டமிட்டு நிறைவேற்றியிருக்க முடியும். தமக்குச் சாதகமற்ற இடத்துக்கு சாயிபாபாவைத் தேடிப் போயிருக்க வேண்டியதில்லை. சாயிபாபாவின் ஆட்கள் இரண்டு பேரைக் கொன்ற பிறகு, அவரே நேரில் தம்மிடம் வந்து பேசிய போது - அதாவது கொலை செய்வதற்கு தேடிப்போன இலக்கு எளிதாக சிக்கியபோதும் - அவரைத் தாக்கவோ கொல்லவோ ''சதிகாரர்கள்'' கொஞ்சமும் முயலவே இல்லை; பின்புற வழியே அவர் ''தப்பி''ப் போக விட்டதோடு, அதே வழியே தாமும் தப்பிப்போக முயலவில்லை. அப்படியிருக்க அவர்களைச் சுட்டுக் கொல்ல வேண்டிய அவசியம் என்ன?

முற்றும் உணர்ந்த முனிவரெனப் பீற்றிக் கொள்ளும் சாயிபாபா தனது உயிருக்கு ஆபத்து வருமென அறியாததில் வியப்பில்லை. ஆனால் சம்பவத்தின் போதும் அதன் பின்னரும் சாயிபாபாவின் நடத்தை தான் சந்தேகத்துக்குரியதாக உள்ளது. தனது குடியிருப்புக்குள்ளாகவே, தனக்குத் தெரிய தனது சீடர்களுக்கிடையே கத்திக் குத்துகள், கொலைகள் நடந்திருக்கின்றன. அறிந்தும் ஒன்றுமே நடக்காததைப் போல வேறு அறைக்குப் போய் ''தூங்கினார்'' என்கிறார்கள்; முகமாற்றம் சிறிதும் காட்டாமல் சில மணி நேரத்துக்குள் வழக்கமான ''தரிசனம்'' கொடுத்துள்ளார். ''இதைப் பெரிதுபடுத்தாதீர்கள், எல்லாம் ஒரு மாயா



சாய்பாபா காலில் விழும் எஸ்.பி.சவான்; ''கிரிமினல்'' சாமியாரின் பக்தகோ(கே)டிகள்!

(கனவு - கற்பனைத் தோற்றம்)'' என்று ''அருள்வாக்கு'' கொடுத்துள்ளார் சாயிபாபா. எது ''மாயா''? ஆறு பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அபாயகரமான விஷ மருந்தும், வெடி குண்டுகளும் மடத்தின் வளாகத்துக்குள் சிக்கியுள்ளன. இரண்டு முக்கிய சீடர்களைக் காணவில்லை என்கிறார்கள். இவையெல்லாம் ''மாயா''வா? ஆகவே, சாயிபாபாவும், அரசு - போலீசும் மறைப்பதற்கு ஏதோ அவசியம் இருக்கிறது. விசாரணை என்று போனால் ஏதோ குட்டு அம்பலப்பட்டுப் போய்விடும் என அஞ்சுவது தெரிகிறது. அவர்களது வாக்குமூலத்தின்படி, இந்தக் கொலைகளுக்கான சதியில் பிரதான குற்றவாளி சாயிபாபா தான் என்று சந்தேகிக்காமல் இருக்க முடியாது.

வெறுங்கையைச் சுழற்றி, மந்திரம் சொல்லி விபூதி, குங்குமம், கடிகாரம், லிங்கப் பொம்மை, சங்கிலி போன்றவற்றைத் திடீரென்று வரவழைத்துத் தருவது என்கிற சாயிபாபா அற்புதங்கள் எல்லாம் பித்தலாட்டமானவை; பெங்களூர் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் நரசிம்மையா, இலங்கை பகுத்தறிவுச் சிந்தனையாளர் கோவூர் போன்றவர்களின் சோதனைகளை சவால் ஏற்க மறுத்த போதே அவரது மோசடிகள் அம்பலமாகிவிட்டன. இன்னும் சாயிபாபாவின் பக்தராகி, புட்டபர்த்தி மடத்தில் சேர்ந்து, அங்குள்ள மர்மங்களை அறிந்து, வெறுப்புற்று வெளியேறிய வெளிநாட்டுக்காரர்கள் சில நூல்களை எழுதியுள்ளனர். சாயிபாபாவின் பாலுறவு வக்கிரங்கள், குறிப்பாக ஓரினச் சேர்க்கை, தெய்வீக மோசடிகளை அந்த நூல்கள் அம்பலமாக்குகின்றன. ஆன்மீக, சமூக சேவை என்கிற பெயரில் பல சமூகவிரோத கிரிமினல் குற்றங்கள் புட்டபர்த்தி மடத்தில் நடப்பதாக தொடர்ந்து புகார்கள் வருகின்றன. கோடி கோடியாகக் கணக்கில் வராத கள்ள - கருப்புப் பணமும் ஏராளமான சொத்துக்களும் குவிக்கப்பட்டுள்ளன. இப்படிப்பட்ட இரகசிய உலகில் கொலைகள் போன்ற குற்றங்கள் அடிக்கடி நிகழ்வதுண்டு. சாயிபாபாவின் நடத்தையில் வெறுப்புற்ற, மர்மங்களை அறிந்த அல்லது அவரையே உருட்டி மிரட்ட (பிளாக் மெயில் செய்ய) துணிந்த சில இளைஞர்களைத் தீர்த்துக் கட்டவும், அதையே போலீசை வைத்து சாதித்துக் கொள்ளவும் நடந்ததுதான் புட்டபர்த்திக் கொலைகள் என்று முடிவுக்கு வர பல காரணங்கள் உள்ளன. முக்கியமாக, இக்கொலைகள் மீதான சாட்சியங்களை அழித்து, விசாரணையை தடுப்பதற்காக சாயிபாபாவும் அரசும் மேற்கொண்ட முயற்சிகள் இதையே காட்டுகின்றன.

**போலீசு அதிகாரி கங்காதர ரெட்டி; பாபா சதியின் கொலைகாரக் கூட்டாளி.**



சாயிபாபாவின் புட்டபர்த்தி மடத்தைப் போல, மகரிஷி மகேஷ்யோகி மடம், ரமண மகரிஷி மடம், சடாச்சாரி, தீரேந்திர பிரம்மச்சாரி, பங்காரு அடிகள் மெய்வழிச் சாலை, ரஜினீஷ் ஆசிரமம் போன்ற திடீர் சாமியாரின் மடங்கள் மட்டுமல்ல சங்கர மடங்கள், ஜீயர் மடங்கள் போன்ற நூற்றுக் கணக்கானவை சட்டம், ஒழுங்கு உட்பட எந்த நியதிக்கும் கட்டுப்படாத தனி அரசுகளாகவே நடக்கின்றன. பல அரசியல் புள்ளிகள், அதிகாரிகள், தொழிலதிபர்கள் மற்றும் அந்நிய - ஏகாதிபத்திய உளவாளிகளின் தொடர்புகள், ஆதரவும் பெற்று பல சமூகவிரோத குற்றங்கள் நடக்கின்றன. ஆகவே இப்படிப்பட்ட மடங்கள் அனைத்தும் கலைக்கப்பட்டு சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட வேண்டும். அவற்றின் மோசடிகள், சமூகவிரோத குற்றங்களைத் தடுத்து நிறுத்த இதுதான் வழி.

● மணவாளன்

படிப்பகம்

www.padippakam.com

# பிரதமரின் ஊழல் ரூ.1 கோடிதானா?

“நரசிம்மராவுக்கு நான் ஒரு கோடி ரூபாயை அன்பளிப்பாகக் கொடுத்தேன்” என்று பங்குச்சந்தை மோசடிப் பேர்வழியான அர்ஷத் மேத்தா பகிரங்கமாகவே சாட்டிய குற்றச்சாட்டு, காங்கிரசுக் கயவாளிகளை பீதியில் ஆழ்த்தியுள்ளது. “சென்ற ஆண்டு நவம்பர் 4-ம் தேதியன்று நானும் எனது சகோதரர் அஸ்வின் மேத்தாவும் காங்கிரசு எம்.பி.யான சத்பால் மித்தல் உதவியுடன் பிரதமரைச் சந்தித்து, அவரது நந்தியால் தொகுதி தேர்தல் செலவுக்கு அன்பளிப்பாக 67 லட்ச ரூபாயை சூட்கேசில் அடைத்துக் கொடுத்தோம். அடுத்தநாள் மீதித் தொகையை சத்பாலின் மகன் சுனில் மித்தல் மூலமாக பிரதமரின் உதவியாளரிடம் சேர்ப்பித்தோம்” என்று கடந்த ஜூன் 16-ந் தேதியன்று பம்பாயில் பரபரப்பாக அம்பலப்படுத்தியுள்ளார் அர்ஷத் மேத்தா.

இச் செய்தி வெளியானதும் எல்லா எதிர்க்கட்சிகளும், நரசிம்மராவ் தார்மீகப் பொறுப்பேற்று பிரதமர் பதவியை உடனே ராஜினாமா செய்ய வேண்டுமெனக் கோரி இயக்கத்தைத் தீவிரப்படுத்தத் தொடங்கியதும், அரண்டுபோன காங்கிரசு முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்கும் முயற்சியில் வேகமாக இறங்கியது. “அர்ஷத் மேத்தாவை நான் சந்தித்ததே இல்லை” என்று கூசாமல் புளுகிய பிரதமர், அவசரமாக காங்கிரசுத் தலைவர்கள் - முதல்வர்களையும் செயற்குழுவையும் கூட்டி, “இது பாரதீய ஜனதா மற்றும் தேசவிரோத சக்திகள் நாட்டைச் சீர்குலைக்கச் செய்யும் கூட்டுச் சதி” என்று அறிக்கை வெளியிடச் செய்து வாயடைக்க முயற்சித்தார். ஒரு குற்றச்சாட்டு வந்தால் அதை விசாரிப்பதற்கு முன்னரே திடலடியாக மறுப்பதென்பது காங்கிரசுப் பெருச்சாளிகளின் பாரம்பரிய உத்தி. குற்றச்சாட்டை மறுத்து கூப்பாடு போடுகின்றனரே தவிர, இதுவரை உருப்படியான விளக்கம் ஏதும் அளிக்கவில்லை.

5,000 கோடி ரூபாய்க்கு மேல் வரலாறு காணாத வங்கி - பங்குச் சந்தை மோசடி கடந்த ஆண்டில் அம்பலப்படத் தொடங்கியதுமே, இதில் சம்பந்தப்பட்ட பார்ப்பன - பனியா கும்பலும் காங்கிரசுப் பெருச்சாளிகளும் அதை மூடி மறைப்பதிலேயே குறியாய் இருந்தனர். இதனால், புலனாய்வை முறையாகச் செய்யவிடாமல் தனக்கு நிர்பந்தம் அளிக்கப்பட்டதாகக் கூறி சி.பி.ஐ.யின் இணை இயக்குனர் மாதவன் பதவியை ராஜினாமா செய்தார். ஊழலைக் கண்டறிய நிறுவப்பட்ட நாடாளுமன்ற கூட்டுக்குழுவிலும் விசாரணைகள் ரகசியமாக நடத்தப்பட்டு, செய்திகளை வெளியடக்கூடாது என்று இருட்டடிப்பு செய்தனர். விசாரணையின் போது எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தும் ரகசிய கடிதங்கள் கூட்டுக்குழவினருக்கு தரப்பட்டு, அதன்படியே அவர்கள் விசாரணையை நீர்த்துப் போகச் செய்தனர். அர்ஷத் மேத்தா உட்பட பங்குச் சந்தை தரகர்கள், வங்கி மற்றும் அரசு அதிகாரிகள் சுமார் 30 பேர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டார்களே தவிர, அரசியல்வாதிகள் ஒருவர்கூட கைதாகவில்லை.

குறிப்பாக, பிரதமரின் மகன் பங்குதாரராக உள்ள “கோல்டு ஸ்டார்” நிறுவனத்துக்கு மற்றொரு பங்குத் தரகரான ஹிதேன் தலால் ரூ.2 கோடி கொடுத்த விவகாரம், அத்தரகர் ரூ.60 கோடி அளவுக்கு சில வங்கித் தலைவர்கள், தனிநபர்கள், நிறுவனங்களுக்கு அன்பளிப்பாக கொடுத்த விவகாரம், பங்குத் தரகர்கள் நரோத்தம், பூபன்தலால் ஆகியோரின் மோசடிகள் முதலானவை அம்பலமான பிறகும் இக்கும்பல் மீது நாடாளுமன்ற கூட்டுக்குழுவோ சி.பி.ஐ.யோ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ராவ் அரசும் வாய் திறக்கவில்லை.

இதனாலேயே, நான்கு மாதக் காவலுக்குப் பிறகு பிணையில் வெளிவந்த அர்ஷத் மேத்தா, தன்னை மட்டுமே பலிகிடாவாக்கிவிட்டு ஊழல் பெருச்சாளிகள் தப்பிக்க முயற்சிப்பதையும், காங்கிரசு அரசே இதற்கு உடந்தையாகச் செயல்படுவதையும் கண்டு எரிச்சலடைந்தார். தமது வழக்கறிஞர் மூலம் ஒரு கோடி ரூபாய் வாங்கிய அரசியல்வாதி பெயரை தெரிவிப்பதாகவும் தமக்கு பாதுகாப்பு கொடுக்கும்படியும் சி.பி.ஐ.யின் இயக்குனருக்கு கடந்த பிப்ரவரியில் ஒரு கடிதம் எழுதினார். நாடாளுமன்ற கூட்டுக்குழுவிடம் இக்கடித விவகாரம் பற்றி வாயே திறக்காமல் திட்டமிட்டே மூடிமறைத்தது காங்கிரசு.

அதன் பிறகு அர்ஷத்தின் சகோதரர் சி.பி.ஐ.யின் தகிடுதத்தங்களை அம்பலப்படுத்தியதும், ஒரு கிரிமினலுக்குப் பாதுகாப்பு அளிக்க முடியாது என்று காங்கிரசுப் பெருச்சாளிகள் கூப்பாடு போட்டனர். எதிர்க்கட்சிகளும் காங்கிரசின் அதிருப்தி கோஷ்டியினரும் அர்ஷத்துக்கு உரிய பாதுகாப்பு அளித்து உண்மையை வெளிக்கொணருமாறு நிர்பந்தித்தனர். இந்தச் சூழ்நிலையில்தான் அர்ஷத் மேத்தா, பத்திரிகைகளுக்குப் பேட்டியளித்து பிரதமரைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தியுள்ளார்.

அர்ஷத் ஒரு கிரிமினல் பேர்வழி; ஆகவே அவரது கூற்றை நம்ப முடியாது என்று எகிறிக் குதிக்கிறது காங்கிரசு. ஆனால், நரசிம்மராவே கடைந்தெடுத்த ஒரு ஊழல் - கிரிமினல் பேர்வழி. அவர் ஒரு கோடி ரூபாய் லஞ்சம் பெற்றார் என்பது மிக அற்பமானது. அதிகாரத்தை ஏந்திச் சுழற்றி ராவ் கும்பல் கோடிகோடியாய் கொள்ளையடித்துள்ளது என்பதே உண்மை. மேலும், சர்வதேச ஆயுதக் கடத்தல் மாஃபியா தலைவன் கஷோகி, ரகசிய உலக போலிச் சாமியாரான சந்திரசாமி, இவர்களின் கூட்டாளிகளான சந்திரசேகர், சுப்பிரமணியசாமி - என சர்வதேச கிரிமினல் கும்பலுடன் நெருங்கிய உறவு வைத்துள்ளவர்தான் நரசிம்மராவ். இவர்கள் மூலமாக, வி.பி.சிங்கின் மகனுக்கு செயிண்ட் கிட்டீஸ் தீவுகளிலுள்ள ரகசிய வங்கியில் 35 கோடிக்கு கள்ளப்பணம் உள்ளது என்று போலி ஆவணங்களைத் தயாரித்தவர்தான் ராவ். கடந்த ஆண்டில் வெளியுறவு மந்திரியாக இருந்த சோலங்கி மூலம் போபார்ஸ் ஊழலை மூடிமறைக்க சுவிஸ் அரசுக்கு ரகசிய கடிதம் அனுப்பியவர்தான் ராவ். இதோடு ஆந்திராவிலுள்ள ராவ் குடும்பம் நில உச்சவரம்புச் சட்டத்தை மீறி நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களை வளைத்துக் கொண்டு தமது பினாமிகள் மூலம் மோசடி செய்துள்ளது. இந்த லட்சணத்தில் பரிசுத்த வேஷங்கட்டி ஆட ராவ் கும்பலுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது?

நந்தியால் தொகுதியில் வரலாறு காணாத வகையில் 6 லட்சம் வாக்கு வித்தியாசத்தில் நரசிம்மராவ் வெற்றிபெற்றதன் ரகசியத்தை மட்டுமல்ல; வங்கி - பங்குச் சந்தை மோசடியை மூடி மறைக்கவும், அதிகாரத்திலுள்ளவர்கள் தமது குற்றங்களை மறுத்து எதிர்த்தரப்பினர் மீது பாய்ந்து குதறவும், ஊழலில் ஊறித் திளைக்கவும்தான் இன்றைய நாடாளுமன்ற அரசியல் அமைப்பும் அதன் சட்டம் - நீதி - போலீசு - புலனாய்வு அமைப்புகளும் உடந்தையாகச் செயல்படுகின்றன என்பதை அர்ஷத் விவகாரம் மீண்டுமொருமுறை நிரூபித்துக் காட்டிவிட்டது. கிரிமினல்களின் உறைவிடமாகிவிட்ட கேடுகெட்ட நாடாளுமன்ற அரசியலமைப்பு முறையின் தலையைச் சீவி உயிரைப் பறிப்பது மட்டும்தான் இனி பாக்கியிருக்கிறது.

● மணி



பத்திரிக்கையாளர்களிடம் பேட்டியளிக்கும் ஹர்ஷத்



படிப்பகம்

www.padippakam.com

# கம்பூச்சியா: வல்லரசு வல்லூறுகள் கூறுபோடும் இரையானது

கல்லொன்றைத் தூக்கி தமது காலில் போட்டுக் கொள்ளும் முட்டாள்கள் என்று ஏகாதிபத்தியவாதிகளை எள்ளி நகையாடினார் தோழர் மாவோ. அதிலும் பெரிய பாறாங்கல்லைக் தூக்கி தம்மீதே போட்டுக் கொண்டு இப்போது ஏகாதிபத்தியவாதிகள் கம்பூச்சியாவில் அலறிக் கொண்டிருக்கிறார்கள். 13 ஆண்டு கால உள்நாட்டுப் போரில் உருக்குலைந்து போன கம்பூச்சியாவில் அமைதியையும் ஜனநாயகத்தையும் நிலைநாட்டக் கிளம்பிய ஏகாதிபத்தியவாதிகள், தமது தொங்கு சதையான ஐ.நா. மன்றத்தின் ஏற்பாட்டின் படி 22,000 பேர் கொண்ட அமைதிப்படையைக் கம்பூச்சியாவில் கொண்டுபோய் குவித்தனர். புதிய அரசை நிறுவுவதற்காக ஐ.நா. அமைதிப் படையின் மேற்பார்வையில் நடந்த தேர்தல் மோசடியானது என்று அம்பலப்பட்டுப் போயுள்ளதோடு, அவர்கள் எதிர்பார்த்த வகையில் புதிய விசுவாச அரசை அமைக்க முடியாமல் மீண்டும் குழப்பத்தையே விதைத்துள்ளனர்.

● ● ●

இந்தியாவின் தென் கிழக்கே தென் சீன தீபகற்பத்தில் உள்ள சிறிய நாடுதான் கம்பூச்சியா. இந்தியாவைப் போன்றே கம்பூச்சியாவும் ஒரு ஏழை விவசாய நாடு. தமிழக இலக்கியங்களில் "காமரூபம்" என்று குறிப்பிடப்படும் இந்நாடு செழுமையான கலாச்சாரமும் வரலாற்றுப் பாரம்பரியமும் கொண்டது.


நீண்ட காலமாக பிரான்சு மற்றும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் காலனிய அடிமைநாடாக இருந்த கம்பூச்சியா 70-களில் தேச விடுதலைப் போரில் வீறு கொண்டு எழுந்தது. தோழர் போல்பாட் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சியும் கேமர்ரூஜ் எனும் அதன் செம்படையும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் அதன் அடிவருடி லான்நால் அரசையும் கதிகலங்க வைத்தன. ஏற்கனவே அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிராக நீண்டகாலமாகப் போராடி வந்த வியட்நாம், லாவோஸ் நாட்டு மக்களின் வீரஞ்செறிந்த ஆயுதப் போராட்டங்கள் கம்பூச்சிய மக்களுக்கு மேலும் உத்வேகமூட்டியது. இம்மூன்று நாடுகளும் தோளோடு தோள் சேர்ந்து ஆயுதப் போராட்டத்தில் உறுதியாக முன்னேறி 1975-ல் தேச விடுதலையை ஈன்றெடுத்தன. நியாயமான போரில் எந்தவொரு சிறிய நாடும் பெரிய ஏகாதிபத்தியத்தை வெற்றி கொள்ள முடியும் என்பதை நிரூபித்துக்காட்டி, அடிமைப்பட்டுக் கிடக்கும் ஏழை நாடுகளின் போராட்டத்துக்குப் புது ரத்தம் பாய்ச்சியது, வியட்நாம் - லாவோஸ் - கம்பூச்சிய மக்களின் விடுதலை.

### சுய சார்பா? ரஷிய சார்பா?

தேச விடுதலையைச் சாதித்த போதிலும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கடந்த காலத் தாக்குதல்களால் உற்பத்தி சீர்குலைந்து கடும் பஞ்சத்தில் இந்நாடுகள் சிக்கித் தவித்தன. உணவு உற்பத்தியைப் பெருக்கி பஞ்சத்தைப் போக்க என்ன நடவடிக்கையை மேற்கொள்வது என்பதே அன்று இந்நாடுகளின் மையப் பிரச்சினையாக இருந்தது. தேச விடுதலைப் போராட்டத்தை ஆதரித்து, உதவி என்ற பெயரில் உள்ளே நுழைந்து அடிமைப்படுத்தக் காத்து நிற்கும் ரஷிய சமூக ஏகாதிபத்தியத்தின் கோரப் பிடியில் சிக்குவதா? அல்லது எந்த ஏகாதிபத்தியத்தின் தயவுமின்றி சுயசார்புடன் நின்று தேசிய பொருளாதாரத்தைக் கட்டியமைத்து நாட்டை முன்னேற்றிச் செல்வதா? என்பதே மைய விவகாரமாக இருந்தது.

வியட்நாமும் லாவோசும் முதலாவது பாதையைத் தேர்ந்தெடுத்து ரஷிய சமூக ஏகாதிபத்தியத்தின் நவீன அடிமைநாடுகளாகச் சீரழிந்தன. ஆனால் கம்பூச்சியா, ரஷியாவின் தயவைச் சார்ந்து நிற்காமல் சுயசார்புடன் நின்று நிலச்சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்தி விவசாய உற்பத்தியைப் பெருக்கி முன்னுதாரணமாகத் திகழ்ந்தது. பஞ்சத்தில் கிடந்த நாடு ஒரே வருடத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்கி, தன்னிறைவு பெற்ற நாடாக முன்னேறியது. இருப்பினும் இதனை அவ்வளவு எளிதில் சாதிக்க முடியவில்லை. எதிர்கொண்ட பிரச்சினைகளோ ஏராளம்.

மக்கள் எனும் கடலில் நீந்தும் மீன்களைப் போன்றவர்கள் கம்யூனிஸ்டுகள் என்றார் மாவோ. கம்பூச்சியாவை அடிமைப்படுத்திய அமெரிக்க ஏகாதிபத்தியம், கம்யூனிஸ்டுகள் எனும் மீன்களைப் பிடிக்க மக்கள் எனும் கடலையே வற்றச் செய்யும் உத்தியைக் கையாண்டது. இதன்படி, கம்பூச்சியா காலனி நாடாக இருந்தபோது கிராமப்புறங்களும் விவசாய உற்பத்தியும் அறவே புறக்கணிக்கப்பட்டன. பிழைக்க வழியின்றி விவசாயிகள் நகர்ப்புறங்களை நோக்கி ஓடினர். நகர்ப்புறங்களோ சீரழிவுக் கலாச்சாரத்தின் கோட்டையாக, சோம்பேறிகள், பொறுக்கிகளின் கூடாரமாக மாறியது.




### சோம்பேறிகள் - சுகவாசிகளின் கலகம்

1975-ல் தலைநகர் நாம்பென்னைக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையிலான கேமர்ரூஜ் படை கைப்பற்றியபோது, நாட்டின் மொத்த மக்கட்தொகையில் மூன்றிலொரு பங்கினர் தலைநகரில் குடியிருப்பதைக் கண்டார்கள். சுய சார்புடன் நின்று விவசாய உற்பத்தியைப் பெருக்க வேண்டுமானால் இவர்களைக் கிராமப்புறங்களுக்கு அனுப்புவதைத் தவிர வேறு வழியில்லை. ஆனால் ஏகாதிபத்திய சீரழிவுப் பொறுக்கி கலாச்சாரத்தில் மூழ்கிக் கிடந்த சோம்பேறிகளும் சுகவாசிகளும் கிராமப்புறங்களுக்குத் திரும்பிச் செல்ல மறுத்தனர். எனவே போல்பாட் தலைமையிலான புரட்சி அரசு, நகரங்களில் தேவைக்கு அதிகமாக மிதமிஞ்சிக் குடியேறிவிட்ட மக்களை கிராமங்களுக்குத் திருப்பி அனுப்புவதைக் கட்டாயமாக்கியது.

நகர்ப்புற உதிரிப் பாட்டாளிகளைத் திரட்டிக் கொண்டு சோம்பேறிகளும் சுகவாசிகளும் இதை எதிர்த்து கலகம் செய்தனர். அமெரிக்க ஏகாதிபத்தியமோ இழந்த சொர்க்கத்தை மீட்கும் நோக்கத்துடன் இத்தகைய கலகங்களை ஆதரித்து, போல்பாட் அரசை மனித உரிமைகளைப் பறிக்கும் கொடிய சர்வாதிகார அரசாக சித்தரித்தது. மறுபுறம், தென்கிழக்காசியாவின் தனது யுத்த தந்திர நோக்கங்களுக்குத் தடையாக நிற்கும் கம்பூச்சியாவை அபகரிக்க ரஷிய ஏகாதிபத்தியம் தருணம் பார்த்துக் கொண்டிருந்தது. போல்பாட் அரசு, நகரங்களிலிருந்து மக்களை வெளியேற்றிய விவகாரம் அதற்கு ஒரு வாய்ப்பாக அமைந்தது. அமெரிக்காவைப் போலவே, ரஷியாவும் போல்பாட் அரசைக் கொலைகார கும்பலாகச் சித்தரித்து, மனித உரிமைகள் நசுக்கப்படுவதாகக் கூச்சலிட்டது.

### வியட்நாமிய கூலிப்படைகளின் ஆக்கிரமிப்பு

'70-களில் அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரின் போது கம்பூச்சிய - வியட்நாமிய கொரில்லாக்கள் இணைந்து பயிரிட்டு வந்த விளைநிலங்களில், கம்பூச்சியப் பகுதியிலிருந்த விளைநிலங்களிலும் தங்களுக்கு உரிமை உள்ளது என்று கூறி, புதிதாக எல்லைப் பிரச்சினையை ரஷிய அடிவருடியான வியட்நாம் கிளப்பியது. கம்பூச்சியாவிலுள்ள தமது எடுபிடிகளைக் கொண்டு போல்பாட் அரசுக்கு எதிராகக் கலகங்களையும் சீர்குலைவு சதிகளையும் கட்டவிழ்த்துவிட்டது. அதைத் தொடர்ந்து கம்பூச்சிய மக்களின் போராட்டத்துக்கு உதவுவதாகக் கூறிக் கொண்டு, வியட்நாமின் ஒன்றரை லட்சம் கூலிப்படைகள் 1979-ல் கம்பூச்சியாவை ஆக்கிரமித்தன. வியட்நாமிய அடிவருடியான ஹெங்சாமரின் என்பவர் தலைமையில் பொம்மை அரசு நிறுவப்பட்டது.

www.padippakam.com

சோசலிச வேடம் தரித்துக் கொண்டு அநியாயமான ஆக்கிரமிப்பில் இறங்கிய வியட்நாம் மீதும் அதன் எஜமானனான ரஷியா மீதும் உலக மக்கள் காறி உமிழ்ந்தார்கள். கம்பூச்சிய ஆக்கிரமிப்பின் காரணமாகக் கூட்டுச் சேரா இயக்கமே பிளவுபட்டுப் போனது. போல்பாட் தலைமையிலான கேமர்ரூஜ் செம்படை வியட்நாமிய ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து வீரப்போரில் குதித்தது. அதனுடன் ஐக்கிய முன்னணி அமைத்துக் கொண்டு முன்னாள் இளவரசர் சிகானுக் தலைமையிலான தேசியப்படையும், முன்னாள் பிரதமர் சோன்சான் தலைமையிலான தேசிய விடுதலைக்கான பௌத்தர்களின் முன்னணியும் ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றன.

நீண்ட, விடாப்பிடியான போராட்டத்தின் விளைவாக கேமர்ரூஜ் செம்படை கம்பூச்சியாவின் வடமேற்கே தாய்லாந்தை ஒட்டிய பகுதியில் தளப்பிரதேசத்தைக் கட்டியமைத்து முன்னேறியது. இதேபோல சோன்சான் மற்றும் சிகானுக்கின் படைகளும் கணிசமான பகுதிகளில் விடுதலைப் பிரதேசங்களை நிறுவின. உலக அரங்கில் தனிமைப்பட்டுப் போன வியட்நாமிய ஆக்கிரமிப்பாளர்கள் தமது படைகளைப் படிப்படியாக விலக்கிக் கொள்வதாகப் பசப்பினர். அதே சமயம் பெருமளவிலான வியட்நாமியர்கள் பிழைப்புக்காக கம்பூச்சியாவில் குடியேறத் தொடங்கினர். இதனால் கம்பூச்சியர்களுக்கும் வியட்நாமியர்களுக்குமிடையே இனமோதல்கள் வளரத் தொடங்கின. ஒருபுறம் அரசுப் படைகளுக்கும் போராளிக் குழுக்களுக்கும் இடையிலான யுத்தம்; மறுபுறம் கம்பூச்சிய - வியட்நாமிய இனங்களுக்கிடையிலான மோதல் என நாடு தீராத உள்நாட்டுப் போரில் சிக்கித் தவித்தது.

### ரஷிய ஒன்றியத்தின் சிதைவு; கம்பூச்சிய அடிவருடிகளின் சோரம்

90-களின் துவக்கத்தில் நிகழ்ந்த கிழக்கு ஐரோப்பிய மாற்றங்கள், சோவியத் ஒன்றியம் சிதைவு, போலி சோசலிச முகாமின் அழிவு முதலானவற்றைச் சாதகமாக்கிக் கொண்டு அமெரிக்கா தலைமையிலான மேற்கத்திய ஏகாதிபத்தியங்கள் கம்பூச்சியாவை மீண்டும் கைப்பற்ற முயன்றன. கம்பூச்சியாவில் அமைதியையும் ஜனநாயகத்தையும் நிலைநாட்டுவது என்ற பெயரில் ஐ.நா. மன்றத்தின் மூலம் தலையிடத் தொடங்கின. தேர்தல் நடத்தி தமக்கு விசுவாசமான அரசை நிறுவி அதற்கு சர்வதேச அங்கீகாரத்தைப் பெறுவது என்பதே அவற்றின் நோக்கமாக இருந்தது.

தமது எஜமானனாகிய ரஷிய ஏகாதிபத்தியத்தின் வீழ்ச்சி, பெருமளவிலான ஆக்கிரப்புப் படையினால் ஏற்பட்ட பொருளாதாரச் சிதைவு, உள்நாட்டிலும் உலக அரங்கிலும் தனிமைப்பட்டுக் கிடப்பது ஆகியவற்றால் இனியும் தாக்குப் பிடிக்க முடியாத நிலையில், கம்பூச்சியாவின் பொம்மை அரசு, மாறிய நிலைமைகளுக்கேற்ப அமெரிக்காவின் பக்கம் தனது விசுவாசத்தைக் காட்டத் தொடங்கியது. இதன்படி ஆளுங்கட்சியான கம்பூச்சிய புரட்சிகர மக்கள் கட்சியின் பெயரிலிருந்து புரட்சி என்ற வார்த்தை நீக்கப்பட்டது. 1991-ல் நடந்த கட்சி மாநாட்டில் மார்க்சிய - லெனினிய சித்தாந்தத்தைக் கைவிட்டு, முதலாளித்துவ பலகட்சி ஜனநாயகத்தை ஏற்பதாக உறுதியளித்தது. ரஷிய அதிபர் கோர்பச்சேவ் வழியில் சோசலிசத்தால் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது; முதலாளித்துவ சந்தைப் பொருளாதாரம்தான் ஒரே தீர்வு என்று முழங்கத் தொடங்கியது.

### ஏகாதிபத்தியங்களின் மறுபங்கீட்டுத் திட்டம்

இந்நிலைமையைச் சாதகமாக்கிக் கொண்டு ஏகாதிபத்தியங்கள் ஐ.நா. மன்றத்தின் மூலம் போராளிக் குழுக்களுக்கும் கம்பூச்சிய அரசுக்குமிடையே சமாதானப் பேச்சு வார்த்தைகளை நடத்தின. 13 ஆண்டுகால உள்நாட்டுப் போரில் நிலைகுலைந்த கம்பூச்சியாவில் மீண்டும் அமைதியையும் ஜனநாயகத்தையும் நிலைநாட்டும் அக்கறையோடும், முன்முயற்சியை ஏகாதிபத்தியங்களிடம் இழந்துவிடாதிருக்கவும் போராளிக் குழுக்கள் 1991 அக்டோபரில் பாரீசில் ஓர் அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

இதன்படி அரசு படைகளுக்கும் போராளிக் குழுக்களுக்குமிடையே போர் நிறுத்தத்தைக் கடைப்பிடிப்பது, அரசு மற்றும் போராளிக் குழுக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட உயர் தேசிய கவுன்சிலை நிறுவுவது, அரசு படைகளும் போராளிகளும் தமது ஆயுதங்களைக் கையளிப்பது, ஐ.நா. அமைதிப் படையின் மேற்பார்வையில் தேர்தல் நடத்தி புதிய அரசைத் தேர்வு செய்து அமைதியையும் ஜனநாயகத்தையும் நிலைநாட்டுவது என்பது அதன் திட்டமாக இருந்தது. கம்பூச்சியாவில் பெயரளவிலான தேர்தல் நடத்தி தமது விசுவாசிகளின் அரசை நிறுவுவது, ஜனநாயக மூடுதிரையின் பின்னே இந்த அரசுக்கு சர்வதேச அங்கீகாரம் பெற்றுத் தமது கொள்ளையைத் தொடருவது என்பதே அவற்றின் நோக்கம். இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு நிலையான ராணுவம் வைத்துக் கொள்ள ஜப்பானிய வல்லரசுக்கு உரிமை இல்லாத நிலையில் அச்சட்டத்தையே திருத்தி கம்பூச்சியாவுக்கான ஐ.நா. அமைதிப் படைக்குத் தனது நாட்டு பாதுகாப்புப் படையினரை ஜப்பான் அனுப்பியுள்ளது. தெற்காசியாவை மறுபங்கீடு செய்யவும் மேலாதிக்கம் செலுத்தவும்தான் ஏகாதிபத்தியங்கள் கம்பூச்சிய விவகாரத்தில் இவ்வளவு அக்கறை காட்டின.

### மூவகை விடுதலை இயக்கங்கள்

அமைதி ஒப்பந்தப்படி உருவாக்கப்பட்ட கம்பூச்சிய தேசிய கவுன்சிலின் தலைவராக முன்னாள் அரசர் சிகானுக் ஏகமனதாகத் தேர்வு செய்யப்பட்டார். அரசர் சிகானுக் அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களால் ஆட்சியிலிருந்து தூக்கியெறியப்பட்ட போது, தமது விசுவாசப் படைகளைக் கொண்டு தேச விடுதலைப் போராட்டத்தை மேற்கொண்டார். நாடு விடுதலையடைந்த பின்னர் வியட்நாமிய கூலிப் படைகள் ஆக்கிரமித்த போதும் அதற்கெதிராகப் போராடி வந்தார். கம்பூச்சியாவின் அமைதிக்கும் ஜனநாயகத்துக்கும் பலமுறை பேச்சுவார்த்தைகளில் ஊக்கமாகப் பங்கேற்ற தேசியவாதியான சிகானுக், கம்பூச்சிய மக்களிடம் செல்வாக்கு பெற்ற தலைவராக உள்ளார். பிரெஞ்சு மொழியில் சுதந்திர ஜனநாயக கம்பூச்சிய மக்களின் இயக்கம் எனப்பொருள் தரும் ''ஃபன்சிபெக்'' (Funcinpec) எனும் கட்சியை வழிநடத்தி வருகிறார். அவர் தேசிய கவுன்சிலின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு அவரது மகன் ரனாரித் அக்கட்சியின் தலைவராகச் செயல்படுகிறார்.

கம்பூச்சியாவின் வட பகுதியில் தளப்பிரதேசங்களைக் கட்டியமைத்து ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகப் போராடி வந்த பௌத்தர்களின் தேசிய விடுதலை முன்னணி என்ற போராளிக் குழு, முன்னாள் பிரதமர் சோன்சான் தலைமையில் செயல்படுகிறது. புத்த மத குருமார்களின் ஆதரவு பெற்ற இந்த இயக்கம் அளவில் சிறியதாயினும் தேசிய விடுதலைப் போராட்டத்தில் முக்கிய பங்காற்றி வந்துள்ளது.

கம்பூச்சியாவின் மொத்த நிலப்பரப்பில் ஐந்தில் ஒரு பங்கு அளவுக்கு விடுதலைப் பிரதேசங்களை நிறுவியுள்ள கேமர்ரூஜ் இயக்கம் அளவிலும் ஆற்றலிலும்




மோசடித் தேர்தல் நடத்தி பொம்மையாட்சியை நிறுவ வந்துள்ள ஐ.நா. 'அமைதிப் படை'

படிப்பகம்

www.padippakam.com

மிகப் பெரியது. தாய்லாந்து எல்லையை ஒட்டியுள்ள பகுதியில் சுயசார்புடன் விவசாயம், கைத்தொழிலைக் கட்டி வளர்த்துள்ளதோடு, செயற்கை வைரக்கல் வெட்டியெடுப்பது, பட்டை தீட்டி ஏற்றுமதி செய்வது, மர ஏற்றுமதி முதலானவற்றின் மூலம் சுயசார்பு பொருளாதாரத்தை அவர்கள் நிறுவியுள்ளனர். ஏறத்தாழ 30,000 பேர் கொண்ட பயிற்சி பெற்ற படையைக் கொண்ட கேமர் ரூஜ் இயக்கம், விடுதலைப் பிரதேசங்களில் கல்விச் சாலைகள், மருத்துவமனைகளை நிறுவியுள்ளதோடு, ''வாய்ஸ் ஆப் கேமர்'' என்ற வானொலி நிலையத்தையும் இயக்குகிறது. ஏகாதிபத்தியவாதிகளால் கொலைவெறி பிடித்த சர்வாதிகாரியாகச் சித்திரிக்கப்படும் தோழர் போல்பாட், விடுதலைப் பிரதேசங்களில் ''முதலாவது சகோதரர்'' என்று மக்களால் அழைக்கப்படுகிறார்.

முதலாளித்துவ, குட்டிமுதலாளித்துவ வர்க்கத் தலைமையின் காரணமாக சிகானுக், சோன்சான் தலைமையிலான இயக்கங்கள் சந்தர்ப்பவாத ஊசலாட்ட நிலைப்பாடுகளை எடுப்பதும், கேமர் ரூஜ் இயக்கத்துடன் முரண்பட்டு மோதிக் கொள்வதும் தொடரவே செய்கின்றன. இருப்பினும், அவை இன்றுவரை தேச விடுதலைக்குத் துரோகமிழைக்கவோ, ஆக்கிரமிப்பாளர்களிடம் விலைபோகவோ ஒருபோதும் துணியவில்லை. இம்மூன்று போராளி இயக்கங்களும் பிரதமர் ஹுன்சென் தலைமையிலான கம்பூச்சிய அரசுடன் செய்துகொண்ட அமைதிக்கான ஒப்பந்தப்படியே 22,000 ஐ.நா. அமைதிப் படையின் மேற்பார்வையில் தற்போது தேர்தல் நடந்துள்ளது.

### மோசடித் தேர்தலும் விபரீத விளைவும்

தேர்தலுக்கு முன்னர் ஒப்பந்தப்படி அரசுப் படைகள் நிராயுதபாணியாக்கப்படவில்லை; போர் நிறுத்தத்தையும் அமைதியையும் நிலைநாட்டுவது என்ற பெயரில் போராளிக் குழுக்களின் தளப் பகுதிகளில் அரசுப் படைகள் குவிக்கப்பட்டு ஆதிக்கம் செலுத்தத் தொடங்கின. இதை கேமர் ரூஜ் இயக்கத்தினர் எதிர்த்து, அரசுப் படைகளை வெளியேற்றத் தொடங்கியதும், கேமர் ரூஜ் இயக்கம் அமைதியைச் சீர்குலைப்பதாக ஏகாதிபத்தியவாதிகள் பழிதூற்ற ஆரம்பித்தனர். ஒப்பந்தப்படி அனைத்துப் பகுதிகளிலும் போராளிகள் தேர்தல் பிரச்சாரம் செய்ய உரிமை அளிக்கப்பட்ட போதிலும், கேமர் ரூஜ் இயக்கத்தினர் தலைநகர் நாம்பென்னில் பிரச்சாரம் செய்ய முற்பட்டபோது அரசுப் படைகள் அதைத் தடுத்து தாக்கத் தொடங்கின. இதனால் தவிர்க்கவியலாமல் கேமர் ரூஜ் இயக்கம் எதிர்த்தாக்குதல் நடத்த நேரிட்டது. இதைக் காரணம் காட்டி கேமர் ரூஜ் கட்டுப்பாட்டிலுள்ள விடுதலைப் பிரதேசங்களுக்கு ஐ.நா. அமைதிப் படை பொருளாதாரத் தடைகளை விதிக்கத் தொடங்கியது. அப்பகுதியின் வைரக்கல் மற்றும் மர ஏற்றுமதியையும் தடுத்து நிறுத்தியது. அமைதிக்கும் ஜனநாயகத்துக்குமான முயற்சியை கேமர் ரூஜ் சீர்குலைப்பதாக அரசுப் படைகளோடு சேர்ந்து கொண்டு பழிதூற்றியது.

ஏகாதிபத்தியவாதிகள் கேமர் ரூஜ் இயக்கத்தின் அவதூறு செய்து தாக்குவதற்கு அது நீண்ட காலமாக உறுதியாகப் போராடி வருவது மட்டும் காரணமல்ல; உலகெங்கும் கம்யூனிசம் தோற்றுவிட்டதாக அவர்கள் மார்தட்டிக் கொண்டிருக்கும் வேளையில், கேமர் ரூஜ் இயக்கம் கம்யூனிசப் பதாகையை ஏந்தி விடுதலைப் போரில் முன்னேறி வருவதே முக்கியக் காரணம். எனவேதான் இரட்டிப்பு வெறியோடு அதன் மீது தாக்குதல் தொடுத்து அழித்தொழிக்க முற்பட்டார்கள்.

இதை நன்குணர்ந்த கேமர் ரூஜ் இயக்கம், ''தற்போதைய ஹுன்சேன் அரசைச் சட்டபூர்வமாக நியாயப்படுத்தும் வகையிலேயே ஐ.நா. அமைதிப் படை செயல்படுகிறது; இத்தகைய சூழ்நிலையில் நடத்தப்படும் தேர்தல் மோசடியானது'' என்று குற்றம் சாட்டியதோடு, இம்மோசடித் தேர்தலைப் புறக்கணிப்பதாகவும் அறிவித்தது. ஐ.நா. அமைதிப் படைக்கு விருந்தும் விபச்சார சுகமும் அளித்து ஹுன்சேன் அரசு குறுக்கு வழியில் வெற்றி பெற முயல்வதாக இதரப் போராளி இயக்கங்கள் குற்றம் சாட்டிய



ஏகாதிபத்திய அடிவருடி; துரோகப் பிரதமர் ஹுன்சென்

போதிலும் அவை தேர்தலில் பங்கேற்றன. இருப்பினும் இவ்வியக்கங்களுக்கும் அரசுப் படைகளுக்குமிடையே ஒப்பந்தத்தை மீறி மோதல்கள் தொடர்ந்ததால் எந்நேரத்திலும் அவை தேர்தலைப் புறக்கணிக்கக் கூடிய சூழ்நிலையே நிலவியது.

கடந்த மே மாத இறுதியில் 5 நாட்கள் நடந்த தேர்தலின் போது, போராளிகளின் செல்வாக்குள்ள பகுதிகளில் 30% அளவுக்கே வாக்குப் பதிவு நடந்தது. மோதல் நடக்கலாம் என்ற அச்சம் காரணமாக 25% பகுதிகளில் வாக்குச்சாவடிகள் ரத்து செய்யப்பட்டன. அடையாள அட்டை உள்ள வாக்காளர்கள் எங்கு வேண்டுமானாலும் வாக்களிக்கலாம் என்று நடமாடும் வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டன. இந்நிலையில் 80%-க்கு மேலாக வாக்குகள் பதிவாகியதாக அரசும் ஐ.நா. கண்காணிப்புக் குழுவும் காதில் பூ சுற்றின. தேர்தலில் பங்கேற்ற போராளிக் குழுக்கள், அரசுப் படைகள் தேர்தல் தில்லுமுல்லுகளில் ஈடுபட்டதைப் பகிரங்கமாகக் குற்றம் சாட்டின. ஆனாலும் ஆளுங்கட்சி அறுதிப் பெரும்பான்மையைப் பெறமுடியவில்லை. சிகானுக்கின் ஃபன்சின்பெக் கட்சியே அதிக இடங்களைக் கைப்பற்றியது. இருப்பினும் அக்கட்சியும் மூன்றிலிரு பங்கு பெரும்பான்மையைப் பெறவில்லை. சோன்சானின் பௌத்தர்கள் முன்னணிக் கட்சி 9 இடங்களை மட்டுமே கைப்பற்றியது.

### அதிகாரத்தில் நீடிக்க ஆளும் கும்பலின் சதிகள்

தேர்தல் தோல்வியைக் கண்டு பீதியடைந்த ஆளும் கட்சி, தேர்தலில் தில்லுமுல்லுகளும் மோசடிகளும் நடந்துள்ளதாகப் புலம்பத் தொடங்கியது. தேர்தல் முடிவுகளை ஏற்கமாட்டோம் என்று சவடால் அடித்த ஆளும் கும்பல், பின்னர் எப்படியாவது அதிகாரத்தில் ஒட்டிக் கொள்ளும் நோக்கத்துடன் ஃபன்சின்பெக் கட்சியுடன் சேர்ந்து கூட்டணி ஆட்சி அமைக்கும் திட்டத்தை அறிவித்தது. அரசர் சிகானுக்கைப் பிரதமராகவும், அவரது கட்சியின் சார்பில் அவர் மகன் ரானாரித்தும், ஆளும் கட்சியின் சார்பில் தற்போதைய பிரதமர் ஹுன்சேனும் துணைப் பிரதமர்களாகவும் கொண்டு கூட்டணி ஆட்சி அமைக்கும் இத்திட்டத்தை முதலில் சிகானுக் ஏற்றுக் கொண்டார். இப்படிச் செய்வது சட்டவாத ஆட்சிக் கவிழ்ப்பாகும் என்று அவரது கட்சியிலேயே எதிர்ப்பு பெருகத் தொடங்கியது. மேலும், ஆளுங்கட்சியினர் மீண்டும் அதிகாரத்தில் ஒட்டிக் கொள்வதன் மூலம் ராணுவ ஆட்சிக் கவிழ்ப்புக்கான அபாயம் நிலவுவதை உணர்ந்ததும் சிகானுக் கூட்டணி ஆட்சித் திட்டத்தை ஏற்க மறுத்துவிட்டார்.

கடைசியில் எந்தக் கட்சியும் அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்க முடியாமல் போய் அரசியல் நெருக்கடியும் குழப்பமுமே எஞ்சி நிற்கிறது. கேமர் ரூஜ் இயக்கத்தை அழித்தொழித்துவிட்டு, தமது விசுவாச கும்பலை ஆட்சியில் அமர்த்திவிடலாம் என்று ஏகாதிபத்தியங்கள் கனவு கண்டன. ஆனால் அவற்றின் கேடுகெட்ட நோக்கங்கள் அம்பலப்பட்டு தோல்வியடைந்து, இன்னுமொரு ஆப்கானாக கம்பூச்சியா மாறும் அபாயமே நீடிக்கிறது. தேர்தல் முடிவுகளை ஏற்க மறுத்த ஆளும் கும்பல் வியட்நாமை ஒட்டியுள்ள கம்பூச்சியாவின் கிழக்கேயுள்ள 6 மாநிலங்களைப் பிரித்துக் கொண்டு தனியே ஆட்சி செய்யப் போவதாக இப்போது அறிவித்துள்ளது. ஒப்பந்தத்தை மீறி ஆளுங்கும்பல் நாட்டைத் துண்டாடி ஆக்கிரமித்துக் கொண்டதை ஒரு பிரிவு ஏகாதிபத்தியங்கள் மறைமுகமாக அங்கீகரிக்கவும் தொடங்கிவிட்டன. இந்நிலையில், ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசிய - ஜனநாயக சக்திகள் ஐக்கியப்பட்டு போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதைத் தவிர வேறு வழியில்லை. ஆளும் ஹுன்சேன் - ஹெங்சாமரின் சர்வாதிகாரக் கும்பலைத் தூக்கியெறியாமல் கம்பூச்சியாவில் அமைதியையும் ஜனநாயகத்தையும் நிலைநாட்ட வேறு பாதையுமில்லை.

● மனோகரன்

படிப்பகம்

www.padippakam.com

# வீதிக்கு வந்த வெட்கங்கெட்டதுகள்

ஜெயலலிதாவுக்கும் காங்கிரசுக்கும் பதவி - அதிகார வெறியில் நடக்கும் ''ஆடு-புலி ஆட்டம்'' சில மாதங்களாக தமிழக அரசியலை ஆக்கிரமித்துள்ளது. தற்போது காங்கிரசு நகர்த்தியிருக்கும் காய் - அதாவது கவர்னர் பீஷ்மநாராயணசிங் வீட்டுக்கனுப்பப்பட்டு முன்னாள் ஆந்திர காங்கிரசு முதல்வர் சென்னாரெட்டி புதிய கவர்னராக நியமிக்கப்பட்டது. ஜெயாவை ஆட்சிக் கலைப்பு பீதியின் உச்சத்திற்கே தள்ளியுள்ளது. வழக்கத்துக்கு மாறாக மத்திய ஆட்சியாளர்களின் 'கைப்பாவை'யாக இருப்பதற்குப் பதில் மாநில அரசின் பாதுகாவலராக குறிப்பாக, ஜெயலலிதாவிற்கு கேடயமாக விளங்கியதே பீஷ்மர் செய்த குற்றம். கவர்னர் மாற்றம் செய்தியறிந்ததுமே மனமுடைந்துபோன ஜெயலலிதா, தனது நிகழ்ச்சிகள் - சுற்றுப்பயணங்கள் ரத்து செய்துவிட்டு சிலநாட்கள் போயஸ் தோட்டத்திற்குள்ளேயே முடங்கிப் போனார்.

சென்னாரெட்டி, ஜெயலலிதாவைப் போலவே ஆணவம், அதிகாரத்திமிர் பிடித்தவர். ராஜஸ்தான் கவர்னராக இருந்தபோது மாநில அரசு விவகாரங்களில் அத்துமீறி தலையிட்டு சர்ச்சைக்குள்ளானவர். ஊழல் குற்றச்சாட்டு காரணமாக பலமுறை பதவி பறிக்கப்பட்டு ஆந்திராவில் ஆட்சியை இழந்தவர். இந்திராகாந்தி காலத்தில் இவ்வாறு முதல்வர் பதவி பறிக்கப்பட்டபின் மாநில அரசியலில் தொல்லை தரக்கூடாது என்பதற்காக பஞ்சாப் கவர்னராக்கப்பட்டார். ஆனால் சென்னாரெட்டி பஞ்சாப் கவர்னர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு ஆந்திராவிற்கு வந்து தனிக்கட்சி தொடங்கி காங்கிரசுக்கு தொல்லை கொடுத்தார். பிறகு ராஜீவ் காலத்தில் காங்கிரசில் இணைந்து கவர்னர் பதவி பெற்று திருப்தியடைந்திருந்தார். ராவ் தலைமைக்கு வந்ததும் மீண்டும் வாழ்வு கிடைத்து முதல்வரான சென்னாரெட்டி, ஊழல் மற்றும் கோஷ்டிப் பூசலால் பதவி பறிக்கப்பட்டு கவர்னராக்கப்பட்டார். இப்போதுகூட ராஜஸ்தான் காங்கிரசு கட்சி விவகாரங்களில் தலையிட்டு கட்சிக்காரர்களிடமிருந்து, எதிர்ப்பு வரவே இவரை அங்கிருந்து தூக்க வேண்டியிருந்ததாலும் ஜெயலலிதாவை எதிர்கொள்ள பொருத்தமானவராக சென்னாரெட்டி இருப்பார் என்றும் கணித்து தமிழக கவர்னராக்கியுள்ளது காங்கிரசு.

கவர்னர் மாற்றம் செய்தி வந்ததுமே ஜெயலலிதா ஆட்சி கலைந்துவிடும் என்ற வதந்தியும், பீதியும் பரவியது. மஞ்சள் பத்திரிக்கைகளும், கிசுகிசு பத்திரிக்கைகளும், கற்பனை வளத்தோடு அதிக புரளி கிளப்பிவிட்டு காசு பார்த்தன. இதனால் சென்னாரெட்டி ''என்னால் ஜெயலலிதா ஆட்சிக்கு எந்த தொந்தரவும் வராது'' என்ற பீடிகையோடு பதவியேற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இன்னமும் ஆட்சிக் கலைப்பு பீதி பரப்பப்படுவது ஒருபுறமும் அதற்கு கண்டனம் தெரிவிப்பவர்களின் அறிக்கைகள் ஒருபுறமும் வந்து கொண்டிருக்கின்றன. ''இனி ஜெயலலிதாவிற்கு எதிரான ஊழல் வழக்கு மனுக்கள் (சுப்ரமணியசாமி மற்றும் கருணாநிதி கொடுத்தவை) மீது நடவடிக்கை எடுத்து ஜெயாவின் எம்.எல்.ஏ. பதவி பறிக்கப்படும்'' என்றும், ''அல்லது குறைந்தபட்சம் பிரச்சினையை கிளப்பிவிட்டு ஜெயாவிற்கு சென்னாரெட்டி தலைவலியாக செயல்படுவார்; இவர் கொடுக்கும் நெருக்கடியில் ஜெயலலிதா தானாக ஓடினாலும் ஓடிவிடுவார்' என்றும் யூகங்கள் - கணிப்புகள் வெளிவருகின்றன.

ஜெயாவின் பல்லை பிடுங்கும் தமது நோக்கத்திற்கு நந்தியாக இருந்த பீஷ்மரை மிரட்டி ராஜினாமா செய்ய வைத்து பொருத்தமான நபராக சென்னாரெட்டியை காங்கிரசு நியமித்திருந்தாலும், எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற முறையில் ஆட்சியைக் கவிழ்த்து காங்கிரசு அவப்பெயர் சம்பாதித்து கொள்ளாது. ஜெயா எதிர்ப்பையே மூலதனமாக்கி அரசியல் நடத்தி தமிழக காங்கிரசு கட்சிக்கு வாழ்வளிக்க முயல்வதால், மசூதி இடிப்பை சாக்கிட்டு பாரதிய ஜனதா ஆளும் மாநில அரசுகளை கலைத்ததுபோல் ஒரு வலுவான சாக்கு கிடைக்கும் வரை காங்கிரசு, ஜெயா ஆட்சியைக் கலைக்காது. அதுவரை ஜெயாவை சந்திக்கு இழுத்து நாறடிக்கச் செய்து 'ஸ்டண்ட்'' அடிக்கும். ஜெயாவை எதிர்த்த தமது லாவணிக் கச்சேரியையும், குதிரை வியாபாரம் போன்ற குறுக்குவழி சதி முயற்சிகளையும் தொடரவே செய்யும்.

☆ ☆ ☆

''ஊழல்'', ''சட்டம் - ஒழுங்கு கெட்டுவிட்டது'', ''அதிராக முறைகேடு'' போன்றவற்றை மையமாக வைத்து பல முறை லாவணி பாடி முடித்த காங்கிரசு மற்றும் ஜெயா கும்பல் இறுதியாக ''புலிகளுடன் கள்ள உறவு'' என்ற தலைப்பிலும் லாவணி பாடி முடித்துள்ளன.

**ஜெயலலிதாவின் ஊழலை எதிர்ப்பதற்கு காங்கிரசுக்கு என்ன தகுதியிருக்கிறது? கருணாநிதி ஆட்சியைக் கலைக்க சூத்திரதாரியாக இருந்த ஜெயலலிதாவுக்கு காங்கிரசின் சதியை எதிர்க்க என்ன அருகதையுள்ளது?**

காங்கிரசு, ஜெயாவின் டான்சி ஊழல், ஸ்பிக் ஊழல், ஜெயா பப்ளிகேசன்ஸ் ஊழல் முதலியவற்றை பற்றி கத்திய பொழுது காங்கிரசின் ஊழலையும் பங்கு சந்தை ஊழலையும் எடுத்து பதிலுக்கு வைத்து எதிர்ப்பாட்டு பாடினர், ஜெயாவின் துதிபாடிகள். தமிழகத்தில் அடக்குமுறை, சட்டம்-ஒழுங்கு சீர்கேட்டை காங்கிரசு கையிலெடுத்து தாக்கியபோது அ.தி.மு.க., காங்கிரசு ஆளும் மாநிலங்களில் நடப்பவைகளை எதிராக நிறுத்தி அதே கூச்சல் போட்டது. இடைத்தேர்தலில் ஜெயா, அரசு நலத்திட்டங்களை அறிவித்த அதிகார முறைகேட்டை சந்திக்கு இழுத்து ராணிப்பேட்டை தேர்தலை ரத்து செய்த காங்கிரசுக்குப் பதிலடியாக இதே காரணத்திற்காக ரத்து செய்யப்பட்ட காங்கிரசு ஆளும் மாநிலத்தின் இடைத்தேர்தல் (கல்கா தொகுதி) ரத்தை பற்றி பேசியது, அ.தி.மு.க. சென்னையில் சட்டமன்றத்தில் காங்கிரசு ரகளை செய்தால் பதிலுக்கு டில்லியில் பாராளுமன்றத்தில் ரகளை செய்தது, அ.தி.மு.க. புலிகளுக்கும் - ஜெயாவுக்கும் ரகசிய உறவு உள்ளது என்று காங்கிரசு கூறினால் பதிலுக்கு உனக்குதான் உறவு உள்ளது என்று சக்களத்தி சண்டை போட்டது ஜெயா கும்பல். அரங்கநாயகத்தின் ஆசிரியர் பயிற்சி பள்ளி ஊழலை காங்கிரசு பெரிதுபடுத்தி பதவி விலகு என நெருக்கடி கொடுத்தால் பதிலுக்கு மத்திய அரசு சிறப்பு பாதுகாப்பு பூனைப்படையை திரும்ப பெற கொடுத்த நெருக்கடியை 'வெளிச்சத்திற்கு கொண்டு வந்து' காங்கிரசை தூற்றினார், ஜெயலலிதா.

ஆனாலும் இத்தகைய லாவணிக் கச்சேரியில் ஜெயா கும்பல் கூடுதலாகவே அம்பலப்பட்டுப் போனது. குறிப்பாக அண்மையில் நடந்த ''புலிகளுடன் ரகசிய உறவு'' என்ற சக்களத்திச் சண்டையில் தன்னைத் தானே தோலுரித்துக் கொண்டார் ஜெயலலிதா. கருணாநிதிக்கு எதிராக தான் எய்த ''புலிகருடன் ரகசிய உறவு'' என்கிற அம்பையே காங்கிரசு திருப்பி தன் ஆட்சி மீது எய்ததால் ஜெயலலிதாவின் அலறலும் உளறலும் அதிகரித்தன.

சென்னை வந்த நரசிம்மராவை வரவேற்காதது; அரவ்து நிகழ்ச்சிகளை புறக்கணித்தது; திடீரென ஞானம் வந்தவராய் ஓடிப் போய் சந்தித்து பின்னர் பத்திரிக்கைகளுக்கு ''ஆட்சிக் கவிழாது; மிரட்டல் இல்லை'' என்று பேட்டியளித்தது. அடுத்த நாளே ''அய்யோ! ஆட்சியைக் கலைக்க சதி நடக்கிறது'' என அலறியது; புலிகளுடன் தனக்கு உறவில்லை; ஆபத்துதான் உள்ளது என்று காட்டுவதற்காக 'கிளைடர்' விமானம் மூலம் புலிகள் தன்னை கொல்ல முயன்றதாக புரளி கிளப்பியது; சிறையிலிருந்து தப்பித்தது ராஜீவ், பத்மனாபா கொலையில் தொடர்புள்ள புலிகள் இல்லை என்றும் சைதாப்பேட்டையிலிருந்து தப்பித்த புலி சார்லஸ் மாநில நிர்வாக கட்டுப்பாட்டிலிருந்தவரல்ல, மத்திய சிறப்பு புல

படிப்பகம்

www.padippakam.com

னாய்வுக் குழுவின் கட்டுப்பாட்டில் உள்ள வர் என்றும் தாறுமாறாகப் பேசியது எல் லாம் ஜெயலலிதாவிற்கு பீதியில் பைத்தி யம் பிடித்துவிட்டதோ என்றே கருத வைத் தது.

''ஜெயலலிதா புலிகள் மீதான நடவ டிக்கையில் ஊசலாட்டம் காட்டுகிறார்'' என்ற எஸ்.பி.சவானின் அறிக்கைக்கு பதில றிக்கை வெளியிட்ட ஜெயலலிதா, சவான் கடந்த நவம்பர் மாதம் சென்னையில் தன்னை சந்தித்தபோது புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தச் சொல்லி சொன்னதாகக் கூறினார். காங்கிரசுக்கும் புலிகளுக்கும் உள்ள தொடர்பை விரைவில் ஆதாரங்க ளோடு நிரூபிப்போம் என்று ஜெயாவின் துதிபாடிகள் குதித்தார்கள். இதுபோன்ற அறிக்கைகள், புலிகள் தப்பியது மத்திய உளவு துறையின் சதிவேலைதான் என் கைதான புலி ஒருவர் மூலம் பொய் வாக்கு மூலம் ஜெயா வாங்கியது போன்ற தில்லு முல்லுகள் மற்றும் ''அய்யோ ஆட்சியைக் கலைக்க சதி'' என்ற வெற்றுக் கூச்சல்கள் மூலமே காங்கிரசின் புலி குற்றச்சாட்டை முறியடிக்க முன்னந்தார் ஜெயா. அதில் கணிசமான அளவிற்கு வெற்றியும் பெற் றார்.

மேலும் தப்பித்த புலிகளில் சிலர் 'சர ணடைந்தது', போலீசு அதிகாரிகளை தற்கா லிக பதவி நீக்கம் செய்தது, விசாரணை கமி ஷன் அமைத்தது போன்றவற்றை முன்னி றுத்தி கூச்சல் போட்டது ஜெயா கும்பல். எதிர்க்கட்சிகளும் புலிகள் விவகாரத்தைக் கிளப்பி அ.தி.மு.க. ஆட்சியை காங். கலைக்க முயல்வதை கண்டித்தன. தி.மு.க. வும், பா.ம.க.வும் புலிகள் பிரச்சினைக்கு மாறாக ஊழல் தொடர்பாகவே ஜெயா ஆட்சி கவிழ வேண்டும் என்று கூறி பிரச்சா ரம் செய்தன. இக்காரணங்களால் 'ஜெயா-புலி உறவு' குற்றச்சாட்டை மையப்படுத்தி காங்கிரசால் எடுத்துச் செல்ல முடிய வில்லை; ஆட்சியைக் கலைக்க துருப்புச்சீட் டாகவும் பயன்படுத்த முடியவில்லை.

எதிரெதிராக லாவணி பாடி காலை வாரிவிட்டு கொள்வது மட்டுமல்ல, பொறுக்கி-கழிசடை அரசியலுக்கு உரிய தன்மையில் அடிதடி, ஆள்கடத்தல், சதிகள்-பேரங்கள் மூலமும் மோதிக் கொள்கிறார் கள். நாடாளுமன்ற குதிரை வியாபாரத்தின் மூலம் அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களுக்கு பதவி-பண ஆசைக்காட்டி காங்கிரசு இழுக்க முயல்வதும் அவர்களுக்கு மந்திரி பதவிகளையும், வாரியத் தலைவர் பதவிக ளையும் வாரி வழங்கி வளைத்துப்போட்டு, ஜெயா ஆட்சியைத் தக்க வைத்துக் கொள் வதும் நடக்கிறது. ஜெயாவை எதிர்த்து காங் கிரசு எம்.எல்.ஏ.க்கள் சட்டமன்றத்திலோ அதற்கு வெளியிலோ ரகளை செய்து கொண்டிருந்தால் தமது அடியாட்படை களை ஏவி அவர்களைத் தாக்குவது என்ப தும் போலீசு அடக்குமுறை மூலம் அவர்க ளுக்குத் தொல்லை கொடுப்பதும் ஜெயலலி தாவின் வாடிக்கையாக உள்ளது.

ooo

**பொ**றுக்கி-கழிசடை அரசிய லின் ஏகோபித்த பிரதிநிதிகளாக தம்மை நிலைநிறுத்திக் கொள்வதில் ஜெயா கும்ப லும் காங்கிரசும் அண்மைக் காலமாக வெற்றி பெற்றுள்ளார்கள். பதவி-சுயநல வெறியில் ஒரே குட்டையில் ஊறும் மட்டை கள் இவர்கள். ஒருவரையொருவர் எதிர்த்து சவடாலடிப்பது எல்லாம் ஒன்று பதவியை - ஆட்சியை பிடிப்பதற்காக இருக்கும் அல்லது அதை தக்க வைத்து கொள்ளையடிப்பதற்கும் சுகம் தேடுவதற் காகவே இருக்கும்.

புலிகளை தமது தேர்தல் ஆதாயத்திற் காக முன்பு ஆதரித்தவர் ஜெயலலிதா. தமது பிராந்திய மேலாதிக்க நோக்கத்திற் காக புலிகளை பயன்படுத்தி ஆயுத பயிற்சி கொடுத்து உறவாடியது காங்கிரசு. தமது ஆட்சி - பதவி நெருக்கடி காரணமாக இரு கும்பலுமே புலிளை எதிர்த்து அடக்கி ஒடுக் குவதிலும் ராஜீவ் கொலைக்குப் பிறகு கைகோர்த்து செயல்பட்டன. இன்று புலிகள் பீதியூட்டி ஆதாயம் தேடுகின்றன. பணம் - பதவி - புகழ் என்றால் இவர்கள் தலைகீழா கவும் நிற்பார்கள்; யார் வாலையும் பிடிப் பார்கள்; எவர் காலையும் நக்கிப் பிழைப் பார்கள். நேற்று ஒன்றும் நாளை ஒன்றுமாக பல்டி அடிப்பதும், கூடி குலாவுவதும், முறைத்துக் கொள்வதுமாக இவர்களின் அரசியல் விபச்சாரத்தனத்திற்கு அளவே இல்லை.

மத்தியிலிருக்கும் கழிசடைகள், தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி எந்த மாநில ஆட்சியையும் எந்த காரணத்திற்காகவும் காரணமே இல்லாமலும் கூட இஷ்டத்திற்கு கலைப்பதும் அதுவும் முறைகள் மீறி கவர் னர் கவனத்திற்கு செல்லாமலே ஜனாதிபதி யைக் கொண்டே கலைக்கவும் தயங்குவ தில்லை. இதையே மாநில அளவிலிருக்கும் கழிசடைகள் உள்ளூராட்சி, பஞ்சாயத்து அமைப்புகளை கலைத்து. நாட்டாண்மை செலுத்துகிறார்கள். ஊழலை எதிர்த்து அம் பலப்படுத்திக் கொள்ளும் இக்கும்பல் ஆட் சிக்கு வந்து பதவியிலிருக்கும் போது எதி ராளியின் எந்த ஊழலையும் ஆதாரப்பூர்வ மாக நிரூபித்து தண்டித்ததில்லை. மாறாக பதவி இருக்கும்வரை தாம் சுருட்டுவதி லேயே குறியாய் இருக்கிறார்கள். தமது சுருட்டலை மறைப்பதற்காக வேண்டுமா னால் எதிரணியினரின் ஊழலை கிளப்பிவி டுகிறார்கள்.

தமது ஆட்சிக் கலைக்கப்பட்டால் 356-வது சட்டப்பிரிவை எதிர்ப்பது, இந்த அமைப்பு முறைகளையே காலில் போட்டு மிதிப்பது; மாற்றான் ஆட்சியைக் கலைக்க 356-வது சட்டத்தை பயன்படுத்துவது, இந்த சட்ட - அமைப்பு முறைகளை எல் லாம் உயர்த்திப் பிடித்து உச்சாணிக் கொம் பில் வைத்து புகழ்வது - வக்காலத்து வாங் குவது என்பது காங்கிரசு, ஜெயா மட்டு மல்ல ஜனதாதளம், தி.மு.க., பா.ம.க., போலி கம்யூனிஸ்டுகள் உட்பட அனைவ ரது நடைமுறையும் இதுவே. 356-வது சட் டப்பிரிவைப் பயன்படுத்தி ஜெயாவின் ஊழல் ஆட்சியைக் கலைப்பதில் தவ றில்லை என்று பேசி வருகிறது, தி.மு.க. ஜெயா ஆட்சியை ஊழல் காரணம் சுமத்தி கலைக்கும்படி காங்கிரசிடம் தி.மு.க.வும் பா.ம.க.வும் கோருகின்றன. போலி கம்யூ னிஸ்டுகளோ, இந்த அமைப்பு முறை மீதும் ஜனநாயகத்தின் மீதும் மக்கள் நம்பிக்கையி ழந்துவிடக் கூடாது என்கிற அடிப்படை யில் காங்கிரசின் ஆட்சிக் கலைப்பு முயற்சி களை கண்டிக்கிறார்கள். இவர்கள் இக்கேடு கெட்ட சமூக அமைப்பிற்கு வெளியே, இக் கழிசடை அரசியலுக்கு அப்பாற்பட்ட முறையிலே மாற்றம் காண முனைவ தில்லை. பன்றித் தொழுவத்திற்குள்ளேயே கருப்பு, சிவப்பு, வெள்ளை என்று 'கலர் கலராகவே' சுற்றி வர விரும்புகிறார்கள்.


எனவே இந்த கழிசடை அரசியல் - அமைப்பு முறைக்கு வெளியே தீர்வு காணு கிற பாதையை முன்வைக்காத எந்த கட்சி யும் பாசிச ஜெயா - காங்கிரசு கும்பலுக்கு மாற்றாகிவிட முடியாது. ஜெயா - காங்கிரசு கும்பல்களின் லாவணிகளையோ, அரசி யல் பொறுக்கித் தனங்களையோ, ஊழல் கள், அதிகார முறைகேடுகள், சதிவேலைக ளையோ தடுத்து நிறுத்தவும் முடியாது.

● ராசு



**கவர்னர் சென்னாரெட்டியை வரவேற்கும் ஜெயா: அதிகார-ஆணவத்திமிர் பிடித்த 'ஜோடிகள்'**

படிப்பகம்



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

★ அமெரிக்காவின் மூலதனத்திற்கும் மட்டுமல்லாது அதனின் கலாச்சார சீரழிவுகளுக்கும் கதவுகளை அகலத் திறந்துவிட்டுள்ளது சீன அரசு. சர்வதேச விபச்சாரிகளுள் ஒருத்தியான மடோனாவிற்குத் தனது நிகழ்ச்சிகளைச் சீனாவில் நடத்திக் கொள்ள தற்பொழுது அனுமதி வழங்கியுள்ளது. 'முழு நிர்வாணக் காட்சிகள் கூடாது' என்ற நிபந்தனையின் பெயரில் அனுமதித்துள்ள டெங் கும்பல், 'மடோனாவிற்குப் பால்வினை நோய்களோ மற்றும் எய்ட்ஸோ (AIDS) இல்லாததும்' இந்த அனுமதிக்கு ஒரு காரணம் எனத் தனது செயலுக்கு நியாயம் கற்பித்துள்ளது.

★ ஜூன் முதல் வாரத்தில் ஜெர்மனியின் நவீன நாஜிகள் துருக்கிய தொழிலாளர் குடியிருப்பு ஒன்றினைத் திட்டமிட்டு தாக்கியதில் 4 சிறுமிகளும் 1 பெண்ணும் தீக்கிரையாகி மாண்டு போயுள்ளனர். இது கடந்த 6 மாதத்திற்குள் துருக்கியர்களின் மீது நடத்தப்பட்ட இரண்டாவது தாக்குதலாகும். கடந்த ஆண்டு டிசம்பரில் நடந்த தாக்குதலில் மூன்று துருக்கியர்கள் இறந்து போயினர். ஜெர்மனின் பொருளாதார முன்னேற்றத்துக்கு மற்றொரு காரணமான ஜெர்மானியர் அல்லாத வெளி நாட்டுத் தொழிலாளர்களுள் பெரும்பான்மை சதவீதத்தினர் துருக்கியர்கள். இரண்டாம் உலகப் போருக்குப்பின் பல பத்தாண்டுகளாகவே ஜெர்மனியிலேயே தங்கி வேலை செய்துவரும் துருக்கியர்களில் பெரும்பான்மையினருக்கும், மற்றும் பல நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கும் இன்றும் குடியுரிமை மட்டுமின்றி வீட்டு வசதி உள்ளிட்ட மற்றும் பல அடிப்படை வசதிகள் கூட மறுக்கப்பட்டு வருகின்றன. இரட்டை குடியுரிமை வழங்குவது எனும் திட்டம் வரையப்பட்டு பின் கைவிடப்பட்டது. இதனிடையே பல பத்தாயிரக்கணக்கான ஜெர்மானியர்கள் மற்றும் வெளி நாட்டவர்களின் எதிர்ப்பையும் மீறி அரசியல் தஞ்சம் கோரும் மற்றும் குடியுரிமை சட்டப் பிரிவினைக் கடுமையாக்கியுள்ளது கோல் அரசாங்கம். பெருகிவரும் நாஜிகளின் தாக்குதல்கள் இதனால் கட்டுப்படுத்தப்படும் என அரசு தரப்பில் கூறினாலும், இச்சட்ட திருத்தம் தீவிர வலது சாரிகளின் வெற்றியையே குறிப்பதை, இம்மாதத் துவக்கத்தில் நடந்துள்ள வெளி நாட்டவர்களின் மீதான இரு தாக்குதல் சம்பவங்கள் மெய்ப்பிக்கின்றன. தீவிர வலது சாரிகளின் தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து பிரான்சிலும் ஜெர்மனியைப் போன்று அரசியல் தஞ்சம் கோரும் மற்றும் குடியுரிமை சட்டப்பிரிவு கடுமையாக்கப்பட்டுள்ளது.

★ பீகாரில் இந்திய மக்கள் முன்னணி இரண்டாக உடைந்து போயுள்ளது. தலைமையின் அதிகாரத்துவப் போக்குதான் தங்களின் விலகலுக்குக் காரணம் எனக் கூறிக் கொள்ளும் பிரிந்து சென்றவர்கள், வேறு பெயரில் தங்களைத் தனி அமைப்பாக அமைத்துக் கொண்டு ஜனதா தளத்தையும், லல்லு பிரசாத் யாதவ் தலைமையையும் ஆதரிக்கப் போவதாக அறிக்கை விடுத்துள்ளனர். ஓட்டுக் கட்சிகளின் பாதையில் இறங்கி அதனுடன் மண்டல் கமிஷன் பரிசீலனைகளை 'சமூக நீதி' எனச் சித்தரிக்கத் தொடங்கியதிலிருந்தே இந்திய மக்கள் முன்னணியின் முக்கிய உறுப்பினர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் அவ்வமைப்பிலிருந்து விலகி ஜனதா தளத்துடன் இணையும் போக்கு அதிகரிக்கத் தொடங்கியது. அதனின் தொடர்ச்சியாகத்தான் நாம் இதனைக் காண முடியும். அதனுடன் மேல் மட்ட தலைவர்களிடம் காணப்பட்ட ஊழல் போக்குகளும் இப்பிளவுக்கு ஒரு காரணம் என அடிமட்ட ஊழியர்கள் தெரிவித்துள்ளனர். ஆனால் முன்னணியின் தலைமையோ கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டாத கதையாக 'விவசாயப் பிரச்னையிலும், ஆயுத போராட்டப் பிரச்னையிலும்' ஏற்பட்ட கருத்து முரண்பாடுகளின் காரணமாக அவர்களை வெளியேற்றியுள்ளோம் எனத் தத்துவார்த்த முலாம் பூசியுள்ளது.

★ உலக அமைதிக்காகவும், மக்களிடையே இணக்கத்திற்காகவும்தான் அயோத்தியில் சோம யாகத்தை நடத்தியதாக இரகசிய உலகப் பேர்வழி சந்திரா சாமி அறிக்கை விடுத்துள்ளார். ஆனால் இந்து சாமியார்களையும், மடாதிபதிகளையும் தனது பக்கம் ஈர்த்துக் கொள்வதன் மூலம் பாபர் மசூதி வளாகத்தினுள் அவர்கள் தலைமையில் ராமர் கோயிலைக் கட்டி ஆர்.எஸ்.எஸ்.-ஐ வீழ்த்திவிடலாம் எனும் நோக்கத்துடனேயே காங்கிரஸ் இந்த யாகத்தை சந்திர சுவாமியைக் கொண்டு நடத்தி முடித்துள்ளது. 'தற்காலிகமாகக் கட்டப்பட்டுள்ள ராமர் கோவிலை அப்புறப்படுத்த திட்டமிட்டுள்ளனர்' எனப் பிரச்சாரம் செய்து சட்ட ஒழுங்கு பிரச்னையை ஏற்படுத்தி யாகத்தைத் தடுக்க வி.எச்.பி. முயன்ற பொழுது கவர்னர் வோராவைக் கொண்டு அரசு இயந்திரத்தையே தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டது காங்கிரசு. அதனுடன், சந்திரா சுவாமியின் மூலம் 'மசூதி இருந்த வளாகத்தினுள் கோவிலை மட்டும்தான் கட்ட வேண்டும். மசூதியை முஸ்லீம்கள் அதிகம் வாழும் பகுதியில் கட்டிக் கொடுக்கலாம்' என்ற அறிக்கையினை விடுக்கச் செய்து தனது இந்து மதவெறியை அப்பட்டமாகக் காட்டிக் கொண்டுள்ளது.

★ மேகலா - சென்னையைச் சேர்ந்த 22 வயதான இளம்பெண். எட்டு மாதங்களுக்கு முன்புதான் ஆந்திராவிலுள்ள ஓங்கோல் பகுதியைச் சேர்ந்த தக்ஷு பாபு என்பவருக்கு மணமுடிக்கப்பட்டாள். இன்று அவள் இருப்பதோ சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனையில். வெள்ளித் தாலியும், ஸ்டீல் பீரோவும் வரதட்சணையாகக் கொண்டு வரவில்லை என்பதால், மாமியாரும், மாமனாரும், கணவனும் அவளின் தலைமுடியையும், கைகளையும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு அடர் கந்தக அமிலத்தைக் குடிக்க வைத்துள்ளனர். குடித்த மறுநிமிடமே அவளது தொண்டைக் குழி முழுவதும் வெந்து போனது. இரண்டே மாதத்தில் அவளது கருப்பையில் வளர்ந்து வந்த சிசு கலைந்துபோனது. உணவுக் குழாயும், வயிறும் வெந்து போனதால் எதையும் உண்ண முடியாது உடல் எடை 20

துப்பாக்கிச் சூட்டில் இறந்தவரைத் தூக்கிச் செல்லும் சோமாலியப் பெண்கள்; ஐ.நா. படையின் அக்கிரமம்





படிப்பகம்

www.padippakam.com

கிலோவுக்கும் குறைந்து போனது. இரண்டு முறை அறுவை சிகிச்சை நடந்த பின்னும் திரவ உணவுதான் குழாய் மூலம் செலுத்தப்படுகிறது. ஆனால் தண்டிக்கப்பட வேண்டிய குற்றவாளிகளோ இப்பொழுது பிணையில் சுதந்திரமாக வெளியே உலாவுகின்றனர்.

★ நாடெங்கும் இந்து மதவெறியர்களை வீழ்த்த அறைகூவல் விடும் 'மார்க்சிஸ்டு'களால் தாங்கள் ஆளும் சொந்த மாநிலத்திலேயே மதவெறியர்களின் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. கடந்த உள்ளாட்சி தேர்தலின் பொழுது வெறும் 38 இடங்களையே கைப்பற்றிய பா.ஜ.க. இம்முறை 3000 இடங்களுக்கும் மேல் வெற்றி பெற்றுள்ளது. இதனுடன் தேர்தல் முடிந்த பின்னும், எதிர்க்கட்சிகள் நடத்திய ''பந்த்''தின்போதும் போலீசின் துணையுடன் வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளனர். இதுவரை இறந்த 11 பேர்களில் 6 பேர் இந்திய மக்கள் முன்னணியைச் சேர்ந்தவர்கள். அவ்வமைப்பின் ஆதரவாளர்கள் வாழும் கரண்டா எனும் கிராமத்தில் அவர்களின் வீடுகளை இடித்துத் தள்ளியிருப்பதுடன் தாக்குதலின் காரணமாக பெண்கள், குழந்தைகள் உள்ளிட்டு 35 பேர் படுகாயமடைந்துள்ளனர். திரிபுராவில் தேர்தலின் பொழுது 'வன்முறை' எனக் கூச்சலிட்ட 'மார்க்சிஸ்டு'களுக்கு 'மாமியார் உடைத்தால் மண்குடம்; மருமகள் உடைத்தால் பொன்குடம்' என்பதுதான் வன்முறையைப் பற்றிய வரையறை.



உறவினர்களை இழந்த இப்பெண்களின் கண்ணீருக்கு 'மார்க்சிஸ்டு' குண்டர்களே பொறுப்பு

★ கடந்த ஜூன் 5-ல் சோமாலியாவில் நடந்த தாக்குதலில் பாகிஸ்தானைச் சேர்ந்த 23 இராணுவ வீரர்கள் இறந்ததைக் காரணமாகக் கொண்டு அமெரிக்கா தனது கைப்பாவை ஐ.நா.வின் ஒப்புதலுடன் அந்நாட்டுத் தலைநகர் மீது வான்வழித் தாக்குதலைத் தொடங்கியுள்ளது. முதல் இரண்டு நாட்கள் நடந்த தாக்குதலில் மட்டும் 36 பேர் இறந்து போயுள்ளனர். மேலும், அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு நோக்கங்கொண்ட இந்த தாக்குதலை எதிர்த்து ஜூன் 13-ம் தேதி நடந்த ஊர்வலத்தின் மீது எவ்வித முன்னெச்சரிக்கையும் செய்யாது ஐ.நா. அமைதிப்படையின் பாகிஸ்தான் துருப்புகள் துப்பாக்கி பிரயோகம் செய்து குழந்தைகள் உள்ளிட்டு 20 அப்பாவி மக்களைச் சுட்டு வீழ்த்தியுள்ளது. ஐ.நா. அமைதிப்படை என்ற பெயரில் பல நாட்டு படைகளைத் திரட்டிக் கொண்டு அமெரிக்கா தனது தலைமையில் நடத்தி வரும், சோமாலியாவின் இறையாண்மையைக் காலில் போட்டு நசுக்கும் இத்தாக்குதல்கள் யாவும் அதனின் கோரமுகத்தை சர்வதேச மக்களின் முன் வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளன.

★ சமீபத்தில் திண்டுக்கல்லில் 'நக்சலைட்', 'தீவிரவாதி' என போலீசாரால் முத்திரை குத்தப்பட்டு நாகராஜன் எனும் இளைஞர் மிக அருகாமையில் இருந்து சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். அதனுடன் தமிழகத்தின் பல்வேறு இடங்களில் நடந்த குண்டு வெடிப்புகளுக்கும், கொள்ளைகளுக்கும் 'இவன்தான் பொறுப்பு' என தமிழக போலீசு அவ்விளைஞர் மீது பழி போடுவதற்காகவே திட்டமிட்டு இக்கொலை நாடகத்தை அரங்கேற்றியுள்ளது. பெரிய பத்திரிகைகள் அனைத்தும் போலீசு கொடுத்த செய்திகளையே வாந்தியெடுத்துள்ளதுடன் தம் பங்குக்கு கதை கட்டி ஜோடித்துள்ளன. நிலவும் அமைப்பின் அதிகாரத்தை எதிர்க்கத் துணிபவர்களை விசாரணையின்றியே 'பயங்கரவாதி' என முத்திரை குத்தி இது போன்று சுட்டுக் கொல்வது அரசின் பாசிசத் தன்மைக்குத் தகுந்த உதாரணமாகும்.

★ கன்சாலா குபல்ஃகபா கியூபா நாட்டைச் சேர்ந்த இசைக் கலைஞர். இவர் சென்ற மாதம் முதன்முதலாக நியூயார்க் நகரில் தனது இசைக் கச்சேரியை நடத்தியுள்ளார். இசைக் கச்சேரி முடிந்த பின் கியூபாவுக்கும் தனக்கும் இடையே உள்ள பகைமையான உறவுகளைக் காரணம் காட்டி, அக்கலைஞருக்குச் சேர வேண்டிய சம்பளத் தொகையைக் கொடுக்கவிடாது தடுத்து நிறுத்தியுள்ளது அமெரிக்க அரசாங்கம். இச் சாதாரண உரிமையைத் தட்டிப் பறித்திருக்கும் அமெரிக்காதான் உலகெங்கிலும் மனித உரிமைகளின் ஏகபோக காவலனாக தன்னைத் தம்பட்டம் அடித்து வருகிறது.

★ கடுமையான வறட்சி காரணமாக கிராமத்து கிணறுகளில் குடிக்கக் கூட நீர் இல்லாததன் காரணமாக மழை வேண்டி உயிர் பலி கொடுத்துள்ளனர். இச் சம்பவம் நடந்தது மகாராஷ்டிராவில் ஒஸ்மனாபாத் மாவட்டத்தில். பலி கொடுக்கப்பட்டவரோ மதாங் எனும் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ராஜாபாவ் லிம்பாஜி என்பவர். விசயம் வெளி உலகுக்குத் தெரிந்த பின்னும் கூட அரசு தரப்பில் இருந்து எவ்வித நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை. இதே போன்று மூட நம்பிக்கை காரணமாக தமிழ்நாட்டில் பொள்ளாச்சியைச் சேர்ந்த ஒருவர் தனது கடனை அடைக்க செல்வம் வேண்டி சொந்த குழந்தையையே கழுத்தை அறுத்து பலி கொடுத்துள்ளார். ஆட்சியாளர்களே நமது பழைய மரபு என்ற பெயரில் மூட நம்பிக்கைகளைப் போற்றிப் புகழ்ந்து கொண்டிருக்கையில் அப்பாவி மக்களைக் குற்றவியல் சட்டங்களைக் கொண்டு தண்டிப்பதால் மட்டும் என்ன மாற்றம் வந்துவிடப் போகிறது? ●



'சோமயாகம்' நடத்தும் காங்கிரசின் 'ஏஜெண்ட்' சந்திரசாமி

படிப்பகம்

www.padippakam.com

# தொழிலாளர் வெளியேற்றக் கொள்கை:
# விபரீத விளைவுகள்

நாலாயிரம் தொழிலாளர்களைக் கொண்டிருந்த அந்த சணல் ஆலை 1989 மார்ச்சில் ஒரு நாள் மூடப்பட்டது. அதனை மீண்டும் திறக்க சிலகாலம் தொழிற்சங்கங்கள் போராடி ஓய்ந்தன.

இன்றோ வெறிச்சோடிக் கிடக்கும் அவ்வாலையிலே குரங்குகள் தான் தமது வாழ்விடமாக்கிக் கொண்டன. மில்லைச் சுற்றியுள்ள கூலித் தொழிலாளர்கள் குடியிருப்புகள் துயரச் சம்பலங்களில் மூழ்கியுள்ளன.

தனது மகள் திருமணத்திற்கு ஒரே மாதம் இருந்தபோது மில் மூடப்பட்டு தனக்கு கிடைக்க வேண்டிய தொகைகள் எல்லாம் முடக்கப்பட்டதால் குலாம் மாலிக் என்னும் தொழிலாளி ஆடிப்போனார். எவ்வளவு முயன்றும் மகளுக்குத் திருமணம் செய்ய முடியாது போனபோது, தூக்குக் கயிற்றால் தன்னை முடித்துக் கொண்டார்.

மேற்கு வங்கத்திலுள்ள பட்ஜ்-பட்ஜ் சணல் ஆலை மூடப்பட்டதிலிருந்து குலாம் மாலிக் போன்று அதன் தொழிலாளிகள் 13 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். உணவின்றி பட்டினியாலும், நோய்களால் தாக்குண்டு மருத்துவ வசதியின்றியும் 417 பேர் இந்த நான்கு ஆண்டுகளில் இறந்துள்ளனர்.

இன்னமும் உயிரோடு இருந்துவரும் இத்தொழிலாளர்களின் குடும்பங்கள் சொல்ல முடியாத வேதனையில் உழன்று வருகின்றன. திடீரென வெள்ளத்தில் சிக்கியது போன்று, ஆலை மூடப்பட்டு அவர்களது வாழ்க்கையே நொறுங்கின. முன்பு சிறிதும் எண்ணியிராத நிலைமைக்கு இன்று தள்ளப்பட்டுள்ளனர்.

தண்ணீர் வசதி, மின்சாரம் நிறுத்தப்பட்டு விட்ட குடியிருப்புகள் இருண்டு பாழடைந்து காணப்படுகின்றன. கழிப்பிடங்கள் பராமரிக்கப்படாமல், அடைபட்டு, குப்பைகள் அள்ளப்படாமல் புறக்கணிக்கப்பட்டு கிடக்கின்றன. தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவ வசதிகளும் நிறுத்தப்பட்டுவிட்டன. பட்டினியாலும் நோயாலும் அன்றாடம் செத்து வருகின்றன தொழிலாளர் குடும்பங்கள்.

வேலையிழந்த பட்ஜ்-பட்ஜ் சணல் ஆலை தொழிலாளர்கள் தமது தொழிற் திறமையெல்லாம் பாழாகி, அன்றாட வாழ்க்கைக்கு அல்லல்படுகின்றனர். ரிக்ஷா ஓட்டுகிறார்கள்; பழம், லாட்டரிசீட்டு விற்கிறார்கள். வசதியான வீடுகளில் வேலையாட்களாக இருக்கிறார்கள். சிறுசிறு கடைகள் வைத்துள்ளனர்; சிலர் குற்றங்களிலுள் ஈடுபடுகிறார்கள்.

இதுபோன்று இன்று மூடப்பட்டுக் கிடக்கும் 32 ஆலைகளை எடுத்துக் கொண்டு விரிவான கள ஆய்வு ஒன்றினை மேற்கொண்டது, கல்கத்தாவில் நாகரிக் மஞ்ச் (நகர மக்கள் மன்றம்) என்னும் அமைப்பு. மேற்சொன்ன விவரங்கள் அந்த அறிக்கையிலிருந்து தரப்பட்டவை:

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல, இந்த நிறுவனங்களில் மட்டும் கடந்த 8 வருடங்களில் 1560 பேர் இறப்புக்கும் 75 பேர் தற்கொலைக்கும் உள்ளாகியுள்ளனர் என்பது வேலையிழந்த தொழிலாளர்கள் குடும்பங்களின் அவல வாழ்வை எடுத்துக்காட்டுகிறது.

32 சணல் ஆலைகள் மூடப்பட்டுள்ளதிலேயே இத்தனை துன்ப துயரங்கள் என்றால், மேற்கு வங்கத்திலே மட்டும் மூடப்பட்டுள்ள மொத்தம் 53,700 தொழிலகங்களின் தொழிலாளர்கள் நிலை எப்படியிருக்கும்? நாடு முழுவதும் மூடப்பட்டுள்ள லட்சக்கணக்கான தொழிலகங்களின் தொழிலாளர்கள் வாழ்வு என்னவாகியுள்ளது?

கடந்த 1985 முதல் ஆண்டுதோறும் நாடு முழுவதும் 70 இலட்சம் பேர் வேலையிழந்து வருகின்றனர். இன்றைக்கு வேலையில்லாதோர் எண்ணிக்கை 4.2 கோடி. இதுவே 2000-ல் 10 கோடியாகும் என்று கணக்கிடப்படுகிறது.

எனவே வேலையில்லாத் திண்டாட்டம் என்ற அடிப்படை பிரச்சினையுடன் அதன் ஒரு முக்கிய அம்சமாக வேலையிழந்த தொழிலாளர்களுக்கு மறுவேலை கொடுப்பதும் சேர்ந்துள்ளது.

''நவீன தொழில் உற்பத்தியில் உள்ள போட்டியின் விளைவாக தவிர்க்க இயலாமல் இயந்திரமயமாக்கலும், நவீனமயமாக்கல் உள்ளன. இதனால் சில தொழிலாளர்கள் வேலையிழப்பது தவிர்க்க முடியாததாகிறது. அவர்களுக்கு மறுபயிற்சியும் மறுபடி வேலைக்கு அமர்த்துவதும் அரசாங்கத்தின் கடமையாகும்'' என்கிறார் பி.கே.மோடி என்னும் பொருந் தரகு தொழிலதிபர். ''தொழில் சீர்திருத்தத் திட்டத்தின் ஒருங்கிணைந்த பகுதிதான் தொழிலாளர்களை வெளியேற்றும் கொள்கை. அரசு ஆரம்பத்திலேயே இதையெல்லாம் யோசித்திருக்க வேண்டும்'' என்று வாதிடுகிறார் லலித் மோகன் தாபர் என்னும் பெருந்தரகு முதலாளி.

> கடந்த 1985 முதல் ஆண்டுதோறும் நாடு முழுவதும் 70 இலட்சம் பேர் வேலை யிழந்து வருகின்றனர். இன்றைக்கு வேலையில்லாதோர் எண்ணிக்கை 4.2 கோடி. இதுவே 2000-ல் 10 கோடியாகும் என்று கணக்கிடப்படுகிறது.

நவீனமயமாக்கல், தனியார் துறைக்கு விடுதல் மூலம் வரும் கொழுத்த லாபம் தொழிலதிபர்களுக்காம்! இவர்கள் கழிவாக்கி தூக்கியெறியும் தொழிலாளர்களுக்கோ அரசு மறு பயிற்சியும் மறுவாழ்வும் அளிக்க வேண்டுமாம்! இதில் இவர்களுக்கு ஏதும் பங்கில்லையாம்!

இந்திய ரிசர்வ் வங்கியின் ஆய்வொன்று, நிர்வாகத் திறமையின்மைதான் நலிவுற்ற தொழிலகங்களில் 52%க்கு காரணமாகும்; தொழிலாளர் நிர்வாகப் பிரச்சினை என்பது 2% தொழிலகங்கள் நலிவுக்கு காரணமாகும் என்று கூறுகிறது. அதிக லாபம் ஈட்டும் பிற துறைகளுக்கு முதலீட்டை கடத்துவது, கடன் கிடைப்பது அரிதாவது, நிர்வாகத்திற்குள்ளேயே உள்ள மோதல்கள் ஆகியவற்றால் தான் தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன என்று அது மேலும் தெரிவிக்கிறது.

அரசாங்கம் அளிக்கும் புள்ளி விவரங்களை ஆய்ந்து நாகரிக் மஞ்ச் எடுத்துக்காட்டும் ஒரு கணக்கு:

மேற்கு வங்கத்தில் 1985-90-ல் தொழிற்துறையின் மொத்த உற்பத்தியில் இலாபமும் 19.4% அதிகரித்துள்ளது. தொழிலாளர் எண்ணிக்கையோ 8,92,000 இலிருந்து 8,81,000-க்கு கிட்டதட்ட 1.2% குறைந்துள்ளது. எனவே ஒவ்வொரு தொழிலாளிக்கும் 21% வேலைப் பளு கூடியுள்ளது.

தங்கள் லாப வெறிக்காக, சுமையை தொழிலாளர் மீதும் அரசாங்கத்தின் மீதும் தள்ளிவிடுவதுதான் தொழிலதிபர்களின் நோக்கமாக உள்ளது. அரசோ இவர்களின் தில்லுமுல்லுகளுக்கு மறைமுக உடந்தையாக உள்ளது. இவற்றையே சட்டப்படியாக்குதற்குத் தான் முயன்று வருகிறது.

நவீனமயமாக்கலுக்காகவும், தொழிற்சங்கப் பிரச்சினைகளை சமாளிக்கவும் 'தங்கக் கை குலுக்கல்'' எனப்படும் தானாக வேலையிலிருந்து ஓய்வுபெறும் திட்டத்தில், தொழிலாளர்களுக்கு கணிசமான பணத்தை கையில் திணித்து உற்பத்தியிலிருந்து விலகிக் கொள்ளச் செய்கின்றன, பொதுத்துறை நிறுவனங்களும் தனியார்த்துறை பெரு நிறுவனங்களும். பிறர் மீது வேலைப் பளுவை ஏற்றி அதிக இலாபத்தை கொள்ளையடித்துக் கொள்ளலாம் என்பதாலேயே இவ்வாறு செய்கின்றன.

நடுத்தர, சிறிய தொழிலகங்களோ, பெரிய தொழில் நிறுவனங்கள் குறிப்பாக பன்னாட்டு, தேசங் கடந்த பகாசுரக் கம்பெனிகளின் போட்டிக்கு முன் நிற்க இயலாத போது அமைதியாக, திடுதிடுப்பென கதவை மூடிக் கொள்கின்றன. தொழிலாளர்களுக்குத் தர வேண்டிய பாக்கிகள் வைப்பு நிதி போன்றவைகளையும் முடக்கிக் கொண்டு அவர்களை நடுத்தெருவில் நிறுத்துகின்றன. தொழிலதிபர்கள் தமது துறையை மாற்றிக் கொள்வதற்காக தொழி


படிப்பகம்

www.padippakam.com

லாளர்களுக்கு தர வேண்டிய அற்ப நிதியைக் கூட சுருட்டிக் கொள்கின்றனர்.


இவ்வாறு தொழிலாளர் நிலைமை பாரதூரமாகப் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்க, புதிய வேலை வாய்ப்பை உருவாக்கப் போகிறோம், புதிய தொழில் முயற்சிகளை வரவேற்கிறோம், தாராள அந்திய முதலீடுகளை அனுமதித்துள்ளோம் என்கிறது காங்கிரசு அரசு.

1991-ல் மீண்டும் காங்கிரசு ஆட்சிக்கு வந்ததிலிருந்து, ஐ.எம்.எஃப், உலக வங்கியின் ஆணைக்கேற்ப, அந்நிய முதலீடுகளை அதிகரிக்க தாராள அனுமதி தந்துள்ளது. அந்நிய செலாவணியை முறைப்படுத்தும் சட்டத்தைத் தளர்த்தி கிட்டதட்ட அதனை இல்லாததாக்கிவிட்டது. வெளிநாட்டில் வாழும் இந்தியர்களுக்கு முதலீட்டு சலுகைகள் அளித்தது. அந்நிய முதலீடுகளுக்கு மேன்மேலும் சலுகைகளை அள்ளித் தருகிறது. இருந்தும்கூட 1993- ஏப்ரல் முடிய உள்ள காலத்திற்கு அதனால் ரூ. 7,200 கோடிதான் அந்நிய முதலீட்டை கவர முடிந்துள்ளது. அரசு எதிர்பார்த்த அளவு அந்நிய முதலீடுகள் வரவில்லை; அதே போல செய்துள்ள முதலீடுகளும் தொழிலாளர்களை கணிசமாக ஈடுபடுத்தும் துறைகளில் அல்ல; உற்பத்தித்துறைகளில் அல்ல; வெளிநாட்டு ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்டும் அல்ல; இந்திய சந்தையை அபகரித்துக் கொள்ளவும் மேல் தட்டு வர்க்கங்களின் வாங்கும் சக்தியைக் குறிவைத்தும் தான் களத்தில் இறங்கியுள்ளன பன்னாட்டு, தேசங்கடந்த தொழில் கழகங்கள். இன்றும் இந்தியாவின் பாரம்பரிய தொழில்களான விவசாயம், உப்பு முதலியவற்றில் இறங்கியுள்ளன. இவை ஏற்கனவே உள்ள நுகர் பொருள் உற்பத்தி துறையிலுள்ள தரகு முதலாளிகளையும் தேசிய முதலாளிகளையும் விழுங்கி ஏகபோக நிலையை சாதிக்கப் போகின்றன.

நவீனமயமாக்குதல் அந்திய முதலீடுகளுக்கு தாராள அனுமதி, பொதுத்துறை நிறுவனங்களையும் தனியாருக்கு தாரை வார்ப்பது என்று அறிவித்த கணத்திலிருந்தே இந்திய தரகு முதலாளிகளும் பன்னாட்டு நிறுவனங்களும் கோரிவருவது இன்றைய தொழிலாளர் சட்டங்கள், வரிவிதிப்பு முறை திருத்தப்பட வேண்டும் என்பதுதான்.

நேருவின் போலி - சோசலிச காலம் முதல் தொழிலாளர்கள் போராடிப் பெற்ற தொழிலாளர் பாதுகாப்பு உரிமைகளை எப்படிப் பெயரளவுக்கு ஆக்குவது, குழி தோண்டி புதைப்பது என்பதுதான் அரசின் முக்கிய ஆலோசனையாக இருந்து வருகிறது.

ராஜீவ்காந்தி 1989-ல் புதிய தொழிலுறவு மசோதா கொண்டு வந்தார். தொழிற் சங்கங்கள் - தொழிலாளர்கள் கடுமையாக எதிர்த்ததின் விளைவாக, மசோதாவை நிறைவேற்றுவதை கைவிட்டார். மீண்டும் நரசிம்மராவ் அரசு புதிய பொருளாதார கொள்கைக்கு ஏற்ப, 1992 டிசம்பரில், தொழிலுறவு மசோதாவைக் கொண்டு வந்தது. அப்போதும் எதிர்கட்சிகள் கடுமையாக எதிர்த்தன. மீண்டும் மசோதா கைவிடப்பட்டது.



**ஆலைக்கதவுகள் இழுத்து மூடப்பட்டன; துயரத்தின் வீதியில் தொழிலாளர்கள்**

ஆனாலும் 1993 ஏப்ரல்-மே மாதங்களில் இந்த தொழிலுறவு மசோதாவை இன்னும் திருத்தி முழுச் சட்ட வடிவத்திற்கு கொண்டு வந்துள்ளதாக மத்திய தொழிலாளர் அமைச்சர் சங்மா சொல்லி வருகிறார். இது காங்கிரசின் பாசிசக் கொள்கையைப் பறைசாற்றுகிறது.

இந்த தொழிலுறவு மசோதாவை சட்டமாக்குவதன் மூலம் ஏற்கனவே கோடிக் கணக்கான வேலையில்லாதவர்களுடன் இன்னும் ஒரு கோடி பேரின் வேலையைப் பறித்து களத்தில் விடுவதற்கு அரசு வழி தேடுகிறது. மேலும் தொழிலாளர்களின் தொழிற்சங்க உரிமைகளை, போராடும் வாய்ப்புகளை வெட்டிக் குறுக்கி இந்த அவல நிலையை தொழிலாளர்கள் சகித்து கொள்ள வைக்க வழிதேடுகிறது.

உலக வங்கி, ஐ.எம்.எப் ஆணைக்கேற்ப, வெளிநாட்டு பகாசுர நிறுவனங்களுக்கு சலுகை, தரகு முதலாளிகளுக்கு சலுகை, ரயில், பஸ், மின் கட்டண உயர்வு, சமூக வளர்ச்சித் திட்டங்கள், கல்வி, மருத்துவத்திற்கு அளித்த மானியங்கள் வெட்டு போன்று மேற்கொண்டது போல உடனே சில மக்கள் விரோத கட்டளைகளை மத்திய அரசால் நிறைவேற்ற முடியவில்லை. இதனால் இந்த அம்சங்களில் படிப்படியாகவும், அங்கொன்றும் இங்கொன்றுமாகவும் அரசு முயலுகிறது. விவசாயத்துறைக்கு அளிக்கும் மானியம், பொது வினியோகத் துறை மூலம் உணவு வழங்கீடு செய்வதில் அளிக்கும் மானியம் படிப்படியாக குறைக்கப்படுவதுபோலவே தொழிலாளர் நலன்களை குழிதோண்டி புதைக்கவும் அரசு எத்தனிக்கிறது.

'தொழில்துறையை மறுகட்டுமானம் செய்வது', 'தொழிலாளர்களை மறுபடி பயிற்றுவிப்பது, மறுபடி வேலைக்கு அமர்த்துவது' என்று சொற்களில் சொன்னாலும் அவற்றின் தெளிவான பொருள், முறையே பன்னாட்டு பகாசுர நிறுவனங்களின் கரங்களில் தொழிற்துறையின் தலைவிதியை ஒப்படைத்தும், தொழிலாளர்களின் ஒரு பகுதியை சுசடாக உதறியெறிவது என்பதேயாகும்.

இதுகாறும் 100 தொழிலாளர்கள் மற்றும் அதற்கு மேற்பட்டவர்களை வேலைக்கு வைத்திருக்கும் நிறவனம், தொழிற்சாலையை மூடுவதென்றால் அரசின் முன் அனுமதி பெற வேண்டும் என்று உள்ளது. தற்போது இந்த வரம்பு 300 தொழிலாளர்களுக்கு என உயர்த்தப் படுவதாக உள்ளது. இதேபோல வேலை முடக்கத்திற்கும் இருந்த வரம்பின் 100 தொழிலாளர் என்பது அறவே ரத்து செய்யப்படுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

1986-ல் போடப்பட்ட நலிவுற்ற கம்பெனிகள் சட்டத்தையும் (SICA) திருத்த மத்

படிப்பகம்

www.padippakam.com

திய அரசு உத்தேசித்துள்ளது. இப்போது தொழிற்துறை மற்றும் நிதி மறுநிர்மானத்திற்கான வாரியத்தில் (BIFR) ஒரு நலிவுற்ற ஆலை பதிவு செய்து கொள்ள வேண்டுமெனில், ஏழாண்டு குறையாமல் நிறுவனம் பதிவு செய்யப்பட்டிருத்தல், தொடர்ந்து இரு ஆண்டுகள் நட்டம் ஏற்பட்டிருத்தல், அதன் மூதலீட்டுக்கு சமமான அளவு நட்டங்கள் குவிந்திருத்தல் ஆகியன வேண்டும். இப்போதோ இந்த நிபந்தனைகளை அரசு 5 வருடம் பதிவு செய்திருத்தல், மூலதனத்தின் பாதியளவு நட்டம் ஏற்பட்டிருப்பது என்றாக குறைக்கவும், இரு வருடம் தொடர்ந்து நட்டம் என்பது ரத்து செய்யப்படவும் அரசு முன்மொழிந்துள்ளது.

தொழிலாளர்களின் தொழிற்சங்க உரிமைகளை குறைக்க முனைந்தது, ராஜீவ் காந்தி ஆட்சியின்போது கொண்டு வரப்பட்ட செக்-ஆப் முறை. இப்போது அமைச்சர் சங்மா மீண்டும் கொண்டு வரும் தொழிற்சங்க கொள்கை இருக்கும் உரிமையை பெயரளவாக்குகிறது; நவீனமயமாக்கும் கொள்கைக்கோ, முதலாளித்துவ சுரண்டல் அடக்குமுறைக்கோ உள்ள எதிர்ப்புகளை அறவே நடைமுறைச் சாத்திய மற்றதாக்குகிறது.

இதன்படி, ஒரு தொழிற்சங்கம் பதிவு செய்து கொள்ள, தொழிலகத்தின் 10% தொழிலாளர்களின் ஆதரவை பெற்றிருக்க வேண்டும். தற்போது 7 பேர் குறைந்த பட்சம் இருந்தால் போதும். இதனால் எல்லா தொழில் நிறுவனங்களிலும் அதிகபட்சம் 9 தொழிற்சங்கங்களே இருக்க முடியும் என்றாகும்.

வெளியாட்கள் தொழிற்சங்க நிர்வாகக் குழுவில் 30% ஆகவோ, இரு நபர்களாகவோ, இதில் எது குறைவோ அவ்வளவு எண்ணிக்கையில்தான் இருக்க முடியும் இதன் மூலம் நிறுவனத் தொழிலாளர்கள் தான் பெரும்பான்மையாகவும் தீர்மானிப்பவர்களாக இருக்க முடியும் என்பதால் நிர்வாகத்திற்கு கட்டுப்படுத்தும், மிரட்டும் வாய்ப்பு அதிகமாக ஆகும்.

எந்த ஒரு பேரத்திற்கும் நிர்வாகத்துடன் பேச்சு வார்த்தை நடத்தவே ஒரு தொழிற்சங்கத்திற்கு 51% தொழிலாளர் ஆதரவு தரவேண்டும். இப்போதோ நிர்வாகத்தால் அங்கீகரிக்கப்படுவது, அல்லது அழைக்கப்படுவது என்பதுதான் நடைமுறையில் உள்ளது. மாற்றுகின்ற சட்டப்படி, ஒரு நிறுவனத்தில், ஒன்றுக்கு மேற்பட்ட தொழிற்சங்கங்கள் இருந்தாலும், 51% ஆதரவு பெற்ற கூட்டு ஒன்றுதான் இருக்க முடியும் அல்லது அத்தகைய கூட்டு ஒன்று ஏற்படாமலே போகும். இதனால் நிர்வாகத்தின் நிர்ப்பந்தத்துக்கு தொழிற்சங்கங்கள் பணிந்து போகவே நேரிடும்.

வேலையிழக்கும் தொழிலாளர்களுக்கு மறுபடி பயிற்சி அளிப்பதற்கு ஒரு தொழிலுறவு கமிசன் அமைக்கப்படும் என்று மத்திய அரசு முன்மொழிகிறது.

அரசு உத்தேசித்துள்ள இந்த அம்சங்களை எல்லா தொழிற் சங்கங்களும் எதிர்த்து வருகின்றன. காங்கிரஸ் கட்சியின் தொழிற்சங்கமான ஐ.என்.டி.யு.சி. கூட, தனது தொழிலாளர்களின் கொந்தளிப்பால், இதற்கு ஆதரவு அளிக்க தயங்குகிறது. அதன் நிர்வாக குழு உறுப்பினர் ஒருவர், 'இது சட்டமாகுமானால் பெரியதும், சிறியதுமாக 2,30,000 தொழிற்சாலைகள் மூடப்படலாம். பல லட்சக் கணக்கானோர் வேலையிலிருந்து வீசியெறியப்படுவார்கள்' என்றார்.


தொழிற்சங்கங்கள் பின்வரும் கோரிக்கைகளை கிட்டதட்ட ஏகமனதாக முன்வைக்கின்றன: '20 அல்லது அதற்கும் மேலான ஊழியர்களைக் கொண்ட தொழில் நிறுவனங்கள் வேலை முடக்க நட்டாடு தரவேண்டும். கம்பெனியில் பட்டியலில் உள்ள அன்றாட கூலித் தொழிலாளர்களுக்கும் நட்ட ஈடு தரவேண்டும்.

'தொழிலாளர்களுக்கு மறு பயிற்சி தந்து, மறுவேலைக்கு அமர்த்த நிர்வாகம் பொறுப்பு ஏற்றுக் கொண்டால் ஒழிய, நவீனமயமாக்கல் அடிப்படையில் யாரையும் வெளியேற்றக் கூடாது.

'உபரியாக உள்ள தொழிலாளர்கள் அதே நிர்வாகத்தின் கீழுள்ள இதர, நிறுவனங்களில் மறுபடி அமர்த்த வேண்டும்.

அரசோ இந்த கோரிக்கைகள் எதற்கும் செவிசாய்ப்பதாக இல்லை. வேலையிழக்கும் தொழிலாளிக்கு அவர் பணி செய்த வருடங்கள் ஒவ்வொன்றுக்கும் 15 நாட்கள் சம்பளம் என்று கணக்கிட்டு தற்போது தரப்படும் நட்ட ஈட்டை 30 நாட்களுக்கு சம்பளம் என்று விகிதம் உயர்த்தப்பட வேண்டும் என்று மட்டுமே கூறுகிறது. ஆனால் தமது தொழிலுறவு மசோதாவை மீண்டும் கொண்டு வந்து நிறைவேற்றுவதற்கே எத்தனித்து வருகிறது.

தொழிற்சங்கங்களோ தொழிலாளர்களுக்கு முன்னேயுள்ள படுபயங்கர நிலையை எதிர்கொள்ள திராணியுள்ளனவாக இல்லை. தொழிலாளர் விரோத போக்குகளை ஒப்புக்கு எதிர்ப்பது, சவடால் அடிப்பது. பின் நெருக்கடியை நேருக்கு நேர் சந்திக்கும்போது முணுமுணுப்போடு அடங்கிப்போவது என்றவாறே நடந்து கொள்கின்றன. பொருளாதாரவாதம், குறுகிய தொழிற்சங்கவாதம், சட்டவாதம் என்ற



நவீன மயமாக்கல், தாராளமயமாக்கல்களால் வேலையிழக்கும் தொழிலாளர்களின் நலன்களுக்கு மட்டுமின்றி, நாட்டின் ஒட்டு மொத்த அரசியல் பொருளாதார நலனையே அடகு வைத்துள்ள இந்த அரசுக்கு எதிராக, தொழிலாளர்கள் போராட வேண்டும்.

புற்றுநோய்களால் இவற்றின் தலைமைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இவர்களது பலவீனங்களை நன்கறிந்தே, அரசு எதிர்ப்பை நீர்த்துப்போகச் செய்ய, ஆங்காங்கே போடப்படும் தனிப்பட்ட ஒப்பந்தங்கள் - மறுசீரமைப்புகள் மூலமும் அற்பத்தனமான சலுகைகள், கண்துடைப்புகள் மூலமும் முயன்று வருகிறது.

நவீன மயமாக்கல், தாராளமயமாக்கலால் வேலையிழக்கும் தொழிலாளர்களின் நலன்களுக்கு மட்டுமின்றி, நாட்டின் ஒட்டு மொத்த அரசியல் பொருளாதார நலனையே அடகுவைத்துள்ள இந்த அரசுக்கு எதிராக, தொழிலாளர்கள் போராட வேண்டும். தேனெடுக்க வந்துள்ள பன்னாட்டு பகாசுர நிறுனவங்கள் தேனீக்களால் கொட்டப்பட்டு விரட்டப்பட வேண்டும்.

● நிரஞ்சன்

படிப்பகம்

www.padippakam.com

# ஆர்.எஸ்.எஸ்-ன் 'தேச'த்துரோக பார்ப்பன - பாசிச பாரம்பரியம்

ஆர்.எஸ்.எஸ்.-இன் தலைமைக் குருவாக மிக நீண்டகாலம் அதாவது 33 ஆண்டுகள் பதவி வகித்தவர் ''குருஜி'' கோல்வால்கர். ஆனால் அதற்குள், ''என் கண் முன்னால் ஒரு சிறு வடிவிலான இந்து ராஷ்டிரத்தைக் காண்கிறேன்'' என்று அதன் நிறுவன குரு ஹெட்கேவார் தனது இறுதி உரையில் பீற்றிக் கொள்ளும் அளவு ஆர். எஸ்.எஸ். வளர்ந்துவிட்டது. அசாம், ஒரிசா, காஷ்மீர் தவிர அனைத்து மாநில பிரதிநிதிகள் பங்கேற்ற ஆர்.எஸ்.எஸ். நிர்வாகிகள் பயிற்சி முகாம் 1940-இல் நாகபுரியில் நடந்தபோதுதான் அவ்வாறு ஹெட்கேவார் குறிப்பிட்டார்.

கோல்வால்கரின் தலைமைக் காலத்தில்தான் கடும் நெருக்கடிகளையும், தீவிர வளர்ச்சியையும், நடவடிக்கைகள் மற்றும் சித்தாந்த உருவாக்கம் இரண்டிலும் மேலும் மூர்க்கமான பாசிச மயமாவதையும் ஆர். எஸ்.எஸ். கண்டது. முக்கியமாக ''1942 வெள்ளையனே வெளியேறு'' இயக்கத்தின் போது ஒதுங்கி இருந்து தனிமைப்பட்டது. நாடு பிரிவினையைப் பயன்படுத்தி, 1946-47 கால மதவெறிக் கலவரங்களில் பங்கேற்றது, காந்தி கொலை - தடை காரணமாகப் பின்னடைவுக்குள்ளானது, நேரு - இந்திரா ''மோகம்'', பாக்-இந்திய போர்களின் ''தேசிய'' வெறி ஆகியவற்றின் பிடியில் மக்கள் சிக்கியிருந்தபோதும் இரகசியமான, சீரான வளர்ச்சியைக் கண்டது கோல்வால்கர் காலத்தில் குறிப்பிடத்தக்கவை.

ஹெட்கேவாரைப் போலவே மராத்தியப் பார்ப்பனரான கோல்வால்கர், அவரைவிடத் தீர்க்கமான, தெளிவான பாசிச கண்ணோட்டமுடையவர். தலைமை குருவாக பொறுப்பேற்பதற்கு முன்பே ''நாம் அல்லது நமது தேசத்தின் விளக்கம்'' என்கிற நூலை 1938-இல் கோல்வால்கர் பிரசுரித்தார். பின்னர் அவர் ஆற்றிய உரைகள், எழுதிய கட்டுரைகள் ''சிந்தனைகளின் தொகுப்பு'' என்கிற நூலாக வெளிவந்தது. இவை இரண்டும் ஆர்.எஸ்.எஸ்.-இன் இந்துமத வகுப்புவாத பாசிச சிந்தாந்தத்தின் அப்பட்டமான விளக்கமாக இருக்கின்றன. எனவே இவ்விரு நூல்களும் தமது அதிகாரபூர்வ வெளியீடுகளோ, சித்தாந்தமோ அல்லவென்று இப்போது ஆர்.எஸ்.எஸ். மூடி மறைக்க எத்தணிக்கிறது. ஆனால் அதன் பாசிச சித்தாந்த அடிப்படையாக அவை விளங்குவதை ''இடதுசாரி'' அறிவுஜீவிகள் பலரும் நிரூபித்துவிட்டனர்.

இந்த நாட்டில் வாழ்பவர்கள், அவர்கள் எந்த மதத்தினர் ஆனாலும் ''இந்திய தேச''மாக அமைகின்றனர் என்பது பிராந்திய அடிப்படையிலான தேசம்; ஆனால் இந்து உணர்வு, நாகரிகம், பண்பாடை ஏற்று வாழ்பவர்கள் மட்டுமே ''இந்திய தேச''மாக அமைகின்றனர் என்பது கலாச்சார அதாவது மத அடிப்படையிலான தேசம். இவற்றில் இரண்டாவதுதான் ''இந்திய தேச'' மாக இருக்க முடியும். அதுதான் - இந்து ராஷ்டிரம் என்பதுதான் ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தம். இதுவே ஆர்.எஸ்.எஸ்-இன் சித்தாந்த குரு சவார்கர், நிறுவன குரு ஹெட்கேவாரின் கருவாக இருந்தது; என்றாலும் சவார்கரின் ''பிறந்தபூமி'', ''புண்ணியபூமி'' விளக்கத்தில் இன்னும் சிறிதளவு'' பிராந்திய அடிப்படையிலான தேசியவாடை வீசியது. அதில் பிற மதத்தினரையும் ''இந்திய தேச''த்துக்குள் சகித்துக் கொள்வதற்கான வாய்ப்பு இருப்பதாகக் கருதிய கோல்வால்கர், இந்துக்களை மட்டுமே கொண்ட ''கலாச்சார அடிப்படையிலான தேச''மே இந்திய தேசயம் அதாவது இந்து ராஷ்டிரம் என்பதை ஆணித்தரமாக நிறுவினார்.

ஜெர்மனி நாஜி அடால்ஃப் இட்லரின் ''கலாச்சார தேச''த்தை முன்மாதிரியாக வைத்துப் பின்வருமாறு கோல்வால்கர் எழுதியுள்ளார்:

''ஜெர்மானிய தேசிய கௌரவம், பெருமிதம் இன்றைய விவாதப் பொருளாக இப்போது மாறியிருக்கிறது. ஜெர்மனி, அதன் தேசியம் மற்றும் கலாச்சாரத் தூய்மையைக் காப்பதற்காக அந்நாட்டில் இருந்து செமிட்டிக் இனங்களை - அதாவது யூதர்களைக் களையெடுத்ததன் மூலம் உலகையே குலுங்கச் செய்தது. இங்கு தேசிய கௌரவம் - பெருமிதம் அதன் உச்சபட்சமாகப் பிரதிபலித்தது. ஆணிவேர் வரை வேறுபாடுகளைக் கொண்டுள்ள (பூர்வ குடி) இனங்களும் கலாச்சாரங்களும் ஒரே ஒருமையாக ஒன்று கலப்பது எப்படி முடியவே முடியாது என்பதைக் கூட தெட்டத் தெளிவாக ஜெர்மனி காட்டிவிட்டது; இந்துஸ்தானம் கற்றுப் பலனடைவதற்கான ஒரு நல்ல பாடமாக இது நமக்குக் கிடைத்திருக்கிறது''. (நாம் அல்லது நமது தேசத்தின் விளக்கம், பக். 27)

நாஜிசத்திலிருந்து கற்ற பாடத்தைப் பின்வருமாறு இந்தியாவுக்குப் பிரயோகிக்கிறார் கோல்வால்கர்:

''புத்திசாலித்தனமான பழம் தேசங்கள் வழங்கியுள்ள இந்தக் கண்ணோட்டத்தில் இருந்து, இந்துஸ்தானத்தில் உள்ள இந்து அல்லாத மக்கள் இந்துக் கலாச்சாரம் மற்றும் மொழியைத் தமதாக ஏற்றுக் கொள்ள வேண்டும்; இந்து மதத்தைப் புனிதமாக மதித்துப் போற்றக் கற்றுக் கொள்ள வேண்டும்; இந்து தேசத்தை ஏற்றிப் புகழ்ந்து போற்றுவதைத் தவிர வேறெந்த சிந்தனைக்கும் இடந்தரக் கூடாது; அதாவது இந்த நாடு மற்றும் இதன் பழம்பெரும் மரபுகள் மீதான சகிப்பின்மையையும் நன்றியில்லாமையையும் கைவிடுவது மட்டுமல்ல, அவற்றின் மீது பக்தியும் பாசமும் வைக்கும் நேர்மறையான கண்ணோட்டத்தையும் கூட வளர்த்துக் கொள்ள வேண்டும், ஒரே வார்த்தையில் சொல்வதானால் அவர்கள் அந்நியர்களாக இருப்பதற்கு முடிவுகட்ட வேண்டும் அல்லது சிறப்புரிமைகளுக்குரியவர்கள், அதைவிடக் குறைவாக முன்னுரிமைக்குரியவர் என்பது மட்டுமல்ல குடியுரிமைக்குரியவர்கள் என்பதைக் கூட கோரமுடியாதவாறு இந்து தேசத்துக்கு முற்றாக அடிமைப்பட்டே இந்த நாட்டில் வாழமுடியும். (மேற்படி பக்.52)

அனைத்து மதத்தினருக்கும் மத மற்றும் பண்பாட்டு உரிமைகள் உட்பட ஜனநாயக, குடியுரிமைகளை மறுக்கும் மேற்கண்ட கோல்வால்கரின் இந்து ராஷ்டிர விளக்கமே இன்னமும் ஆர்.எஸ்.எஸ்.-இன் சித்தாந்தமாக உள்ளது. இந்துவாகப் பிறந்தவர்கள் மட்டுமே இந்த ''தேச''த்துக்குரியவர்கள் என்பதை மேலும் வெறியோடு பின்வருமாறு கோல்வால்கர் எழுதியுள்ளார்.

''நமது இந்த மாபெரும் நாடு - அதன் வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கில் பரந்து விரிந்துள்ள அனைத்துக் கிளைகளோடும், அந்த மிகப்பெரிய கிளைகளில் அடங்கியுள்ள பிராந்தியங்களோடும் - வடக்கே இமயமலையில் இருந்து எல்லாத் தீவுகள் உட்பட தெற்கே உள்ள மாகடல் வரை ஒரு மிகப்பெரிய இயற்கையான ஒற்றை உறுப்பாகும். இந்த மண்ணின் குழந்தையாக நன்கு வளர்ந்தோங்கிய நமது சமுதாயம் இங்கே ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வாழ்ந்து வருகிறது. இந்தச் சமுதாயம், குறிப்பாக நவீன காலத்தில் இந்து சமுதாயம் என்பதாக அறியப்படுகிறது. இது ஒரு வரலாற்று உண்மையும் கூட. ஏனென்றால் இந்து மக்களின் முன்னோர்கள்தாம் இந்தத் தாய்நாட்டின் மதிப்பீடுகளையும் மரபுகளையும்.... கடமைகளையும் உரிமைகளையும் நிறுவி இதன் புனிதத்தையும் ஐக்கியம் - ஒருமைப்பாட்டையும் காப்பதற்காக ரத்தம் சிந்தினார்கள். இந்து மக்களே இவை அனைத்தையும் செய்தார்கள் என்கிற உண்மைக்கு நமது ஆயிரக்கணக்கான ஆண்டு கால வரலாறு தெள்ளத் தெளிவான சாட்சியமாக விளங்குகிறது. இந்த மண்ணின் மைந்தனாக இந்து மட்டுமே வாழ்கிறான் என்பதே இதன் பொருள்.'' (மேற்படி பக். 123,24)

இந்திய இசுலாமியர்களையும் கிறித்தவர்களையும் பொருத்தவரை, ''அவர்கள் இந்த நாட்டில் பிறந்தவர்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவர்கள் இந்த நாட்டுக்கு விசுவாசமானவர்களா?.... இல்லை. அவர்களது (மத-கடவுள்) நம்பிக்கையில் மாற்றம் ஏற்பட்டதோடு இந்த தேசத்தின் மீதான அவர்களது பாசமும், அர்ப்பணிப்

படிப்பகம்

www.padippakam.com

புக்கான உணர்வும் போய்விட்டது'' (மேற்படி பக். 127-28) இந்தக் கூற்றின்படி இந்து மதத்துக்கு விசுவாசமாக இருக்கிறார்களா, இல்லையா என்பதுதான் தேசப்பற்றுக்கான அடிப்படை என்று கோல்வால்கர் வரையறுக்கிறார். குறிப்பாக இசுலாமியர்கள் அனைவரும் தேச துரோகிகள் என்பதுதான் அவரது தீர்மானகரமான முடிவு. அதைப் பின்வருமாறு கூறுகிறார்.

''இந்த நாட்டின் எதிரிகளோடு தம்மை இனங்காட்டிக் கொள்ளும் ஓர் உணர்வையும் கூட அவர்கள் வளர்த்துக் கொண்டுள்ளார்கள். சில அந்நிய நாடுகளைத் தமது புனித இடங்களாக அவர்கள் கருதுகிறார்கள். அவர்கள் தங்களை சேக்குகள், சையதுகள்... என்றழைத்துக் கொள்ளுகிறார்கள். வெல்லவும் அரசுகளை நிறுவவுமே இங்கு வந்ததாக அவர்கள் இன்னமும் நம்புகிறார்கள். எனவே மத நம்பிக்கையில் ஏற்பட்ட ஒரு மாற்றமாக மட்டும் அதை நாம் பார்க்கக் கூடாது; மாறாக தேசிய இனத்துக்குரிய (அடையாள) மாற்றமாகவும் நாம் பார்க்க வேண்டும். தாய்த்தேசத்தை அனாதரவான நிலையில் விட்டுவிட்டு எதிரி முகாமில் சேருவதை ஒரு துரோகமாக அல்லாது வேறெப்படிக் கருதமுடியும்? (மேற்படி பக். 128).

இவை கோல்வால்கரின் தனிப்பட்ட கருத்தோ, ஏதோ ஒரு சமயம் வெளிப்பட்ட பிதற்றலோ அல்ல. ஆர்.எஸ்.எஸ்.-இன் 60 ஆண்டுகளுக்கு மேலான, உறுதியான, தொடர்ச்சியான சித்தாந்தமாகவே இருந்துள்ளன. அதன் அதிகாரபூர்வ ஏடுகளில் அடிக்கடி இவையே பிரதிபலித்துள்ளன. உருது இந்தியவில் தோன்றிய ''தேசிய'' மொழிகளில் ஒன்றுதான்; என்றாலும் அடிமைத் தனத்துக்கான அந்நிய மொழியாகவே அதைக்கருதி ஆர்.எஸ்.எஸ். எதிர்த்து வந்திருக்கிறது. ''உருதுவின் பெயரால் இன்னொரு பாகிஸ்தான் உருவாக்கிட அனுமதியோம்'' என்று ஆர்.எஸ்.எஸ்.-இன் ஆர்கனைசர் எழுதியது. அதேபோல் சமஸ்கிருதம் அல்லது இந்திக்குப் பதிலாக ஆங்கில மொழியை விரும்புவதாகக் கூறி இந்தியக் கிருத்துவர்கள் ஏசப்படுகின்றனர். பஞ்சாபில் வாழும் இந்துக்கள் தங்கள் தாய் மொழியாக பஞ்சாபியைப் பதிவு செய்வதற்குப் பதில் இந்தியைப் பதிவு செய்யும்படி ஆர்.எஸ்.எஸ். கும்பலால் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். ஜைன, பௌத்த மதங்களைப் பற்றி, ''அவர்கள் பொருளாதார, தத்துவார்த்த சிந்தனைக்கு எப்போதும் பங்களிப்பு செய்ததே கிடையாது'' என்று இழிவு படுத்தினர்.

மற்றவர்களது மதச்சார்பின்மை போலியானது, தம்முடையதுதான் உண்மையான ''மதச்சார்பின்மை'' என்று பீற்றிக் கொள்ளும் இந்துமத பாசிஸ்டுகளின் மத வெறியைப் பின்வருமாறு ஆர்கனைசர் ஏடு ஒப்புக்கொள்கிறது.

''நமது கலாச்சாரம் மகத்தானதாகப் பூத்துக்குலுங்க வேண்டும் என்பதையே இந்து விரும்புகிறான். ஒரு முஸ்லீமை ஜனாதிபதியாகவும், இன்னொரு முஸ்லீமைத் தலைமை நீதிபதியாகவும் உட்கார வைத்த பிறகும் முஸ்லீம்களுக்குப் பதவி அளிப்பதில்லை என்று இந்து மீது அவதூறு பொழிகிறார்கள்... பாகிஸ்தான் ஒரு முஸ்லீம் நாடாக இருப்பதைப் போல அல்லது பிரிட்டன் ஒரு கிறித்துவ நாடாக இருப்பதைப் போல இந்தியா ஒரு இந்து நாடு என்கிற உண்மையை முஸ்லீம்கள் ஏற்றுக் கொண்டாக வேண்டும்.'' (ஆர்கனைசர் 1970 ஜனவரி 4)

இப்படி மாற்று மதத்தினரை அந்நியர்கள், தேச துரோகிகள் என்று முத்திரை குத்திச் சாடும் ஆர்.எஸ்.எஸ். கும்பல் பிரிட்டிஷ் காலனிய எதிர்ப்பு தேசியத்தை ஏற்கவோ, மதிக்கவோ மறுக்கிறது. அதன் மூலம் உண்மையில் தாமே தேச துரோகிகள் என்பதை அக்கும்பல் ஒப்புக்கொள்கிறது. ஆங்கிலேய எதிர்ப்பு பற்றி கோல்வால்கர் பின்வருமாறு தனது எரிச்சலை வெளிப்படுத்தியுள்ளார்.

''தேசம் பற்றிய நமது கண்ணோட்டத்துக்கு அடிப்படையாக அமைந்துள்ள பிராந்திய அடிப்படையிலான தேசியம் மற்றும் பொது எதிரி ஆகிய கோட்பாடுகள் நேர்மறையான, உத்வேகமூட்டக்கூடிய நமது உண்மையான இந்து தேசியம் என்கிற உள்ளடக்கத்தை நாம் இழக்கச் செய்கின்றன. இதனால் நமது சுதந்திரப் போராட்ட இயக்கங்கள் பலவற்றையும் முற்றிலும் பிரிட்டிஷ் எதிர்ப்பு இயக்கமாக மாற்றிவிட்டன. பிரிட்டிஷ் எதிர்ப்பாளனாக இருப்பது தேசியம் மற்றும் தேசப்பற்றுக்கு இணையாக வைக்கப்பட்டது. இந்தப் பிற்போக்கான கண்ணோட்டம் சுதந்திரப் போராட்டப் போக்கு முழுவதன் மீதும், அதன் தலைவர்கள், பொதுமக்கள் மீதும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தியது'' (கோல்வால்கர், நாம் அல்லது நமது தேசிய விளக்கம் பக். 142-43)

நேருவுக்கு எதிரான பதவிப் போட்டியில் அன்றைய போலீசு மந்திரியாக இருந்த வல்லபாய் பட்டேலுக்கு ஆர்.எஸ்.எஸ். ஆதரவளித்ததால் அதற்குப் பிரதிகூலமாக அதிகார அரவணைப்பும் பெற்றது.

ஆர்.எஸ்.எஸ். - இந்து மகாசபாவின் வளர்ப்புப் பிள்ளையான நாதுராம் கோட்சே காந்தியைச் சுட்டுக் கொன்றதைத் தொடர்ந்து, அந்த அமைப்புகள் தடைசெய்யப்பட்டிருந்த காலகட்டம் இந்து மதவெறி பாசிஸ்டுகளுக்கு ஒரு நெருக்கடியைக் கொடுத்தது. ஆனால் விரைவிலேயே தடையை நீக்குவதற்கான பேரத்தைக் காங்கிரசு ஆட்சியாளர்களுடன் நடத்தியது. தரகு பெருமுதலாளியான ஜி.டி.பிர்லாவைத் தூதுவராகப் பயன்படுத்தி நேரு, பட்டேலுடன் இரகசிய பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. ஏகாதிபத்திய உலகப் போரைத் தொடர்ந்து வந்த உலகம் தழுவிய கம்யூனிச எழுச்சி குறிப்பாக கிழக்கு ஐரோப்பா - சீனா புரட்சி வெற்றிகள், கொரியா, வியத்நாம், இந்தோனேசியா, பர்மா என ஆசிய நாடுகளில் கம்யூனிசப் புரட்சியாளர்களின் முன்னேற்றம், இவற்றோடு தெலுங்கானா ஆயுதப் போராட்டம் ஆகியவற்றைக் காரணம் காட்டி கம்யூனிச ஆபத்தில் இருந்து நாட்டை மீட்பதற்கு காங்கிரசு - ஆர்.எஸ்.எஸ். கூட்டணி அவசியத்தை வலியுறுத்தி நேரு, பட்டேலுக்கு கோல்வால்கர் கடிதங்கள் எழுதினார்.

''கம்யூனிசத்தின்பால் இந்திய இளைஞர்கள் தீவிரமாக ஈர்க்கப்படுகின்றனர். அதைத் தடுப்பதற்கான சக்தியாக இருந்த ஆர்.எஸ்.எஸ். இப்போது இல்லை என்பதுதான் காரணம். இந்த ஆபத்தை எதிர்த்துப் போராடுவதில் கலாச்சார அடிப்படையில் ஆர்.எஸ்.எஸ். உதவும். காங்கிரசு அதிகாரத்திலும், ஆர்.எஸ்.எஸ். அமைப்பு ரீதியிலான கலாச்சாரச் சக்தியாகவும் இருப்பதால் அவை இணைந்து இந்த (கம்யூனிச) ஆபத்தை முறியடித்து விடமுடியும்'' (குருஜிக்கும் அரசுக்கும் இடையிலான வரலாற்று முக்கியத்துவமுடைய கடிதங்களின் ஒரு தொகுப்பு. உண்மையின் மீது குற்ற விசாரணை. ஆர்.எஸ்.எஸ். வெளியீடு பக். 23-26) என்று கோல்வால்கர் எழுதினார்.



**அண்மையில் ஆர்.எஸ்.எஸ். தடை நீக்கப்பட்டதும் பாசிச வணக்கம் செலுத்தி மகிழ்கின்றனர்**

ஆச்சாரிய கிருபளானி தலைமையிலான கையெழுத்து இயக்கம், பிறகு ஒரு குறுகிய சத்தியாகிரகம், சிறை நிரைப்புப் போராட்டம் நடத்தியது ஆர்.எஸ்.எஸ். கும்பல். பிர்லா மூலம் அரசுடன் நடத்திய பேரத்தின் அடிப்படையில், ஒரு எழுத்துபூர்வமான அமைப்புச் சட்டம், உறுப்பினர்கள் பதிவேடு, பெற்றோர் அனுமதியில்லாமல் சிறுவர்களைச் சேர்ப்பதில்லை மற்றும் கலாச்சாரத்துறையில் மட்டுமே பணியாற்றுவது ஆகிய நிபந்தனைகளை ஆர்.எஸ்.எஸ். ஏற்றது. இவை எதுவும் பாரிய நிபந்தனைகள் அல்ல என்றாலும் இதற்காக 1949 ஜூலையில் ஆர்.எஸ்.எஸ். தடை நீக்கப்பட்டது.

அதன் பிறகு ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தம் மற்றும் அமைப்புப் பணிகளுக்குப் புத்துயிர் ஊட்டும் முயற்சியில் கோல்வால்கர் ஈடுபட்டார். 1954 மார்ச்சு மாதம் நடந்த


படிப்பகம்

www.padippakam.com

மாவட்ட நிர்வாகிகள் மாநாட்டில் இந்துத்துவத்துக்குப் புது வியாக்கியானம் கொடுத்து ஒரு நீண்ட சொற்பொழிவாற்றினார். பொருள்முதல்வாதம் மற்றும் தனிமனிதத்துவத்துக்கு முக்கியத்துவம் அளிக்கும் மேற்கத்திய தத்துவத்தில் இருந்து மாறுபட்ட சமூகக் கண்ணோட்டத்தை அடிப்படையாகக் கொண்டதுதான் இந்துத்துவம்; தனிமனிதன் - சமூகம் அல்லது குடும்பம் - இயற்கை - தெய்வீகம் என்கிற நான்கு அடுக்குகளைக் கொண்டதுதான் இந்துத்துவம்; சமூகம் மற்றும் இயற்கையைப் புனிதமாக மதிப்பதன் மூலம் இறைவனை அடைவதுதான் இந்துத்துவம் - என்று கூறி தனது மதவாதக் கண்ணோட்டத்துக்குப் புதிய பூச்சு தந்தார். அறிவு - அதிகாரம், செல்வம், உழைப்பு (புத்தி - ராஜ்யம் - தனம் - சிரமம்) ஆகிய நான்கு சக்திகளின் முரணற்ற ஒருங்கிணைந்த அமைப்புதான் இந்து தர்மம் என்று சொன்னார். உண்மையில் இது பார்ப்பனன் - சத்திரியன் - வைசியன் - சூத்திரன் என்ற நான்கு வருண சனாதன தருமத்தின் மறு விளக்கம்தான். சாதி, பால் மற்றும் வர்க்க அடிப்படையிலான சுரண்டலையும், ஒடுக்குமுறையும் அவற்றின் விளைவான போராட்டங்களையும் மூடி மறைத்து இந்து சமூகம் என்பது முரண்பாடுகளற்ற சாந்தமும் - ஒற்றுமையும் கொண்டது என்று பித்தலாட்டம் செய்வதுதான் கோல்வால்கரின் சித்தாந்த வியாக்கியானம்.

இப்புதிய சித்தாந்த வியாக்கியானத்துக்கேற்ப இந்துக்களை அணிதிரட்டுவதற்காகப் பல புதிய துணை அமைப்புகளை நிறுவுவது என்று ஆர்.எஸ்.எஸ். முடிவு செய்து, தொழிலாளர் மத்தியில் பணியாற்ற பாரதீய மஸ்தூர் சங்கம் (பி.எம்.எஸ்.), மாணவர் மத்தியில் பணியாற்ற அகில பாரதீய வித்தியார்த்தி பரிசத் (ஏ.பி.வி.பி.), அரசியலுக்கு பாரதீய ஜனசங்கம் (பி.ஜே.எஸ்.), மதத்துக்கு விசுவ இந்து பரிசத் (வி.எச்.பி.) ஆகியவற்றைக் கட்டியமைப்பது எனத் தீர்மானித்தது.

தொழிலாளர்கள் கம்யூனிச சங்கங்களில் சேருவதைத் தடுத்து, கருங்காலித்தனத்தில் ஈடுபடுத்துவதுதான் பி.எம்.எஸ். நடவடிக்கை. தொழிலாளி வர்க்க சர்வதேச ஒற்றுமையைக் குறிக்கும் மேதினத்துக்குப் பதிலாக விசுவகர்ம பூசை நடத்துகிறது, பி.எம்.எஸ். அதேபோல மாணவர்களுக்கு வியாஸ் பூசை நடத்தக்கோரும் ஏ.பி.வி.பி. உண்மையில் மாணவர் போராட்டங்களை முறியடிக்கும் குண்டர்படையாகவும், ஆர்.எஸ்.எஸ்.-க்கு ஆள்சேர்க்கும் அமைப்பாகவும் பயன்படுத்தப்படுகிறது. சில சில்லறை சலுகைகளுக்காகப் போராடும் ஏ.பி.வி.பி. பெரும்பாலும் புரட்சிகர, முற்போக்கு மாணவர் இயக்கங்களை எதிர்ப்பதையே முக்கிய நடவடிக்கையாகக் கொண்டுள்ளது.

இந்து மதவெறிப் பிரகடனங்களை மூடிமறைத்துக் கொண்டு பொதுவான சில கவர்ச்சிவாதத் திட்டங்களை முன்வைத்து அரசியல் செல்வாக்குப் பெற்று அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக அமைக்கப்பட்டதுதான் பாரதீய ஜன சங்கம். காங்கிரசில் இருந்து வெளியேறிய இந்து வெறியர்



கோல்வால்கர்: ஆர்.எஸ்.எஸ்.-ன் சிந்தாந்த குரு

சியாமா பிரசாத் முகர்ஜி என்னும் வங்கப் பார்ப்பனர் தலைமையில் தீன்தயாள் உபாத்தியாயா, வாஜ்பாயி, அத்வானி போன்ற சிலரை ஆர்.எஸ்.எஸ். பிரதிநிதியாக அரசியலுக்கு அனுப்பி இந்தக் கட்சி துவக்கப்பட்டது. முதலாளித்துவ தனிமனிதத்துவம், மார்க்சிய சோசலிசம் இரண்டிலிருந்தும் மாறுபட்ட ''ஒருங்கிணைந்த மனிதத்துவம்'' என்பதை பாரதீய ஜனசங்கத்தின் தத்துவமாக தீன்தயாள் உபாத்தியாயா வகுத்தளித்தார். மனிதன் - இயற்கை, தனிமனிதன் - சமூகம், உழைப்பு - மூலதனம் ஆகியவற்றுக்கிடையில் முரண்பாடற்ற, சாந்தமான உறவை ஏற்படுத்துவதுதான் இந்த ஒருங்கிணைந்த மனிதத்துவத்தின் அடிப்படை என்று அவர் விளக்கினார். பார்ப்பன சனாதன வருணாசிரம தர்மத்தையே தேசிய தர்மம் என்று புதுவடிவில் விளக்கம் தரும் இந்துத்துவத்தின்படி தர்மம் என்பது அரசுக்கு மேலானது; நாடாளுமன்றத்தைவிட தேசிய கலாச்சாரமும் தர்மமுமே முக்கியமானது. தேர்தல்களும் நாடாளுமன்றமும் இவற்றைத் தீர்மானிக்க முடியாது - என்று வாதாடும் இந்த ''ஒருங்கிணைந்த மனிதத்துவம்'' உண்மையில் ஒரு இந்து மதவாத பாசிச ஆட்சிக்கான தத்துவத்தையே முன்வைக்கிறது.

வடமாநிலங்களில் படிப்படியாக வளர்ந்துவந்த பாரதீய ஜனசங்கம், 1976-77 அவசரகால ஆட்சிக்குப் பிறகு உருவாகிய ஜனதா கட்சியில் இணைந்தது. மொரார்ஜி தலைமையிலான ஜனதா அரசாங்கத்தில் ஏறக்குறைய இரண்டரை ஆண்டுகள் பங்கேற்றது. அதைப் பயன்படுத்திக் கொண்டு ஆர்.எஸ்.எஸ்.-இன் துணை அமைப்புகள் விரிவுபடுத்தப்பட்டன. ஜனதா கட்சி பிளவுபட்டு, ஆட்சி கவிழ்ந்த பிறகு தனியாகவே பாரதீய ஜனதா கட்சியாக இந்து மதவெறி பாசிஸ்டுகள் அமைத்துக் கொண்டனர். அது மற்றபிற ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்களின் அரசியல் தலைமையாக விளங்குகிறது.

**ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தம் மற்றும் அமைப்புப் பணிகளுக்குப் புத்துயிர் ஊட்டும் முயற்சியில் கோல்வால்கர் ஈடுபட்டார். இந்துமத சாதுக்கள் - சந்நியாசிகள், மகந்துகள், புரோகிதர்களின் பலத்தைத் திரட்டுவதன் அவசியத்தை உணர்ந்தார்.**

பார்ப்பன அறிவு ஜீவிகளாலும், நடுத்தர வர்க்க இளைஞர்களாலும் தோற்றுவித்து வளர்க்கப்பட்ட ஆர்.எஸ்.எஸ். மற்றும் அதன் துணை அமைப்புகளும், மரபு வழி மதத் தலைவர்கள் - குருமார்களின் நேரடித் தொடர்பில்லாமல் இருப்பதை கோல்வால்கர் கண்டார். இந்துமத சாதுக்கள் - சந்நியாசிகள், மகந்துகள், புரோகிதர்களின் பலத்தைத் திரட்டுவதன் அவசியத்தை உணர்ந்தார். பல்வேறு இந்துமதப் பிரிவுகள், போக்குகளில் உள்ள வேறுபாடுகளைக் கலைந்து ஒரே வார்ப்பாக மாற்றுவதற்கும், மேலை நாடுகளில் வாழும் இந்துக்களின் ஆதரவைத் திரட்டுவதற்கும் இந்துமதத் தலைவர்களின் மாநாடு ஒன்றை 1964-இல் பம்பாயில் கோல்வால்கர் கூட்டினார். அப்போது சிவராம் சங்கர் ஆப்தே என்கிற இன்னொரு ஆர்.எஸ்.எஸ். மராத்திய பார்ப்பனர் தலைமையில் விசுவ இந்து பரிசத் என்கிற தனி அமைப்பைத் தொடங்குவதாக முடிவானது.

ஆர்.எஸ்.எஸ். மற்றும் அதன் துணை அமைப்புகள் தம்மை ஒரு தேசிய சக்தியாகக் காட்டிக் கொள்வதற்காக சில முக்கிய நடவடிக்கைகளில் ஈடுபடும்படி செய்தார் கோல்வால்கர். கம்யூனிசப் புரட்சியாளர்களின் தெலுங்கானா பேரெழுச்சியை முறியடிப்பதற்கு வினோபா பாவே துவங்கிய பூதான இயக்கம்; போர்த்துக்கீசிய காலனியப் பகுதிகளை விடுவிப்பதற்கு நடந்த சத்தியாகிரகம்; அசாமில் கிழக்கு வங்க அகதிகள் மற்றும் அசாம் பூமி அதிர்ச்சிக்குப் பலியானவர்கள் நிவாரணப் பணிகள்; 1962 இந்தோ - சீன மற்றும் 1963 இந்தோ - பாக். போர்களில் இராணுவத்துக்கு உதவும் பணிகள் ஆகியவற்றில் ஈடுபட்டதன் மூலம் நல்லபிள்ளை வேடம் போட்டனர். 1963 குடியரசு தின அணிவகுப்பில் பங்கேற்க அனுமதி பெறும் அளவுக்கு ஆர்.எஸ்.எஸ்.-இன் தேசிய வேடம் வெற்றிபெற்றது.

இவ்வாறு சவார்கர் - ஹெட்கேவார் ஆகியோரால் வித்தூன்றி செடியாக வளர்க்கப்பட்ட ஆர்.எஸ்.எஸ். மற்றும் அதன் துணை அமைப்புகள் கோல்வால்கரால் நீரிட்டு, உரமிட்டு நச்சு மரமாகவே வளர்ந்தது. கோல்வால்கருக்குப் பிறகு அது மராத்தியப் பார்ப்பனர்களான தேவரஸ் சகோதரர்களின் தலைமையில் கீழ் நாட்டின் மிகப் பெரிய பாசிச சக்தியாக வளர்க்கப்பட்டது. முந்தைய ''குருஜி''க்களைப் போல சித்தாந்த ரீதியில் முக்கிய பங்களிப்பு எதையும் செய்யவில்லையானாலும் இந்துமத பாசிச வெறியூட்டும் நடவடிக்கைகள் மேலும் தீவிரமாகவும் வீச்சோடும் ஆர்.எஸ்.எஸ்.ஐ உருவாக்கியவர்கள் இந்த தேவரஸ் சகோதரர்கள்.

(தொடரும்)

www.padippakam.com

# தேவாரம் கும்பலின் காட்டுமிராண்டித்தனம்

நள்ளிரவுவேளை, சுற்றிலும் மிருகவெறியுடன் போலீசு சூழ்ந்திருக்க, ''ஐயோ! எனக்குத் தெரியாது, நான் அவனைப் பார்த்ததுகூட இல்லை'' என்று அந்த இளம்பெண் கதறிக் கொண்டிருந்தார். அவரது தலைமுடியைக் கொத்தாகப் பிடித்திருந்த ஒரு போலீசுக்காரன் பளாரென்று அறைந்தான். எதிர்பாராத தாக்குதலில் நிலைகுலைந்து விழுந்தபோது, மற்றொரு போலீசுக்காரன் அப்பெண்ணின் ஆடையை உருவி மார்பகங்களைப் பிடிக்க முயன்றான். அலறியபடியே அப்பெண் தப்பியோட, அவரைத் துரத்திக் கொண்டு காக்கிச் சட்டைக் கயவானிகள் ஓடினர். காடு, மலைகளில் அப்பெண்ணின் அலறல் எதிரொலித்தது.

கனத்த பூட்சுகளுடன் மிடுக்கான சீருடை; கைகளிலே ஏ.கே.47 ரக துப்பாக்கி; கண்களிலே காமவெறி - இவர்கள் சந்தனக் கடத்தல் வீரப்பனைப் பிடிக்கக் கிளம்பியுள்ள அதிரடிப்படையினர். வீரப்பன் வேட்டை என்ற பெயரால், கர்நாடக எல்லையோர கிராமப் பகுதிகளில் உள்ள மக்கள் அதிரடிப்படையினரால் மிருகத்தனமான சித்திரவதை செய்யப்படுகிறார்கள். அபலைப் பெண்கள் காமவெறி பிடித்த மிருகங்களால் தினமும் குதறப்படுகிறார்கள். வீரப்பனின் கூட்டாளிகள் என்று முத்திரை குத்தப்பட்ட கிராம மக்கள் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள்.

அடுத்தடுத்து வீரப்பனின் கண்ணிவெடி தாக்குதலுக்கு போலீசாரைப் பலி கொடுப்பதால் ஏற்படும் வெறி, தோல்வியால் ஏற்படும் அவமானத்தைத் தாங்கிக் கொள்ள முடியாத ஆத்திரம், காடு மலைகளில் அலைந்து திரிவதால் இதுவரை சந்தித்திராத இடர்ப்பாடுகள் எல்லாமும் சேர்ந்து தமிழக - கர்நாடக அதிரடிப் படையினரை மிருக வெறிபிடித்த கும்பலாக மாற்றிவிட்டது. ஆக்கிரமிப்பு ராணுவத்தைப் போல, எல்லையோர கிராமங்களைச் சூழ்ந்து கொண்டு அது நடத்தும் காட்டு மிராண்டித் தனமான தாக்குதல்களையும், வக்கிரமான சித்திரவதைகளையும் கேட்டாலே நெஞ்சம் நடுநடுங்கும்.

ஏப்ரல் 29-ம் தேதி நள்ளிரவு வேளை, கொளத்தூர் அருகிலுள்ள மேட்டுப் பனையூரில் திடீரென போலீசு கும்பல் சூழ்ந்து கொண்டது. வீட்டுக் கதவுகள் நொறுக்கப்பட்டு ஆண்களும் பெண்களும் வீதிக்குக் கொண்டு வரப்பட்டனர். ரேடியோ, டேப் ரிக்கார்டர், பணம், நகை அனைத்தும் போலீசாரால் சூறையாடப்பட்டன. ''மரியாதையா வீரப்பன் எங்கே இருக்கான்னு சொல்லிடு'' என்று கேட்டு ஆண்கள் அனைவரும் கொடூரமாகத் தாக்கப்பட்டனர். அதைத் தாங்க முடியாமல் வயதானவர்கள் மயங்கிக் கீழே விழுந்தனர். மிருகத்தனமான இத்தாக்குதலைக் கண்டு பெண்கள் அனைவரும் போலீசாரின் கால்களில் விழுந்து கெஞ்சிக் கதறினர். வெறி பிடித்த போலீசாரிடம் இரக்கத்தையா எதிர்பார்க்க முடியும்? அப்பெண்களின் சேலையை உருவி, ஆபாச வார்த்தைகளால் ஏசி, எகத்தாளம் செய்து ரசித்தது போலீசு கும்பல்.

''வீரப்பன் எங்கேடி?'' - இது ஒவ்வொரு கிராமத்திலும் நடக்கும் முதல் விசாரணை. ''நீதானே அவனுக்கு சாப்பாடு கொடுத்தே?'' ''நீதான் அவனுக்கு கள்ளக் காதலியா?'' என்று ஆபாச வசவுகளுடன் அடுத்து நடக்கும் சித்திரவதை. இளம் பெண்கள் மட்டுமல்ல; வயது வித்தியாசமின்றி குழந்தைகளும் மூதாட்டிகளும் கூட போலீசு மிருகங்களின் பாலியல் வக்கிரத்துக்கு வேட்டையாடப்படுகிறார்கள். எட்டு வயது, பத்து வயதுள்ள சிறுமிகளின் மார்பு களைப் பிடித்து போலீசு மிருகங்கள் கடித்துக் குதறியுள்ளன. காயங்களால் ஏற்பட்ட வலி தாளாமல் இன்னமும் அப்பிஞ்சுக் குழந்தைகள் விம்மிக் கொண்டிருக்கின்றன. மேட்டுப் பாளையூரில் ஒன்பது மாதக் கர்ப்பிணிப் பெண்ணான பழனியம்மாள் என்பவர் போலீசுக்காலிகளின் பாலியல் வன்முறைக்கு ஆளாகி குற்றுயிரும் குலையுயிருமாகக் கிடக்கிறார். பல இளம் பெண்கள் போலீசு கும்பலால் இழுத்துச் செல்லப்பட்டு, அவர்களின் காமப்பசிக்காக நிரந்தரமாக 'கேம்ப்'புகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக, மலைப்பகுதிகளில் வாழும் லம்பாடி இனப்பெண்கள் கேள்விமுறையின்றி போலீசாரின் பாலியல் வன்முறைக்கு வேட்டையாடப்பட்டு வருகிறார்கள்.

கிராமங்களில் தேடுதல் வேட்டை நடத்தியும், வீரப்பனைப் பற்றி உருப்படியான தகவல் ஏதும் கிடைக்காத ஆத்திரத்தில் அம்மக்களைத் துன்புறுத்துவதும், அவர்களது அற்ப உடமைகளைச் சூறையாடுவதும், பொதுச் சொத்துக்களை நாசமாக்குவதும் போலீசாரின் வாடிக்கையாகிவிட்டது. பணம், நகைகள், பாத்திரங்கள், பட்டுப்புடவைகள் என கிடைத்ததைச் சுருட்டிக் கொள்ளும் களவாணி கும்பலாக போலீசு ஆட்டம் போடுகிறது. இதுமட்டுமின்றி, கிராமங்களில் அம்மக்கள் வளர்த்து வந்த ஆடு, கோழிகளைக்கூட பறித்துச் சென்று போலீசு கும்பல் கறியாக்கித் தின்று கொழுக்கிறது. இப்பகுதியிலுள்ள கிராமங்களில் தென்னை மரத்தில் இளநீர் தேங்காய்களையே காண முடியவில்லை.

மேட்டுப்பாளையூர், வக்கம்பட்டி, சின்னதண்டா, நாயக்கன்தண்டா, காரைக்காடு, கோவிலூர் என கணக்கற்ற கிராமங்களில் போலீசு நடத்திய மிருகத்தனமான தாக்குதலால், அம்மக்கள் பீதியில் உறைந்து போயுள்ளார்கள். உடமைகளையும் உழுபடைக் கருவிகளையும் இழந்து நிற்கும் அவர்களை, மீண்டும் போலீசு வந்து தாக்குமோ என்று அச்சமும் கவலையும் பிடித்தாட்டுகிறது. கிராமங்களில் 144 தடை உத்தரவு போடப்பட்டு, ரேஷன் கார்டு இல்லாதவர்கள் போலீசாரால் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்படுகிறார்கள். இப்பகுதியில் குறிப்பிட்ட சில சாலைகளில் பேருந்துகள் மற்றும் வாகனப் போக்குவரத்து முற்றாக நிறுத்தப்பட்டுள்ளது. எஞ்சிய சாலைகளில் போலீசு சோதனைச் சாவடிகள் நிறுவப்பட்டு, கடுமையான விசாரணை, துன்புறுத்தலால் மக்கள் நடமாட்டமே குறைந்து விட்டது. மலைப்பகுதியிலுள்ள கல்குவாரிகளில் வெடி வைப்பதும் தடை செய்யப்பட்டுள்ளதால், இப்பகுதிவாழ் மக்கள் பிழைப்புக்கே வழியின்றித் தவிக்கிறார்கள். சுருக்கமாகச் சொன்னால், கர்நாடக எல்லைப்புற கிராமங்கள் அனைத்தும் வெளியுலகத் தொடர்பின்றி போலீசு கும்பலால் ஆக்கிரமித்துக் கொள்ளப்பட்டுள்ளன. அங்கே என்ன நடக்கிறது என்று அறிந்து கொள்ள முடியாதபடி இரும்புத் திரை போடப்பட்டுள்ளது. அதையும் மீறி மெதுவாகக் கசிந்து உண்மைகள் இரத்தத்தையே உறைய வைப்பவையாக உள்ளன.

வீரப்பனைத் தேடி கிராமங்களில் நடத்தும் அட்டூழியங்கள் ஒருபுறமிருக்க, மாதேஸ்வர மலையிலுள்ள கர்நாடக அதிரடிப்படை முகாமிலும், மேட்டூரிலுள்ள தமிழக அதிரடிப்படையின் முகாமிலும் நடக்கும் சித்திரவதைக் கொடுமைகளை விளக்க வார்த்தைகள் போதாது. காவேரிபுரம் கிராமத்தில் தேடுதல் வேட்டை நடத்தி முடித்த பிறகு தனபால் என்பவரை போலீசார் விசாரணைக்கு இழுத்துச் சென்றனர். மாதேஸ்வர மலையிலுள்ள முகாமில் அவரைத் தலைகீழாகக் கட்டித் தொங்கவிட்டு, வீரப்பன் எங்கே என்று கேட்டு நாற்புறமும் போலீசார் சூழ்ந்து கொண்டு தாக்கினர். மூக்

**''போலீசார் இழுத்துச் சென்ற என் கணவரை காணவில்லை''; இக்கதறலுக்கு பதில்?**



படிப்பகம்

www.padippakam.com

கிலும் வாயிலும் ரத்தம் கொப்பளிக்க அவர் மயங்கி துவண்ட பிறகு, அவரை கீழே இறக்கிப் போட்டு பிறப்பு உறுப்பில் மின்சார அதிர்ச்சி கொடுத்தனர். கொமராயனூர் கிராமத்தைச் சேர்ந்த மாணிக்கம் என்பவருக்க முகாமில் நடந்த சித்திரவதையால் கால் எலும்பு முறிந்து போனது. இதைப்பற்றி வெளியில் சொன்னால் உன்னை உயிரோடு விடமாட்டோம் என்று மிரட்டி அவரை விடுதலை செய்துள்ளனர்.

ஆண்கள் மட்டுமல்ல; பெண்களுக்கும் இதே வகையான சித்திரவதைகள். வக்கம்பட்டியைச் சேர்ந்த லட்சுமி எனும் பெண்மணியின் கைகளைக் கட்டிவிட்டு போலீசார் காட்டுத்தனமாக அடித்ததோடு, கால்களை நீட்டச் சொல்லி 4 போலீசார் பூட்ஸ் காலால் ஏறி மிதித்துள்ளனர். இதுதவிர காது, மூக்கு, மார்பகம், பிறப்புறுப்பு போன்றவற்றில் மின்சார அதிர்ச்சி கொடுத்து தொடர்ந்து சித்திரவதை செய்துள்ளனர். பெண்களை வதைத்து பாலியல் வன்முறையை ஏவியதோடு, பிடித்துச் சென்ற சிறுவர் - சிறுமிகளை நிர்வாணமாக்கி கட்டாய உடலுறவு கொள்ளச் செய்து வக்கிரமாக ரசித்துள்ளது போலீசு கும்பல்.

இப்படி நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் சித்திரவதை முகாம்களில் கேள்வி முறையின்றி வதைபட்டுக் கொண்டிருக்கிறார்கள். சித்திரவதைக்குப் பிறகு விடுவிக்கப்பட்டவர்கள் தமது பெயரையோ, ஊரையோ பத்திரிகையில் வெளியிட வேண்டாம் என்று பயபீதியில் கெஞ்சுகிறார்கள். விசாரணைக்காக போலீசாரால் இழுத்துச் செல்லப்பட்ட இன்னும் பலர் என்ன ஆனார்கள் என்றே இதுவரை தெரியவில்லை. இதுதவிர, தமிழக - கர்நாடக அதிரடிப் படையினரால் அப்பாவிகள் பலர் ''தடா'' சட்டத்தின் கீழ் சிறையிலடைக்கப்பட்டுள்ளனர்.

வீரப்பனைப் பிடிக்காமல் திரும்ப மாட்டேன் என்று பரபரப்பாக சவடால் அடித்துவிட்டு, மேட்டூரில் அதிரடிப் படையுடன் முகாமிட்டு வேட்டைக்கு கிளம்பினார் 'சூரப்புலி' தேவாரம். முறுக்கிய மீசையுடன் கமாண்டோ சீருடையில் கையில் துப்பாக்கியுடன் பத்திரிகைகளில் விளம்பர 'ஸ்டண்ட்' அடித்ததற்கு மேல் வேறொன்றையும் இந்தக் கிழட்டுக் கோமாளி சாதிக்கவில்லை. அப்பாவி கிராம மக்களைப் பிடித்து சித்திரவதை செய்வதில்தான் தேவாரம் கும்பல் தனது வீரதீர சூரத்தனத்தைக் காட்டிக் கொண்டிருக்கிறது. வீரப்பனைப் பற்றி விபரம் தெரிந்த ஆள்காட்டிகள் அனைவரையும் முந்தைய அதிரடிப்படைத் தலைவர் கோபால்கிருஷ்ணன், வீரப்பனின் கண்ணி வெடிக்குப் பலிகொடுத்துவிட்டார். இப்போது உளவாளிகள், ஆள் காட்டிகள் யாருமில்லாத நிலையில் புதிதாக அத்தகையவர்களை உருவாக்கும் நோக்கத்தோடு தேவாரம் கும்பல், அப்பாவி மக்களைப் பிடித்து சித்திரவதை செய்து வருகிறது.

**கர்நாடக எல்லைப்புற கிராமங்கள், அனைத்தும் வெளியுலகத் தொடர்பின்றி போலீசு கும்பலால் ஆக்கிரமித்துக் கொள்ளப் பட்டுள்ளன. அங்கே என்ன நடக்கிறது என்று அறிந்து கொள்ள முடியாதபடி இரும்புத் திரை போடப் பட்டுள்ளது.**

வீரப்பன் வேட்டையில் முன்னேறி வருகிறோம்; வீரப்பன் வைத்த கண்ணி வெடிகளில் நூற்றுக்கும் மேலானவற்றை அழித்துவிட்டோம் என்ற கூசாமல் புளுகிக் கொண்டு சுயவிளம்பரத் தம்பட்டம் அடித்துக் கொண்டது தேவாரம் கும்பல். அதையும் வெட்கமின்றி பாராட்டி ஜெயா கும்பல் வைக்குவித்தது. அதனால் மேலும் உற்சாகமடைந்து, சுயவிளம்பர போதையில் மூழ்கி கடந்த மே மாத இறுதியில் தேவாரம் நடத்திய வீரபர்ாக்கிரம நாடகம் அம்பலப்பட்டு கோமாளிக் கூத்தாகிவிட்டது.

கடந்த மே 24-ந் தேதியன்று வீரப்பன் நடத்திய தாக்குதலில் கர்நாடக அதிரடிப்படையின் 6 போலீசார் கொல்லப்பட்டு, அப்படையின் தலைவர் கோபால் ஹோசூர் படுகாயமடைந்தார். அடுத்தநாள், தமிழக அதிரடிப் படையின் தலைவரான தேவாரம், மேட்டூர் அருகே வீரப்பன் கூட்டாளிகள் மூவரைக் கொன்று பெருமளவு ஆயுதங்களைக் கைப்பற்றிவிட்டதாக பரபரப்பாக பேட்டி அளித்தார். வேடிக்கை என்னவென்றால், வீரப்பன் கும்பல் திருப்பிச் சுட்டபோதிலும் அதிரடிப் படையினருக்கு சிறு காயம்கூட ஏற்படவில்லையாம்! மேலும், இறந்த மூவரின் பிணம் என்னவானது என்று இதுவரை தெரியவில்லை. பிரேதப் பரிசோதனைக்காக எந்த மருத்துவமனைக்கும் கொண்டுவரப் படவும் இல்லை. சேலத்திலிருந்து வந்த போலீசு புகைப்படக்காரர்களும் கைரேகை நிபுணர்களும் அதிரடிப்படையால் திருப்ப அனுப்பப்பட்டுள்ளனர். தேவாரத்தின் அண்டப்புளுகு அம்பலப்படத் தொடங்கியதும், பிணத்தை வீரப்பன் ஆட்கள் மாயமாக எடுத்துச் சென்றுவிட்டார்கள் என்று பூசி மழுப்புகின்றனர்.

வீரப்பன் வேட்டை என்ற பெயரில் கர்நாடக எல்லையோர கிராமங்களில் தேவாரம் கும்பல் நடத்தும் வரைமுறையற்ற அட்டூழியங்கள் கேள்வி கேட்பாரின்றி இன்னமும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. இது தவிர பஞ்சாபிலும் காஷ்மீரிலும் பாலியல் வன்முறைக்கும், காட்டுமிராண்டித்தனமான சித்திரவதைக்கும் பேர்போன எல்லைப் பாதுகாப்புப் படையின் 5 கம்பெனிகள் வீரப்பன் வேட்டைக்கு கர்நாடக அரசால் இறக்கிவிடப்பட்டுள்ளது. போலீசு, துணை ராணுவப் படைகளால் பாதிக்கப்பட்ட மக்களில் சிலர் முதல்வரின் உதவியாளரிடம் வந்து கதறி அழுத போதிலும், டெல்லியைச் சேர்ந்த மனித உரிமைக்கான அமைப்பு, தொடரும் சித்திரவதைகளைக் கண்டித்து விசாரணை நடத்தக்



தேவாரம்: காட்டுமிராண்டியின் கோமாளி வேடம்

கோரிய போதிலும் ஜெயா அரசு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. உடனடி ஆதாயம் ஏதும் இல்லாத காரணத்தால் எந்தவொரு ஓட்டுக் கட்சியும் இந்தக் காட்டுமிராண்டித்தனத்தை எதிர்த்துப் போராட முன்வரவுமில்லை. பாட்டாளி மக்கள் கட்சியினர் மட்டுமே இப்பகுதியிலுள்ள மக்களுக்கு தற்காப்பு ஆயுதம் வழங்கப் போவதாக சவடால் அடித்துள்ளனர்.

வீரப்பன் வேட்டை என்ற பெயரில் தொடரும் அட்டூழியங்களும், நாள்தோறும் அதிகரித்துவரும் போலீசு நிலையக் கொட்டடிக் கொலைகள் - கற்பழிப்புகளும் இந்த அரசு எந்திரம் முழுவதுமே சமூகவிரோத கிரிமினல் - பாசிச மயமாவதையே காட்டுகின்றன. குற்றவாளிகளான போலீசு குண்டர்களை சட்டபூர்வமான வழிகளில் தண்டிப்பதற்கான வாய்ப்புகள் எதுவும் கிடையாது என்பதையும் இவை உணர்த்துகின்றன. எனவே உழைக்கும் மக்கள் நேரடியாக அதிகாரத்தைக் கையிலெடுத்துக் கொண்டு குற்றவாளிகளைத் தண்டிப்பதைத் தவிர வேறு வழியில்லை. அடக்குமுறைக்குள்ளானவர்கள் தீர்ப்பு வழங்குவதைத் தடுக்க யாருக்கும் உரிமையுமில்லை.

● பாலன்

படிப்பகம்

www.padippakam.com

# நாகா - குக்கி இனச் சண்டை: போராளிகளின் திசைத் தவறுகள்

அரக்கான் மலைப் பள்ளத்தாக்கில் அமைந்துள்ள மணிப்பூர் மாநிலத்தில் வாடைக்காற்று தவழ்ந்து கொண்டிருந்த மார்ச் மாதம். பருவ மழையையும் பிரம்ம புத்திரா நதி நீரையும் எதிர்பார்த்து விவசாயிகள் தமது நிலங்களில் விதைப்புக்கு முன் ஏரோட்டிவிட்டு களைப்புடன் கண்ணுறங்கிய நள்ளிரவு வேளை. திடீரென அந்த நள்ளிரவு அமைதியைக் கிழித்துக் கொண்டு துப்பாக்கிகள் முழங்கின. சீருடை அணிந்த கும்பலொன்று குடிசைகளுக்குத் தீ வைத்தது. அலறியடித்துக் கொண்டு ஓடி வந்த மக்கள் மீது கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தியது. இத்திடீர் தாக்குதலிலும் தீயில் சிக்கியும் 23 பேர் மாண்டு போயினர். தலைநகர் இம்பாலுக்கு அருகிலுள்ள கோக்சாய் கிராமம் மார்ச் 12-ம் நாளன்று முழுவதும் எரிந்து சாம்பலானது.

இந்திய ராணுவம் போராளிகளைத் தேடுவது என்ற பெயரில் வழக்கம்போல் நடத்தும் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் என்று கோக்சாய் கிராமத்து குக்கி இன மக்கள் கருதியதற்கு மாறாக, இது நாகா தேசிய இனப் போராளிக் குழுவினரால் நடத்தப்பட்ட தாக்குதல் என்று அறிந்ததும் அதிர்ச்சியில் உறைந்து போனார்கள். இனிமேலும் அங்கு வாழ முடியாது என்று உயிருக்கு அஞ்சி கிராமத்தை விட்டே ஓடிவிட்டார்கள். இன்று கோக்சாய் கிராமம் மயான பூமியாகிக் கிடக்கிறது.

மணிப்பூர் மாநிலத்தில் நாகா - குக்கி தேசிய இனங்களுக்கிடையே தொடரும் இனவெறி மோதலின் ஒரு கோரமான காட்சிதான் இது. கடந்த ஆண்டிலிருந்தே இவ்விரு இனங்களுக்கிடையே சிறியதும் பெரியதுமாக கணக்கற்ற மோதல்கள் நடந்து வருகின்றன. கடந்த மார்ச் மாத இறுதியில் குக்கி தேசிய இனப் பள்ளிச் சிறுவர்களைக் கொண்ட பேருந்து ஒன்று நாகா இனக் கும்பலினால் வழிமறித்துத் தாக்கப்பட்டு தீயிட்டுக் கொளுத்தப்பட்டது. அதிலே 20-க்கும் மேற்பட்ட அப்பாவி குழந்தைகள் மாண்டு போயினர். இதற்குப் பழிவாங்கும் நடவடிக்கையாக குக்கி தேசிய இனப் படையானது 5 நாகா கிராமங்களைச் சூறையாடி 12 அப்பாவி நாகர்களை உயிருடன் எரித்துக் கொன்றது. தொடரும் நாகா - குக்கி இன மோதலின் உச்சகட்டமான கடந்த மே மாத முதல் வாரத்தில் மட்டும் 86 அப்பாவி மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். 200-க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். ஈராயிரத்துக்கும் மேற்பட்டோர் வீடு - வாசல், உற்றார் - உறவினர்களை இழந்து சொந்த மண்ணிலேயே அகதிகளாகி நிற்கின்றார்கள்.

ooo

மியான்மார் (பர்மா) எல்லையை ஒட்டியுள்ள வடகிழக்கிந்திய மாநிலமான மணிப்பூரில் மணிக்புரி எனப்படும் மைத்தி இனத்தவர் பெரும்பான்மையாகவும், நாகா, குக்கி இனத்தவர் சிறுபான்மையாகவும் உள்ளனர். இவ்விரு சிறுபான்மை இனங்களில் குக்கி இனம் அளவில் பெரியது.

மைத்தி தேசிய இன மக்கள் தேசிய சுயநிர்ணய உரிமைக்காக நீண்டகாலமாக ஆயுதமேந்திப் போராடி வருகிறார்கள். இதன் காரணமாகவே எல்லா ஓட்டுக் கட்சிகளும் அரசுகளும் அம்மக்களின் சுயநிர்ணய உரிமைப் போரை அடக்கி ஒடுக்கி, தேச ஒற்றுமைக்கு ஆபத்து என்று கூச்சலிடுகின்றன. தமது தாய்மொழியான மணிக்புரி மாநிலத்தின் ஆட்சி மொழியாகக் கூட அங்கீகரிக்கப்படாததை எதிர்த்து மாணவர்களும் பேராசிரியர்களும் தமது மொழி உரிமைக்காகப் போராடி வருகின்றனர். காங்லிபாக் மக்கள் புரட்சிக் கட்சி (Prepak), காங்லிபாக் கம்யூனிஸ்ட் கட்சி (KCP), மக்கள் விடுதலைப் படை (PLA) ஆகிய அமைப்புகள் மைத்தி மக்களின் சுயநிர்ணய உரிமைக்காக ஆயுதமேந்திப் போராடி வருகின்றன. இவற்றிலேயே பெரியதும் செல்வாக்கு மிக்கதுமான மக்கள் விடுதலைப் படை, ஆபாச வீடியோ, போதை மருந்து, கலாச்சார சீரழிவுகளுக்கு எதிராக நடத்திய போர்க்குணமிக்க போராட்டங்களால் மக்களின் ஆதரவையும் மதிப்பையும் பெற்றுள்ளது. மணிப்பூரின் இம்மூன்று போராளி அமைப்புகளும் கூட்டுப் புரட்சிக் கமிட்டி என்ற பெயரில் ஐக்கிய முன்னணி அமைத்து ஆயுதப் போராட்டத்தில் முன்னேறி வருகின்றன.

இதேபோல மணிப்பூரின் அண்டை மாநிலமான நாகலாந்திலும் அம்மக்கள் நீண்ட காலமாக சுயநிர்ணய உரிமைக்காக ஆயுதமேந்திப் போராடி வருகிறார்கள். நாகா தேசிய சோசலிசக் கவுன்சில் NSCN எனும் போராளிக்குழு இதனைத் தலைமையேற்று வழிநடத்துகிறது.

மணிப்பூரின் மற்றொரு சிறுபான்மை இனமாகிய குக்கி மக்கள் தமக்கென சொந்தமான அமைப்பை நிறுவிக்கொள்ளாத அதேசமயம், நாகா, மணிப்பூர் போராளிக் குழுக்களை ஆதரித்தே வந்துள்ளனர். இப்போராளிக் குழுக்களும் குக்கி மக்களின் சுயாட்சி உரிமையை அங்கீகரித்தே வந்துள்ளன. இருப்பினும், கடந்த ஆண்டிலிருந்து புதிதாக குக்கி தேசியப்படை, குக்கி விடுதலைப் படை, குக்கி தேசிய முன்னணி, குக்கி ஜனநாயக முன்னணி என்கிற பெயர்களில் பெருகத் தொடங்கின. இந்த ''குக்கிலாந்து'' என்பது இந்திய அரசின் அரசியல் - சட்ட வரம்புக்குட்பட்ட தனிச்சிறப்பான சுயாட்சிப் பிரதேசமாக இருக்கும் என்று பிரகடனப் படுத்திய குக்கி போராளிகள், நாகா - மணிப்பூர் போராளி இயக்கங்களுக்கு நன்கொடை அளிக்கவும் மறுத்தனர். குறிப்பாக, நாகர்களும் குக்கிகளும் சம அளவில் உள்ள தோபால், சேனாபட்டி, உக்ருல் மாவட்டங்களில் நாகா போராளிகளுக்கு தாங்கள் ஏற்கனவே செலுத்திய நன்கொடையைத் திருப்பித் தருமாறும் குக்கிகள் கோரினர். இதோடு, குக்கிகள் பெரும்பான்மையாக உள்ள பகுதிகளில் சிறுபான்மையாக உள்ள நாகர்களிடம் கட்டாய வரிவசூலும் செய்தனர். இதனால் ஆத்திரமடைந்த நாகா சோசலிசக் கவுன்சில், குக்கி போராளிகள் மீதும், அப்பாவி மக்கள் மீதும் தாக்குதல் நடத்தியது. அதற்குப் பழிவாங்கும் நடவடிக்கையாக குக்கி போராளிகள் நாகா கிராமங்கள் மீது திடீர் தாக்குதல் நடத்திச் சூறையாடினர்.

மணிப்பூர் மாநிலத்தில் இனவெறி மோதல்கள் தொடர்வதற்கும், இரத்த ஆறு ஓடுவதற்கும் முக்கிய காரணமே ஓட்டுப் பொறுக்கிகள்தான். பதவிக்காக சந்தர்ப்பவாதக் கூட்டணி கட்டிக் கொள்வதும், கட்சி மாறுவதும் என நாடாளுமன்ற அராஜகத்தின் கடைகோடித் தன்மையைக் கொண்டதாக மணிப்பூரின் ஓட்டுப் பொறுக்கி அரசியல் சீரழிந்து கிடக்கிறது. ரன்பீர் சிங்கை முதல்வராகக் கொண்ட மணிப்பூர் மக்கள் கட்சியின் மந்திரிசபை கவிழ்க்கப்பட்ட பிறகு, கடந்த ஏப்ரலில் தொரேந்திர சிங்கை முதல்வராகக் கொண்டு காங்கிரசு உள்ளிட்ட 5 கட்சி கூட்டணி மந்திரி சபை நிறுவப்பட்டது. தொரேந்திர சிங் மைத்தி இனத்தைச் சேர்ந்தவர். முன்னாள் முதல்வரான ரிஷாங் கெய்சிங் என்பவர் இப்புதிய மந்திரி சபையில் துணை முதல்வராக உள்ளார். இவர் நாகா இனத்தைச் சேர்ந்தவர். தொரேந்திர சிங்குக்கும் கெய்சிங்குக்கும் இடையே அதிகாரப் போட்டிக்கான நாய்ச் சண்டை முற்றத் தொடங்கியதும், தொரேந்திர சிங் குக்கி இனத்து எம்.எல்.ஏ.க்களைத் தன்பக்கம் திரட்டிக் கொண்டு கெய்சிங்கை வீழ்த்த முயன்றார். இதன் தொடர்ச்சியாகவே குக்கி இனத்தின் பெயரால் திடீரென பல்வேறு அமைப்புகள் உருவாக்கப்பட்

**இனவெறித் தீயில் குளிர் காயும் முதல்வர் தொரேந்திர சிங்**



படிப்பகம்

www.padippakam.com

டன. மணிப்பூரில் முதன்முறையாக குக்கி கலாச்சார மேம்பாட்டு விழா அரசு சார்பில் கடந்த நவம்பரில் நடத்தப்பட்டது. முதல்வரின் சூழ்ச்சிகளைக் கண்டு பீதியடைந்த துணை முதலவர் கெய்சிங், குக்கிகளுக்குத் தனியாக மாவட்ட சுயாட்சி கவுன்சில் அமைக்க வேண்டுமென கூப்பாடு போட்டு குக்கிகளைத் தன்பக்கம் இழுக்கப் பார்க்கிறார். இப்படி இரு தரப்பினரும் குக்கிகளைப் பகடைக் காயாக்கி இனவெறித் தீயைக் கிளறிவிட்டனர்.

குக்கிகள் தமது சுயாட்சி உரிமைக்காகப் போராடுவது நியாயமானதுதான் என்றாலும், நாகா - மைத்தி தேசிய இனங்கள் விடுதலையடையாமல் தமது சுயாட்சி உரிமையை ஒருபோதும் சாதித்துவிட முடியாது. வட கிழக்கிந்திய தேசிய இனங்கள் அனைத்தும் ஒடுக்குமுறைக்குள்ளாகி புறக்கணிக்கப்பட்டு கிடக்கும்போது, இந்திய அரசின் உதவியுடன் குக்கிகள் மட்டும் தனியாக வளர்ச்சி பெற்றுவிடவும் முடியாது. குக்கிகள் தவறான பாதையில் செல்வதை விமர்சித்தும், எதிரிகளின் சூழ்ச்சிகளை அம்பலப்படுத்துவதற்கும் பதிலாக, நாகா போராளிகள் தமது குட்டிமுதலாளித்துவ தலைமையின் காரணமாக குக்கிகளையே எதிரிகளாகப் பாவித்தனர். சில குக்கி கைக்கூலிகளின் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளுக்குப் பலியாகி எதிர்தாக்குதலிலும் இறங்கி இனவெறிக் கலவரமாக முற்றச் செய்து விட்டனர். மணிப்பூரின் மக்கள் விடுதலைப் படையும், மனித உரிமைக் கழகமும் கல்லூரிப் பேராசிரியர்களும் இரு இனங்களுக்கிடையிலான மோதலை நிறுத்துமாறு கோரி கடையடைப்பும் அமைதிப் பேரணியும் நடத்திய போதிலும் இன்னமும் இன வெறியாட்டங்கள் ஓயவில்லை. மாநிலத்தின் பல பகுதிகளில் ராணுவம் குவிக்கப்பட்டு, அறிவிக்கப்படாத ராணுவ ஆட்சியே மணிப்பூரில் தொடர்கிறது.

○○○

ஒருபுறம் நாகா - குக்கி இனவெறி மோதலால் மணிப்பூர் மாநிலமே உருக்குலைந்து கிடக்கும் போது, மறுபுறம் இந்து வெறியர்கள் மதவெறியைக் கிளறிவிட்டு காலூன்ற முயற்சித்து வருகின்றனர். வகுப்புக் கலவர வாடையே இல்லாத மணிப்பூரில், கடந்த மே முதல் வாரத்தில் நடந்த திடீர் கலவரத்தில் 120 பேர் மாண்டு போயுள்ளனர். தலைநகர் இம்பாலிலும் சோம்ரோ நகர், மியான்ஞ் முதலான நகரங்களைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் நூற்றுக்கணக்கான வீடுகள் எரிந்து சாம்பலாகியுள்ளன. மணிப்பூரில் இந்துக்களும் முஸ்லீம்களும் நீண்ட நெடுங்காலமாக சகோதர உணர்வோடு வாழ்ந்து வரும் வேளையில், இப்படியொரு கலவரம் மூண்டதும் அனைத்துப் போராளிகளும் அரசியல் பார்வையாளர்களும் அதிர்ச்சியில் உறைந்து போயுள்ளனர்.

இக் கலவரத்துக்குக் காரணமாக இருந்து தலைமையேற்று வழிநடத்தியது இந்துவெறி பாரதீய ஜனதா குண்டர்கள் தான். அத்வானியின் ரத யாத்திரைக்கு முன்பு வரை மணிப்பூரில் மருந்துக்குக் கூட இல்லாதிருந்த பாரதீய ஜனதா கட்சி கடந்த ஈராண்டுகளாக மெதுவாக வேர்விடத் தொடங்கியுள்ளது. ''முஸ்லீம்கள் என்றால் அந்நியர்கள்: அவர்கள் வங்கதேசத்திலிருந்து வந்து குடியேறிய பயங்கரவாதிகள்; அவர்களை வங்கதேசத்தக்குத் திருப்பி அனுப்பு!'' என்கிற வெறியூட்டும் பிரச்சாரம் செய்துவந்த பாரதீய ஜனதா, கலவரத்தைக் கட்டவிழ்த்துவிடுவதற்காகவே அசாம் மற்றும் மே. வங்கத்திலிருந்து குண்டர்களை இறக்குமதி செய்துகொண்டது. அதன் தொடர்ச்சியாக மக்கள் குடியரசுப் படை (PRA) எனும் குண்டர் படையை நிறுவிக் கொண்டு, மைத்தி இனத்து இந்துக்களிடம் நன்கொடை வசூலிப்பது, முஸ்லீம்களுக்கு எதிரான வெறியூட்டும் பிரச்சாரம் செய்வது என அதன் நடவடிக்கைகள் தீவிரமடைந்தன.

அயோத்தி மசூதி இடிப்புக்குப் பின்னர் தங்களை யாரும் அசைக்க முடியாது என்று தினவெடுத்துத் திரியும் இந்துவெறி பாசிஸ்டுகள், தலைநகர் இம்பாலிலுள்ள ரிக்ஷா தொழிலாளிகளான முஸ்லீம்களை வங்கதேசத்துக்குத் திருப்பி அனுப்பக் கோரி வெறியூட்டும் பிரச்சாரத்தில் இறங்கினர். இம்பாலிலும் லீலாங் மாவட்டத்திலும், பர்மா எல்லையிலுள்ள மோரே பகுதியிலும் முஸ்லீம்களிடம் இந்துவெறி குண்டர் படை கட்டாய நன்கொடை கோரி மிரட்டியது. குறிப்பாக லீலாங்கில் இக்குண்டர்கள் முஸ்லீம்களிடம் கட்டாய வரிவசூல் செய்து துன்புறுத்திய போது, அம்மக்கள் இக்குண்டர்களை அடித்து விரட்டியுள்ளனர். இதனால் ஆத்திரமடைந்த இந்து வெறியர்கள் பெரும்படையாய் திரண்டு வந்து முஸ்லீம்களை வெட்டிக் கொன்றும், குடியிருப்புகளைத் தீயிட்டுக் கொளுத்தியும் அட்டூழியம் புரிந்தனர். கிஞ்சித்தும் மனிதாபிமான உணர்வின்றி 13 பச்சிளம் குழந்தைகள் உட்பட 40 பேரைக் காட்டுமிராண்டித்தனமாக வெட்டிக் கொன்றதைத் தொடர்ந்து லீலாங்கை விட்டு நூற்றுக்கணக்கான முஸ்லீம்கள் உயிருக்கு அஞ்சி ஓடிவிட்டார்கள்.

இந்துவெறி பாசிஸ்டுகள் வாதிடுவது போல, மணிப்பூரிலுள்ள முஸ்லீம்கள், வங்கதேசத்திலிருந்து அகதிகளாக வந்தவர்கள் அல்ல. மைத்தி பங்கல் என்றழைக்கப்படும் அவர்கள் மைத்தி இனத்தின் பூர்வீகக் குடிமக்களாவர். மணிப்பூரின் மனித உரிமைக் கழகமும், கல்லூரிப் பேராசிரியர்களும், போராளி அமைப்புகளும் இந்து வெறியர்களின் பொய்ப் பிரச்சாரத்தை அம்பலப்படுத்தியும் தாக்குதலை எதிர்த்தும் தொடர்ச்சியாக 3 நாட்கள் கடையடைப்புப் போராட்டமும் ஆர்ப்பாட்டங்களையும் நடத்தியுள்ளன. இந்து வெறியர்களின் குண்டர் படையான ''மக்கள் குடியரசுப் படை''யை உடனடியாகக் கலைக்கக் கோரி போராளி அமைப்புகள் எச்சரிக்கை விடுத்துள்ளன.



**சுயாட்சி உரிமை கோரும் குக்கி போராளிகள்: நாகர்கள் மீது இனவெறி**

**மணிப்பூர் மாநிலத்தில் இனவெறி மோதல்கள் தொடர்வதற்கும், இரத்த ஆறு ஓடுவதற்கும் முக்கிய காரணமே ஓட்டுப் பொறுக்கிகள்தான். குக்கிகளைப் பகடைக் காயாக்கி இனவெறித் தீயைக் கிளறிவிட்டனர்.**

இந்நிலையில், மணிப்பூரின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தைத் திசை திருப்பி சீர்குலைத்து, மக்களை இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கத் துடிக்கும் இந்து வெறி பாசிஸ்டுகளுக்கு எதிராகவும் மணிப்பூரின் தேசிய இனப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். பாட்டாளி வர்க்கத் தலைமையும் புதிய ஜனநாயகப் புரட்சியை நோக்கமாகவும் கொண்ட இதர தேசிய இனங்களுடன் ஐக்கியப்பட்டுப் போராடுவதுதான் மணிப்பூர் மக்களின் நியாயமான கோரிக்கையை அடைவதற்கான சரியான வழியாக இருக்க முடியும். இந்தப் பாதையில் முன்னேறாவிடில், வகுப்புவாத வாடையே காணாத வடகிழக்கிந்தியாவும் இந்து வெறியர்களின் காலடியில் வீழ்ந்து விடும் என்பதையே மணிப்பூர் கலவரம் எச்சரிக்கிறது.

● குமார்

படிப்பகம்

www.padippakam.com




● *பார்ப்பனர்களே தங்களது தவறைத் திருத்திக் கொண்டு சூத்திரர்களின் கருவறை நுழைவை அனுமதித்தால் உங்கள் போராட்டம் என்னவாக இருக்கும்?*

— அலெக்ஸ், கோவை

☆ இது நல்ல, வளமான கற்பனை மட்டுமல்ல, காலங்கடந்த கற்பனையும் கூட. சூத்திரர்களும், பஞ்சமர்களும் கோவிலுக்குள்ளேயே நுழையக் கூடாது என்று ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தடுக்கப்பட்டு வந்தார்கள். இப்போது அத்தடை சட்டப்படி நீக்கப்பட்டு கோவிலுக்குள் அனுமதிக்கப்படவேண்டும் என்றுள்ளது. ஆனால் சட்டப்படியான அத்தடை நீக்கமும் அனுமதியும் கூட பார்ப்பனர்கள் தாங்களே தவறை உணர்ந்து திருத்திக் கொண்டதன் விளைவு அல்ல. பெரியார், அம்பேத்கார் போன்றவர்களின் போராட்டங்களின் விளைவும் நிர்பந்தமும்தான். அதேபோல பஞ்சமர்களும், சூத்திரர்களும் கருவறை நுழைவதை அனுமதிப்பது, அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராவது உட்பட சமஉரிமை பெறுவது, தாய்மொழி வழிபாடு போன்றவற்றை பார்ப்பனர்கள் தாங்களே உணர்ந்து திருத்திக் கொள்ள மாட்டார்கள் என்பதைதான் நமது போராட்டங்களுக்கு அவர்கள் காட்டும் கொலை வெறி எதிர்ப்பே நிரூபிக்கிறது. ஆகவே, நமது கோரிக்கைகள் ஏற்கப்பட்டாலும் அது அவர்களாகவே உணர்ந்து திருந்துவதாக இருக்காது; அந்தப் பிரமையும் நம்மிடம் கிடையாது; நமது போராட்டங்களின் விளைவும், நிர்பந்தமும் மட்டுமே காரணமாக இருக்க முடியும்.

இந்துக் கோவில் மற்றும் கருவறை நுழைவுப் பிரச்சினையில் இன்னும் விளக்கப்பட வேண்டிய, தீர்க்கப்பட வேண்டிய அம்சங்கள் நிறைய உள்ளன. பார்ப்பனர்கள் மட்டுமே தமது தவறை உணர்வது, திருத்திக் கொள்வது என்பதோடு இப்பிரச்சினை தீராது. பார்ப்பனரல்லாத - சத்திரிய, வைசிய வழிவந்த - மேல் சாதியினரும் தமது தவறை உணர்ந்து திருத்திக்கொள்வது; பஞ்சமர் (தாழ்த்தப்பட்டவர்), சூத்திரர் தமது அடிமை விலங்கோடு அடிமை உணர்வைத் தகர்த்துத் தலை நிமிர்ந்து நிற்பது ஆகியவையும் நமது போராட்டத்தில் அடங்கும். பெரியாரும் தமது இறுதிக் காலத்தில் இந்த அம்சங்களை வலியுறுத்தி இருக்கிறார். இன்றைய சமூக நிலைமைகளும் இவற்றின் அவசியத்தைக் கோருகின்றன.

கோவிலுக்குள்ளேயே நுழையக் கூடாது என்கிற தடை சூத்திர, பஞ்சம சாதிகளுக்குத்தான் இருந்தது; பார்ப்பனரல்லாத மேல் சாதியினருக்கு இத்தடை எப்போதுமே கிடையாது. சூத்திர, பஞ்சம சாதியினர் கோவிலுக்குள்ளேயே நுழையக் கூடாது என்கிற தடை சட்டப்படிதான் நீக்கப்பட்டிருக்கிறதே தவிர சமூக நடைமுறைப்படி அல்ல. பார்ப்பனர் மட்டுமின்றி, பார்ப்பனியத்தை ஏற்று ஆதாயம் அடையும் பார்ப்பனரல்லாத மேல் சாதியினரும் சூத்திர, பஞ்சம சாதியினர் கோவிலுக்குள் நுழைவதை இன்னமும் சமூக நடைமுறையின்படி தடுத்து வருகின்றனர்; இதற்கு கர்நாடகாவில் உள்ள பதனவாலு, தமிழகத்தில் உள்ள சிவகங்கை ஆகிய சமீபத்திய நிகழ்ச்சிகள் சான்றுகளாக உள்ளன. ஆகவே, சூத்திரரும், பஞ்சமரும் சமூகநீதியும், சம உரிமையும் பெறவேண்டுமானால் பார்ப்பனரோடு, பார்ப்பனரல்லாத மேல் சாதியினரது ஆதிக்கத்தையும் எதிர்த்துத் தமது போராட்டத்தைத் தொடர வேண்டும்; சட்டப்படி பெற்ற உரிமையை நிலைநாட்டுவதற்குத் தமக்குள்ள அடிமை உணர்வைத் தகர்த்துத் தலைநிமிர்ந்து நின்று போராடுவதும் அவசியம்.

கோவில் கருவறைக்குள் நுழைவதற்கு பார்ப்பனருக்கு மட்டுமே இப்போது சட்டப்படிக்கு அனுமதி உண்டு; பார்ப்பனரல்லாத அனைத்துச் சாதியினருக்கும் இதற்கு அனுமதி கிடையாது; தடையும் தீண்டாமையும் தான் நிலவுகிறது. ஆகவேதான் பார்ப்பனர் மட்டுமே இத்தடை, தீண்டாமையைக் காப்பதற்கு மூர்க்கமாகப் போராடுகின்றனர்; அதோடு நமது கருவறை நுழைவுப் போராட்டத்திற்கு பார்ப்பனரல்லாத அனைத்துச் சாதியினரிடமிருந்தும் பரவலான ஆதரவு கிடைக்கிறது; பார்ப்பன - பனியா கும்பலால் தலைமை தாங்கப்படும் இந்து மதவெறி பாசிச சக்திகளைத் தனிமைப்படுத்தித் தாக்க வேண்டியது நமது உடனடி அரசியல் கடமையாகவும் உள்ளது; இக்காரணங்களால் இப்போதைக்குக் கருவறை நுழைவுக் கோரிக்கைக்குப் போராடுகிறோம். அதேசமயம் ''திருவரங்கம் கருவறை என்ன? எங்கள் ஊர் மாரியம்மன் கோவிலுக்குள் நுழைவதைக்கூட பார்ப்பனரல்லாத மேல் சாதியினர் தடுத்துத் தாக்கினரே? இதுதான் சமூகநீதியா? சம உரிமையா?'' என்று பஞ்சமர் (தலித்துகள்), சூத்திரர் கேட்பது முற்றிலும் சரியே, நியாயமே. அவற்றுக்குப் பதில் சொல்வதும், தீர்வுகாணப் போராடுவதும் அனைத்துப் புரட்சிகர, ஜனநாயக இயக்கங்களின் கடமையும் ஆகும். நமது போராட்டத்தில் இந்த அம்சமும் இணைந்திருப்பதால்தான் தி.க. -வின் வீரமணி போன்றவர்கள் ஆத்திரப்படுகிறார்கள்; அவதூறு பொழிகிறார்கள்.

● *பதவிக்கு வருவதற்குமுன் ''நேர்மையாகவும், ஊழல் செய்யாமலும், கொள்கை உறுதியோடும் இருப்பேன்'' என்று சொல்பவர்கள் பதவிக்கு வந்தவுடன் கொஞ்சநாள் கழித்து ஊழல், லஞ்சம் வாங்கி மக்களுக்கு எதிராக மாறிவிடுகிறார்கள்! அதற்குக் காரணம் அவர்களது கொள்கையில் இருக்கும் பலவீனமா? அல்லது நமது அரசியல் மற்றும் அதிகார முறையில் இருக்கும் கோளாறா?*

— ஒரு வாசகர், குறிஞ்சிப்பாடி.

☆ நேர்மையாகவும் லஞ்ச ஊழலில் ஈடுபடாமலும், கொள்கை உறுதியோடும் இருப்பவர்கள் இன்றைய அரசியல் மற்றும் அதிகார முறையில் பதவிக்கு வரமுடியாது; அப்படியே தப்பித்தவறி பதவிக்கு வந்தால் ஒன்று நேர்மை, கொள்கை உறுதியைக் கைவிட்டு லஞ்ச ஊழலில் ஈடுபட்டு மக்களுக்கு எதிராகத் திரும்ப வேண்டும் அல்லது அப்பதவியில் இருந்து துரத்தியடிக்கப்படுவர்; நேர்மையான, தூய்மையான கொள்கை உறுதி கொண்டவர்களைக் கூட ஆசையூட்டி, மாசுபடுத்தி சீரழித்துவிடக் கூடியதாக இன்றைய அரசியல் மற்றும் அதிகார முறையும் சமூக, பொருளாதார, பண்பாட்டு அமைப்பும் உள்ளன. தவிர்க்க முடியாது, எந்த அமைப்பிலும் இக்குறை நிலவவே செய்யும் என்று மக்களை ஏற்றுக் கொள்ளச் செய்யுமளவுக்கு இது புரையோடிப்போயிருக்கிறது. அதாவது பதவிக்கு வரவும், பதவியைத் தக்கவைத்துக் கொள்ளவுமே நேர்மை, கொள்கை உறுதியைக் கைவிட்டு லஞ்ச ஊழலிலும், மக்கள் விரோத நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதை இன்றைய அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டு அமைப்பு அவசியமாக்கியுள்ளது.

ஆகவே, இந்த அமைப்பையே தூக்கி எறிந்துவிட்டு ஒரு புதிய அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டு அமைப்பு முறையை ஏற்படுத்துவதையே உத்திரவாதப்படுத்தும் இலட்சியத்தையே கொள்கையாகக் கொண்டிருக்க வேண்டும். இந்த இலட்சியத்தை உத்திரவாதப்படுத்தும் அமைப்பும் கொள்கையும் இல்லாமல் வெறுமனே நேர்மை, ஒழுக்கம், கொள்கை உறுதி, கறைபடியாத கைகள், மக்கள் நல்வாழ்க்கை போன்ற வாக்குறுதிகளைப் பிரகடனப்படுத்துபவர்களின் கொள்கை பலவீனமானதாக மட்டுமல்ல, பெரும்பாலும் பித்தலாட்டமாகவே



படிப்பகம்

www.padippakam.com

உள்ளது. அதோடு அந்த இலட்சியம், கொள்கையை நேர்மையாகவும், உறுதியாகவும் பின்பற்றக் கூடியதுதான் என்று வாழ்விலும் செயலிலும் நடந்து காட்டி சோதித்தறியப்பட்ட தலைமை வேண்டும். அவற்றில் இருந்து விலகிச் சரிந்துபோகும் தலைமையை எதிர்க்கவும் கலகம் செய்யவும் தேவையான ஜனநாயக அமைப்பும் துணிச்சல்மிகு அணிகளும் வேண்டும். தமது சொந்த உழைப்பால் வாழும் உழைக்கும் மக்கள், குறிப்பாக பாட்டாளிகளுக்கே அத்தகைய துணிச்சலும், வீரமும் இருக்க முடியும். இப்படிப்பட்டவர்களை முதுகெலும்பாகக் கொள்ளாமல் பிழைப்புவாதப் பிரமுகர்களையும், பொறுக்கி (உதிரி) வர்க்க அணிகளையும் கவர்ச்சிவாத அரசியல் கொள்கைகளையுமே இன்றைய அரசியல் கட்சிகள் கொண்டுள்ளன. ஆகவே அவர்கள் பதவிக்கு வரும் முன்பு ஒன்றாகவும், வந்தபின் வேறொன்றாகவும் நடந்து கொள்வதில் வியப்பில்லை.

● *அமெரிக்க ஜனநாயகத்தில் துப்பாக்கி வைத்துக் கொள்ளவும் எல்லோருக்கும் உரிமை இருக்கின்றது. அதுபோல் விளையாட்டுத்துறையில் அமெரிக்கர்கள் அதிகப் பரிசுகளைப் பெறுகிறார்கள். மேலும் திறமையுள்ள ஒருவனுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கிறது. இப்படியாக அங்கு அரசியல் அமைப்பு சிறப்பாக நடக்கும்போது அதனை போலி ஜனநாயகம் என்று எதை வைத்துக் கூறுகின்றீர்கள்?*

— ஆர்.ராஜா, பாக்கம்

☆ சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைக்கப்பட்டு, அனைவருக்கும் குடியுரிமை, ஜனநாயக உரிமையை உத்திரவாதம் செய்கிறது அமெரிக்க அரசி

●ஊழல் புரிவது கொள்கை பலவீனமா? அமைப்புக் கோளாறா?

●அமெரிக்காவில் போலிஜனநாயகம் எப்படி?

●தாழ்த்தப்பட்ட அமைப்புகளைப் பற்றி உங்கள் மதிப்பீடு என்ன?

யல் அமைப்பு என்று பீற்றிக் கொள்ளப்பட்டது. யார் வேண்டுமானாலும் சொத்துவைத்துக் கொள்ளவும் தொழில் துவங்கவும் உரிமையளித்துள்ளது என்று சொன்னார்கள். ஆனால் அது எப்படி மூலதனம் வைத்துக் கொண்டுள்ள ஒரு சிறு பிரிவு, தொழில் துவங்கி மற்றொரு பெரும் பிரிவினரது உழைப்பைச் சுரண்டுவதற்கான உரிமைதான் என்று நிரூபணமானதோ, அதேபோலத்தான் துப்பாக்கி வைத்துக் கொள்ளும் உரிமையும்; எவ்வளவு அதிகமாக நிதி வைத்துள்ளார்களோ அவர்கள் அவ்வளவு அதிகமான துப்பாக்கிகளையும் அடியாட்களையும் வாங்கிவிடுவதன் மூலம் உண்மையில் ஆதிக்கம் செலுத்தக் கூடியவர்களாகி விடுகிறார்கள். வழக்கீடு - தேவை அடிப்படையிலான சந்தைப் பொருளாதாரத்தின் கீழ் வாங்குவோர் - விற்போருக்கு இடையிலான நியாயமான உறவும், பங்குச் சந்தை மூலம் கூட்டுப்பங்கு ஜனநாயகமும் கொண்டது அமெரிக்கா என்கிறார்கள். ஆனால் அது சில நூறு ஏகபோக, நிதி ஆதிக்க கம்பெனிகளின் கீழ் சிக்கிக் கொண்டுள்ள ஈவிரக்கமற்ற சுரண்டல் அமைப்பு என்பதுதான் உண்மை. அமெரிக்காவில் மட்டுமல்ல, உலகம் முழுவதும் ஏகாதிபத்தியக் கொள்ளையை நடத்தும் ஏகபோக, நிதி ஆதிக்கமாகவே அது விளங்குகிறது. வேலையில்லாத் திண்டாட்டம் தலைவிரித்தாடும் அமெரிக்காவில் திறமையுள்ளவர்களுக்கு வேலை என்பது கூட அவர்களை அந்த ஏகபோக, நிதி ஆதிக்கக் கம்பெனிகள் விலைக்கு வாங்குவதுதான். அதிலும் குறிப்பாக விரல்விட்டு எண்ணும் அளவுக்கேயான இராணுவ ஆயுத - தளவாட உற்பத்தி செய்யும் ஏகபோக, நிதி ஆதிக்க கும்பலே அமெரிக்காவின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளையும், அதிபர் தேர்தல் முடிவுகளையும் தீர்மானிக்கின்றன. கேளிக்கை - களிவெறியாட்டத் தலைநகரான லாஸ் வெகாசின் சமூக விரோத கிரிமினல் மஃபியா கும்பல்தான் அமெரிக்காவின் விளையாட்டுத் துறையிலும் ஆதிக்கம் செலுத்துகிறது. இரண்டாம் உலகப் போர் முடிந்ததும் அமெரிக்காவை ஆட்டிப் படைத்த ''மெக்கார்த்தேயிசம்'' கம்யூனிஸ்டுகள் எனச் சந்தேகிக்கப்பட்ட லட்சக் கணக்கானேரை நரவேட்டையாடியதும், சார்லி சாப்ளின் போன்ற கலைஞர்களும், விஞ்ஞானிகளும் அமெரிக்காவின் கேலிக்குரிய ஜனநாயகம் உண்மையில் ஒரு ஏகபோக பாசிசம் என்று அம்பலப்படுத்தி நாட்டைவிட்டே வெளியேறினர். ''கூ குலக்ஸ் கிளான்'' எனப்படும் வெள்ளை நிற - இனவெறி அமைப்பு நீக்ரோ - கறுப்பர்களை வேட்டையாடுவதும், நியூ ஜெர்சியில் வாழும் இந்திய - இந்துப் பெண்கள் பொட்டிட்டுக் கொண்டு வெளியே வந்தால் தாக்கி நெற்றியைத் தீயால் சுடுவதும், சாலை விதிகளை மீறியதாகக் கூறி கருப்பினக் காரோட்டி ரோட்னி கிங்கை அடித்து நொறுக்கிய வெள்ளையின போலீசாரை விடுதலை செய்ததற்கு எதிராகப் பெரும் கலகங்கள் நடத்தியே நீதியைப் பெறமுடிந்ததும் அமெரிக்காவின் இன, நிறவெறி பாசிசத்துக்குச் சிலசான்றுகள். ஈராக்குக்கு எதிரான வளைகுடாப் போரை எதிர்த்த இயக்கங்கள் அமெரிக்காவில் தடை செய்யப்பட்டதோடு, போரின் உண்மை விவரங்கள் அந்நாட்டு நாடாளுமன்ற - இராணுவக் கமிட்டியிடமே காட்டப்படவில்லை என்பதும், ஒரு தலைப்பட்சமாக யுத்தவெறிப் பிரச்சாரம் நடத்தி அமெரிக்கர்கள் மூளைச்சலவை செய்யப்பட்டதும் அமெரிக்க ஜனநாயகத்தின் போலித்தனத்தையே நிரூபித்தன.

● *தாழ்த்தப்படவர்களின் உரிமைகளை மீட்கப் பாடுபடுவதாகச் சொல்லி அமைப்பு நடத்தும் டி.பி.ஐ. (தலித் சிறுத்தைகள் இயக்கம்) திருமாவளவன் போன்ற தோழர்களைப் பற்றிய தங்கள் மதிப்பீடு, கருத்து என்ன? இப்படியான அமைப்புகளை நாம் ஏற்றுக் கொள்ள முடியுமா?*

— செங்கதிர்ச் செல்வன், மதுரை-10.

☆ தாழ்த்தப்பட்டவர்கள், தலித்துக்களுக்கானவை என்கிற பெயரில் ஏற்கனவே நூற்றுக்கணக்கான அமைப்புகள் தமிழ் நாட்டில் மட்டும் உள்ளன. அவற்றில் பெரும்பாலானவை வை.பாலசுந்தரம், சுந்தரராஜன், ஜான் பாண்டியன், இளையபெருமாள், தமிழரசன் போன்ற பிழைப்புவாத, ஆளும் வர்க்க (மேல்சமூக)க் கைக்கூலிகளால் தலைமை தாங்கப்படுகின்றன. இவை அதிகபட்சமாகச் சாதிப்பதெல்லாம் அம்பேத்காருக்கு சிலைவைப்பதும் - விழா நடத்துவதும், நன்கொடைகள் வசூலிப்பதும், அறிக்கைகள் - பிரசுரங்கள் வெளியிடுவதும், தங்களுக்குச் சொந்த ஆதாயம் தேடிக் கொள்வதும்தான். கூடவே, நடுத்தர வர்க்கத்தினராக மாறிவிட்ட தாழ்த்தப்பட்ட சில தனிநபர்களின் நலன்களுக்காக - நியமனம், இடமாற்றம், பதவி உயர்வு போன்ற சலுகைகள் பெறுவதற்கான - அரசியல் தரகு வேலை பார்க்கின்றன. மற்றபடி கிராமப்புறங்களில் கூலி ஏழை விவசாயிகளாகவும், நகரப் புறங்களில் உதிரிப் பாட்டாளிகளாகவும் வாழும் தாழ்த்தப்பட்ட மக்களைப் பெருமளவில் திரட்டி, முறைப்படியான அமைப்பைக் கட்டுவதற்கு அவர்கள் முயலுவதுமில்லை; அம்மக்கள் அன்றாடம் சந்திக்கும் சாதி ஒடுக்குமுறை, சுரண்டல்களுக்கு எதிராக, நேரடியாகக் களத்தில் இறங்கித் தலையீடு செய்து போராடியதும் இல்லை. ஆகவே தாழ்த்தப்பட்டவர் விடுதலைக்கான போராட்டங்களில் அவற்றை நம்பிக் கூட்டுச் சேர முடியாது என்று கருதுகிறோம். ஆனால் மேற்கண்ட அமைப்புகளின் போக்குகள், நடைமுறைகளுக்கு மாறாக தாழ்த்தப்பட்ட மக்களைத் திரட்டி, களத்தில் இறங்கி அரசியல், சமூக ஒடுக்கு முறைக்கு எதிராகப் போராட உறுதி பூண்டு தலித் சிறுத்தைகள் இயக்கம், இம்மானுவேல் பேரவை போன்ற சில புதிய அமைப்புகள் தோன்றியுள்ளன. இத்தகைய நடைமுறையில் உறுதியோடிருக்கும் பட்சத்தில் இப்புதிய அமைப்புகளை ஜனநாயக சக்திகளாகக் கருதி நேர்மறையில் அணுகி, போராட்டங்களில் ஐக்கியப்படுவதுதான் சரியானது என்று கருதுகிறோம். ●

படிப்பகம்

www.padippakam.com



# இஸ்ரேலுடன் இந்திய உறவு
# இந்து-யூத பாசிச கூட்டு

"முழுக்க நனைந்த பின் இனி முக்காடு எதற்கு?" என்கிற ரீதியில் இந்தியா இஸ்ரேலுடனான தனது ராஜ்யரீதியான உறவுகளை வளர்த்துக் கொள்வதில் அடுத்த அடியை எடுத்து வைத்துள்ளது. பூகோள வரைபடத்தில் இஸ்ரேல் எனும் நாடு தோற்றுவிக்கப்பெற்று நாற்பதுக்கும் மேலான ஆண்டுகள் கழிந்து முதன்முதலாக சென்ற ஆண்டின் தொடக்கத்தில்தான் இஸ்ரேலுடன் உறவுகளை அமைத்துக் கொள்ளப் போவதாக ராவ் அரசு அறிவித்தது. பின் சரத்பவார் தலைமையிலான குழு ஒன்று கடந்த ஏப்ரலில் இஸ்ரேல் சென்று திரும்பியது. அதன் தொடர்ச்சியாக இஸ்ரேலின் உதவிப் பிரதமரும் வெளியுறவு மந்திரியுமான ஷிமோன் பெரெஸ் தலைமையிலான 30 பேர் அடங்கிய குழு ஒன்று இரண்டு நாள் அரசு முறைப் பயணமாக இந்தியா வந்து சென்றுள்ளது.

விவசாயம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பு சம்மந்தமாக ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டிருப்பதாகவும், பாதுகாப்பு ஒத்துழைப்பு சம்மந்தமாக பேச்சுவார்த்தைகள் தொடரும் என்றும் அரசின் அறிக்கைகள் கூறுகின்றன. மிக முக்கியமாக, பயங்கரவாதம், அணு ஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தம் - இவ்விரண்டு பிரச்சினைகளும் இஸ்ரேலையும், இந்தியாவையும் பாதிக்கும் பிரச்சினைகளாக இருப்பதால், இவற்றில் கூட்டு ஒத்துழைப்பு சம்மந்தமான பேச்சுவார்த்தைகள்தான் பெரெஸ் வருகையின் பிரதான அடிப்படையாக இருதரப்பினரும் கூறியுள்ளனர்.

வெளிப்பார்வைக்கு பொருளாதார ஒத்துழைப்புக்காக உறவுகளைச் சீர்செய்து கொள்கிறது எனத் தோன்றினாலும் இந்தியாவின் அரசியல் நோக்கமும், அது எதிர்பார்க்கும் பலன்களும் வேறானதாகும். 'ஒரே கல்லில் இரு மாங்காய்களை வீழ்த்தும்' நோக்கத்துடன் இந்தியா தனது காய்களை நகர்த்தியுள்ளது.

ஒன்று அமெரிக்காவைத் திருப்தி செய்வது; தாராளமயப் பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் ராவ் அரசு இஸ்ரேலுடன் உறவு கொள்வதன் மூலம் அமெரிக்காவைச் சேர்ந்த யூத இன நிதி மூலதனச் சீமான்களைத் தனது பக்கம் ஈர்த்துக் கொள்ளலாம் என எதிர்பார்க்கிறது. அமெரிக்காவுடன் அணு ஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தம் மற்றும் வடிவ உரிமை சட்டதிட்டங்களில் கையெழுத்திடாமல் இருப்பதன் காரணமாக அமெரிக்கா சூப்பர் 301 பொருளாதார தடைச் சட்டத்தை கொண்டு வந்தால் கூட, இஸ்ரேலுடன் உறவு கொள்வதன் மூலம் அமெரிக்காவின் தொழிற்துறை மற்றும் இராணுவ தொழில்நுட்பங்களை இஸ்ரேல் வாயிலாகப் பெற்றுக்கொள்ளலாம் என்பதும் இந்தியாவின் கணிப்பு.

மற்றொன்று பாபர் மசூதி இடிப்பு, பம்பாய் கலவரங்களில் இந்து வெறியர்களால் முஸ்லீம் மக்கள் குறி வைத்துத் தாக்கப்பட்டது அரபு நாடுகள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது; காஷ்மீர் பிரச்சினையை சமீபத்தில் பாகிஸ்தானில் நடந்த இஸ்லாமிய நாடுகளின் கூட்டமைப்பு கண்டித்திருப்பது, அரபு நாடுகளைத் தனக்கு எதிராக அணிதிரட்டுவதில் பாகிஸ்தானுக்குக் கிடைத்த வெற்றியாகவே இந்தியா கருதுகிறது; மார்ச்சில் பம்பாயில் நடந்த குண்டு வெடிப்பைத் தனக்கு எதிரான இஸ்லாமிய பயங்கரவாதத்தின் தாக்குதலாக எண்ணுகிறது. இவ்வாறு மேற்காசியாவிலுள்ள முஸ்லீம் நாடுகள், இந்தியா தனது உள்நாட்டில் முஸ்லீம் மக்களை இரண்டாம்தர குடிகளாக நடத்தும் கொள்கை காரணமாக, ஓர் அணியில் திரண்டு இந்தியாவைக் கண்டனம் செய்து வருவதால் பலம் வாய்ந்த அடிப்படையில் இஸ்ரேலுடன் உறவை வளர்த்துக் கொள்வது தனக்குச் சாதகமானது எனும் நோக்கத்துடன் இந்தியாவின் செயல்பாடு உள்ளது.

அதேபொழுதில் சர்வதேச அரங்கில் தனது முற்போக்கு முகத்திரை கிழிந்துவிடக் கூடாது என்பதற்காகவும், உள்நாட்டில் இந்தப் 'புது' உறவாடலுக்கு எதிராகக் கிளம்பும் எதிர்ப்புகளைச் சமாளிக்கவும் இந்தியா, 'பாலஸ்தீனப் பிரச்சினையின் மீதான இந்தியாவின் நிலையும், அரபு நாடுகளுடனான அதன் உறவும்' எவ்விதத்திலும் பாதிக்கப்படாது என மீண்டும் மீண்டும் வாக்குறுதி அளிக்கிறது. ஆனால் பெரெஸ் வருகையின் பொழுது சம்பிரதாயமாகக் கூட பாலஸ்தீனப் பிரச்சினையை இந்தியா எழுப்பவில்லை; மாறாக பெரெஸ் வருகையை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தவர்களைத்தான் கைது செய்து சிறையிலடைத்தது.

**பாலஸ்தீனர்கள் ஆக்கிரமிப்பாளான இஸ்ரேலை எதிர்த்து நடத்தும் போராட்டத்தை ஆதரிப்பதாகக் கூறும் இந்தியா, இஸ்ரேலையும் 1967 இஸ்ரேல்-அரபு நாடுகளின் போருக்கு முந்தைய அதன் எல்லைப் பகுதிகளுடன் ஒரு நாடாகவே அங்கிகரித்து வந்துள்ளது.**

குறிப்பாக 1991 டிசம்பரில் அமெரிக்காவின் நிர்ப்பந்தம் காரணமாக 'ஜியோனிசத்தை இனப்பாகுபாடு' என வரையறுக்கும் ஐ.நா.வின் தீர்மானத்தை நீக்குவதற்கு ஆதரவாக ஓட்டளித்த பொழுது, தனது செயலை நியாயப்படுத்த இந்தியா, 'பாலஸ்தீனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான மேற்காசிய அமைதி பேச்சு வார்த்தைகளில் இஸ்ரேல் இனி ஐ.நா.விற்கு மதிப்பளிக்கும்' என எதிர்பார்ப்பதாகக் கூறியது.

ஆனால் அமைதி பேச்சுவார்த்தைகளின் பிரதான முட்டுக்கட்டையாக இருப்பது இஸ்ரேலின் இனவெறி நடவடிக்கைகள்தான். கடந்த ஆண்டு டிசம்பரில் எட்டாவது சுற்று பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருந்த பொழுதே 400 பாலஸ்தீனர்களை தீவிரவாதிகள் என முத்திரை குத்தி இஸ்ரேலிலிருந்து நாடு கடத்தியது. இதற்கு எதிரான ஐ.நா.வின் தீர்மானத்தை அமுல்படுத்த இதுநாள்வரை மறுத்துவருவதுடன், தீர்மானம் நிறைவேறிய பொழுது, 'அமெரிக்காவின் ரத்து (Veto) அதிகாரத்தைப் பயன்படுத்தச் செய்வோம்' எனத் திமிராக அறிவித்தது. இதனால் பாலஸ்தீனர்களும், அரபு நாடுகளும் பேச்சுவார்த்தையை இடையிலேயே புறக்கணித்தனர்.

கடந்த ஏப்ரலில் 9-வது சுற்று பேச்சுவார்த்தை ஆரம்பிக்கும் தருணத்தில் நாடு கடத்தப்பட்ட பாலஸ்தீனர்களை திரும்ப அழைத்துக் கொள்ளாததால் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளக்கூடாது என்ற கருத்து பாலஸ்தீனர்களிடையே பரவலாக இருந்தது. உடனே இஸ்ரேல் சிரியாவுடன் தனியாக பேச்சுவார்த்தை நடத்துவோம் எனத் தன்னிச்சையாக அறிவித்தது. அதனுடன் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்கு கரை மற்றும் காசா எல்லைப் பகுதிகளை மூடிவிடவும் நடவடிக்கை எடுத்தது. பின் எதிர்ப்பின் காரணமாக ஒரு நாளைக்கு 30,000 பாலஸ்தீனர்களை மட்டும் ராணுவக் கண்காணிப்பின் கீழ் இஸ்ரேலுக்குள் வேலை செய்வதற்கு அனுமதிக்க ஒப்புக் கொண்டது. தற்பொழுது மீண்டும் அந்த எல்லைப் பகுதிகளை மூடி, பிழைப்புக்காக நாள்தோறும் இஸ்ரேலுக்குள் வந்து வேலை செய்து திரும்பும் ஒரு லட்சத்துக்கும் அதிகமான பாலஸ்தீனக் குடும்பங்களின் வயிற்றில் அடித்துள்ளது.

மேற்காசிய பேச்சுவார்த்தைகளில் தான் முக்கியமானதொரு பங்காற்ற முடியும் எனக் கூறிக் கொண்டிருக்கும் இந்தியா, பேச்சுவார்த்தைக்கு முட்டுக்கட்டைகளாக உள்ள இஸ்ரேலின் சமீபத்திய இந்த நடவடிக்கைகளை பெரெஸிடம் ஒப்புக்குக் கூட விமர்சிக்கத் தயாராக இல்லை. மறுபுறத்தில் அதே மே மாதத்தில் நைரோபியில் நடந்த ஒரு சர்வதேசிய கருத்தரங்கில், ஆக்கிரமிக்



படிப்பகம்

www.padippakam.com

கப்பட்ட பகுதிகளில் தொடர்ச்சியாக யூதர்களைக் குடியமர்த்தும் இஸ்ரேலின் நடவடிக்கையை எதிர்த்து நடந்த வாக்கெடுப்பில் இந்தியா கலந்து கொள்ளாது தனது பித்தலாட்டத் தன்மையை வெளிக்காட்டிக் கொண்டது.

தற்பொழுது பெரெஸ் வந்து சென்ற ஒரு மாதத்திற்குள்ளாகவே காஷ்மீர் போராளிகளால் இனம் கண்டு அழிப்பதற்காக 20 பேர் அடங்கிய மொஸாத் கொலைக் குழுவை இஸ்ரேலிலிருந்து வரவழைத்துள்ளது இந்திய அரசு. இவர்கள் இந்திய இராணுவத்துக்குப் பயிற்சியளிக்கப் போவதில்லை. காஷ்மீரி மொழியில் பயிற்சியளிக்கப்பட்ட பின் இவர்களையே களத்தில் இறக்கிவிட அரசு தீர்மானித்துள்ளது.

பாலஸ்தீனர்களுடனும், அரபு நாடுகளுடனும் இந்தியா கொண்டுள்ள நல்லுறவுகளை நாங்கள் அமைதிக்காகப் பயன்படுத்திக் கொள்வோம் என ஷிமோன் பெரெஸ் கூறினாலும், அதிகாரிகள் மற்றும் அமைச்சர்களுடனான அவரது பேச்சுவார்த்தை முழுவதும், 'இஸ்லாமிய அடிப்படைவாதம், பாகிஸ்தானைப் பயங்கரவாத நாடாக அமெரிக்கா அறிவித்தால் அதனை ஆதரிப்பது, காஷ்மீர் பிரச்னைக்கு சிம்லா ஒப்பந்த அடிப்படையில் தீர்வு' என இந்தியாவைத் தனது வலையில் வீழ்த்தும் நோக்கம் கொண்டதாகவே இருந்தது. இதன் பிரதி பலனாக, 'ஐ.நா. மன்றம் மற்றும் சர்வதேச அரங்குகளில் இந்தியா தனக்குச் சார்பாக குரல் கொடுக்க வேண்டும்' எனக் கேட்டுக் கொண்டார். அதனுடன் அத்வானியுடனான சந்திப்பின் பொழுது, 'காஷ்மீரில் முஸ்லீம்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் இந்துக்களைக் குடியமர்த்த வேண்டும்' எனத் தனது நாடு ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீன பகுதிகளில் செயல்படுத்திய திட்டத்தை ஒத்த யோசனை ஒன்றினைத் தெரிவித்து மதவெறியர்களுக்கு கொம்பு சீவிவிட்டார்.

பாலஸ்தீனர்கள் 'இஸ்ரேலுடன் உறவு கொள்வது இந்தியாவின் சொந்த நிலைப்பாட்டைப் பொறுத்தது' என அறிவித்திருந்தும், தனது ஏகாதிபத்திய அடிவருடித் தன்மையின் காரணமாக இஸ்ரேலுடன் தான் கொண்டிருக்கும் இரகசிய உறவுகளை மறைத்துவிட்டு பொது மக்களின் முன்பாக போலி வேடமே பூண்டு வந்துள்ளது இந்தியா. பிறநாடுகள், தேசங்கள் எவ்வாறு வரலாற்று ரீதியாக உருவானதோ, அது போன்று இஸ்ரேல் எனும் நாடு தோன்றவில்லை. அதாவது இரண்டாம் உலகப் போருக்கு முன் இஸ்ரேல் எனும் ஒரு நாடே பூகோள வரைபடத்தில் இருந்தது கிடையாது. போருக்குப் பின்தான் மேற்குலகு ஏகாதிபத்தியங்கள் தங்கள் நலன் கருதி யூத இனவெறியர்கள் துணையுடன் மண்ணின் மைந்தர்களான பாலஸ்தீனர்களை விரட்டியடித்து, அப்பகுதியில் பல்வேறு நாடுகளில் வாழ்ந்து வந்த யூதர்களைக் குடியமர்த்தி இஸ்ரேலை உருவாக்கினர். பாலஸ்தீனர்கள் ஆக்கிரமிப்பாளனான இஸ்ரேலை எதிர்த்து நடத்தும் போராட்டத்தை ஆதரிப்பதாகக் கூறும் இந்தியா, இஸ்ரேலையும் 1967 இஸ்ரேல் - அரபு நாடுகளின் போருக்கு முந்தைய அதன் எல்லைப் பகுதிகளுடன் ஒரு நாடாகவே அங்கீகரித்து வந்துள்ளது.



பெரெஸுடன் கை குலுக்கும் ராவ்; அரசு பயங்கரவாத பிரதிநிதிகளின் 'புனித'க் கூட்டு

1992-க்கு முன்பிருந்தே மறைமுகமாக சாத்தியப்பட்ட எல்லா வழிகளிலும் இந்தியா, இஸ்ரேலுடன் உறவு கொண்டே வந்துள்ளது. தேசாய் பிரதமராக இருந்த பொழுது அவரது அழைப்பின்பேரில் இரகசியமாக வந்து சென்ற இஸ்ரேல் தலைமை தளபதி மொஷே தயானிடம் ராஜ்யரீதியான உறவுகளைத் தொடங்க வாக்குறுதி கொடுத்துள்ளார். இந்த இரகசியத் திட்டம் அம்பலமான பின் பலத்த எதிர்ப்பின் காரணமாகக் கைவிடப்பட்டது. இதுதவிர பாரதீய ஜனதா, ஜனசங்க காலத்திலிருந்தே தனது முஸ்லீம் எதிர்ப்பின் காரணமாக இஸ்ரேலை ஆதரித்து வருகிறது. சுப்பிரமணிய சுவாமி, சந்திரசாமி, பல்கிவாலா போன்ற அதிகாரத் தரகு கும்பல்கள் இஸ்ரேலுக்காக இந்தியாவில் நீண்டகாலமாக வேலை செய்து வருகின்றனர். அதனுடன் 'ஹீப்ரு - சமஸ்கிருத நட்புறவுக் கழகம்' என்பன போன்ற பெயர்களில் பல்வேறு அமைப்புகளும் இஸ்ரேலின் நலனைப் பேணி பாதுகாத்துள்ளன.

1992-க்கு முன்பிருந்தே மறைமுகமாக சாத்தியப்பட்ட எல்லா வழிகளிலும் இந்தியா, இஸ்ரேலுடன் உறவு கொண்டே வந்துள்ளது.

'பாதுகாப்பு ஒத்துழைப்பு' என்ற அம்சத்தைப் பிரதானமாக ஆட்சியாளர்கள் கூறினாலும், அதற்காக ராஜ்யரீதியான உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற கட்டாயமில்லை என்பதே அரசியல் நோக்கர்களின் கருத்து. காரணம், ஆயுத விற்பனை என்பது இஸ்ரேலின் வருமானத்தில் முக்கிய பங்கு வகிப்பதால், சீனாவைப் போல் இரு தரப்பு வர்த்தக உறவுகளின் அடிப்படையிலேயே இதனைப் பெற்றுக் கொள்ள முடியும் எனக் கூறிகின்றனர்.

இஸ்ரேல் அமெரிக்காவின் மேற்காசியப் பகுதியின் பேட்டை ரௌடியெனில், தெற்காசியப் பேட்டை ரௌடியான இந்தியா அமெரிக்கா எள் என்றால் எண்ணெயாக நிற்கிறது. இஸ்ரேல் பாலஸ்தீனர்களைத் தேசமின்றி துரத்திய ஆக்கிரமிப்பாளன் என்றால், இந்தியாவோ சொந்த தேசிய இனங்களையே நசுக்கி ஒடுக்கும் சிறைக்கூடம். பிற தேசிய இனங்களின் உரிமைப் போராட்டங்களில் ஊடுருவி சீர்குலைக்கவும், ஒடுக்கவும் இஸ்ரேலுக்கு 'மொஸாத்' என்றால், இந்தியாவுக்கு 'ரா'. இரு நாடுகளுமே அரசு பயங்கவாதத்தின் எடுப்பான உதாரணங்கள். ஆனால், இவ்விரு நாடுகளும் இணைந்து 'பயங்கரவாத எதிர்ப்பும்', ''அணு ஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தத்தின் அமெரிக்காவுக்கு எதிரான நிலையுமே' தங்களின் உறவிற்கான அடிப்படை எனக் கூறுவது சர்வதேச உழைக்கும் மக்களை ஏய்ப்பதற்கான முதலை வடிக்கும் கண்ணீர் போன்றதே தவிர வேறில்லை.

● ரஹீம்

படிப்பகம்

Published and owned by R.SHANMUGARAJ, 4, Samiyar Thottam, Alandur Road, Saidapet, Madras - 600 015
Printed by him at EZHIL PRINTS, 38-1, Arcot Road, Madras - 600 024. Editor: R.SHANMUGARAJ

www.padippakam.com

# இதுதான் இன்றைய இந்தியா



இதோ இவர் இரு குழந்தைகளுக்குத் தாயான மலர்மணி. கணவன், ஊர் 'பெரிய' மனிதர்களுக்குப் பயந்து வெளியூரில் வேலை பார்த்துவர, புதுக்கோட்டை மாவட்டம் நெடுவாசல் கிராமத்தில் தனித்து வாழும் இப்பெண்மணியின் குடும்பத்தையே கிராம பஞ்சாயத்து சமூகப் புறக்கணிப்பு செய்து தீர்ப்பளித்துள்ளது. அது மட்டுமின்றி வீடு புகுந்து தாக்கப்பட்டும், முடியைப் பிடித்து இழுத்துச் செல்லப்பட்டும், தாலி அறுக்கப்பட்டும் பஞ்சாயத்தாரின் முன்னிலையிலேயே இம்சித்தும் அவமானப்படுத்தப்பட்டும் உள்ளார் இப்பெண்மணி. கதைகளிலும் திரைப்படங்களிலும் வருவது போன்ற இக்கொடுமைகள் ஏன் அதுவும் ஒரு பெண்மணிக்கு இழைக்கப்படுகிறது? அப்படியென்ன மன்னிக்க முடியாத குற்றம் புரிந்துவிட்டார் இவர்? கள்ளச் சாராயம் காய்ச்சுவதற்கும், விற்பதற்கும், குடிப்பதற்கும் எதிராகத் தனது கிராமத்து மக்களை அதிலும் குறிப்பாகத் தாழ்த்தப்பட்டவர்களை இணைத்துக் கொண்டு போராடியதுதான் இவர் செய்த கொடும் குற்றம்!? மாவட்ட ஆட்சியாளர் தலையிட்டும் கூட தண்டனை விதித்துள்ள கள்ளச் சாராய கும்பலை எதிர்த்து ஒன்றும் செய்ய முடியவில்லை. இங்கு மட்டுமின்றி ஆந்திரா, குஜராத் மாநிலங்களிலும் கள்ளச் சாராயத்திற்கு எதிராகப் போராடத் துவங்கியுள்ள பெண்களுக்கு, எங்கும் ஆதிக்க சக்திகள் இத்தகைய அவமானங்களைத்தான் பரிசாகத் தருகின்றன.



இது 'பார்'களில் காணப்படும் வழக்கமான காட்சி. மதுக்கடைகளுடன் வசதியாக 'பார்'களையும் திறந்துவிட்ட ஜெயா, குடிகாரர்களைத் திருத்துவதற்காக சினிமா எடுத்து பித்தலாட்டம் ஆடினார். சரிந்துவிழும் தனது செல்வாக்கைத் தடுத்து நிறுத்தவும், சாராய அதிபர்களுடன் பேரம் நடத்த வாய்ப்பாகவும் 'பார்'களை மூட உத்தரவிட்டு 'ஸ்டண்ட்' அடித்தார். 'நீதி' மன்றம் மதுக்கடை அதிபர்களுக்குச் சாதகமாக தடையுத்தரவு வழங்கியது. பல்வேறு ஓட்டுக்கட்சி எம்.எல்.ஏ.-க்களின் கள்ளச் சாராய கும்பலின் இரட்சகர்கள்; மதுக்கடை அதிபர்கள். சீமைச் சாராய சாம்ராஜ்ய அதிபர்களான உடையார், விஜய் மல்லய்யா போன்றோர்தான் ஓட்டுக் கட்சிகளின் புரவலர்கள். கலப்பட சீமைச் சாராயமும், கள்ளச் சாராயமும்தான் இக் கட்சிகளுக்கு காமதேனுக்கள். மதுக்கடைகளை திறப்பதும், மூடுவதும் இவர்களின் அரசியல் சித்து விளையாட்டுக்கள்.

ஓட்டுப் பொறுக்கிகள் மதுவை ஒழிப்பதாக பேசிக் கொண்டே சாராய அதிபர்களுடன் சேர்ந்து கொண்டு கபட நாடகமாடுவதோடு சாராயத்திற்கு எதிராகப் போராடுபவர்களை சித்திரவதை - கொடுமைக்குள்ளாக்கும் ஆதிக்க சக்திகளை திமிரோடு அரவணைத்தும் செல்கிறார்கள். இந்த சமூக விரோதிகளை கூண்டோடு நாம் அழித்தொழிப்பது எப்போது?

படிப்பகம்